ஜனவரி 2021
விலை ரூ. 20/–

மலர் : 51 இதழ் : 7

தமிழரசு

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

செய்தி - மக்கள் தொடர்புத்துறை
50
தமிழரசு
1970-2020
பொன்விழா ஆண்டு

ரூ.2500
ரொக்கத்துடன்
பொங்கல்
பரிசுத் தொகுப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 18.11.2020 அன்று, சென்னை, நேரு விளையாட்டு அரங்கில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை சார்பில் நடைபெற்ற 2020–2021ஆம் ஆண்டிற்கான மருத்துவக் கலந்தாய்வில், தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற அரசுப் பள்ளி மாணாக்கர்களுக்கு இளநிலை மருத்துவப் பிரிவுகளில் அரசு ஒதுக்கீடு இடங்களில் 7.5 சதவிகித முன்னிரிமை அடிப்படையில் எம்.பி.பி.எஸ். படிப்பிற்கான சேர்க்கை ஆணைகள் வழங்கும் விழாவில், சேர்க்கை ஆணைகளை பெற்றுக்கொண்ட மாணாக்கர்கள் தங்களது மருத்துவர் கனவினை நனவாக்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்கள்.

தமிழ்நாட்டு மக்களுக்கு வளமான வாழ்வையும், நிலையான வளர்ச்சியையும் தொடர்ந்து வழங்கும் ஆண்டாக இப்புத்தாண்டு மலரட்டும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்
ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி

புத்தாண்டு மலர்கின்ற இந்த இனிய நாளில், எனது அன்பிற்குரிய தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் இதயம் கனிந்த ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தொடர்ந்து திகழ்ந்திடவும், வறுமைக் கோட்டிற்குக் கீழ் எவரும் இல்லை என்ற நிலையினை அடைந்திடவும், பெண்களின் வாழ்வு மேன்மையுறவும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியைப் பின்பற்றி மாண்புமிகு அம்மாவின் அரசும், மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு பல்வேறு வளர்ச்சி மற்றும் மக்கள் நலத்திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருவதால், வேளாண்மை, நீர் மேலாண்மை, பள்ளிக்கல்வி, உயர்க்கல்வி, சுகாதாரம், எரிசக்தி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சமூகநலன் போன்ற அனைத்து துறைகளிலும் சாதனைகள் பல படைத்து, மத்திய அரசின் விருதுகளை தமிழ்நாடு தொடர்ந்து பெற்று வருகிறது.

மக்களின் நல்வாழ்விற்காக மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வரும் எண்ணற்ற நலத்திட்டங்களை அனைவரும் சிறப்பான முறையில் பயன்படுத்தி, தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்வதோடு, வளமும் வலிமையும் மிக்க தமிழ்நாட்டைத் தொடர்ந்து முதன்மை மாநிலமாக திகழச் செய்திட அனைவரும் ஒற்றுமையுடன் உழைத்திடுவோம்.

மலரும் இப்புத்தாண்டு தமிழ்நாட்டு மக்களுக்கு வளமான வாழ்வையும், நிலையான வளர்ச்சியையும் தொடர்ந்து வழங்கும் ஆண்டாக மலரட்டும் என்று வாழ்த்தி, தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை எனது இனிய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

K. பழனிசாமி
தமிழ்நாடு முதலமைச்சர்

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2052
சார்வரி வருடம் : மார்கழி – தை
ஜனவரி 2021
மலர் : 51 விலை ரூ.20 இதழ் : 7

ஆசிரியர் - வெளியிடுபவர்
தெ. பாஸ்கர பாண்டியன் இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
சீ. ராஜன்
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
எஸ். சீதாலட்சுமி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
சு. கமலா
ச. மஞ்சுளா
பெ. சதீஷ்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
அ. மதன்
போ. முத்துக்குமார்

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

வடிவமைப்பாளர்
கோ. முரளி கிருஷ்ணன்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542221 / 22542224
மின்னஞ்சல் : tamilarasujournal@gmail.com
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தாத் தொகையினை நேரடியாக செலுத்தலாம்.

“மருத்துவமனைகள் இருந்தால் மட்டும் போதாது, அந்த மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவதற்கான உயர்தர கருவிகளையும், அம்மாவின் அரசு வழங்கி, ஏழை, எளிய மக்களுக்கு தனியார் மருத்துவமனையில் கொடுக்கின்ற சிகிச்சையைவிட உயர்தர சிகிச்சையை நம் மருத்துவர்கள் வழங்கி வருகின்றனர்.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்

இந்த இதழில்...

தமிழ்நாடு முழுவதும் ஏழை, எளிய மக்கள் அதிகம் வசிக்கும் இடங்களைக் கண்டறிந்து, அந்தப் பகுதியிலேயே சிகிச்சை பெற, 2,000 “முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்”
*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 14.12.2020 அன்று, பெருநகர சென்னை மாநகராட்சியின், இராயபுரம் மண்டலம், சேக் மேஸ்திரி தெரு, தண்டையார்பேட்டை மண்டலம், வியாசர்பாடி, எம்.பி.எம். தெரு மற்றும் தேனாம்பேட்டை மண்டலம், மயிலாப்பூர், கச்சேரி சாலை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள “முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்கை” துவக்கி வைத்து ஆற்றிய உரை* 7

மாற்றுத்திறனாளிகளின் நலனிற்காக சிறந்த சேவை புரிந்தவர்களுக்கு விருதுகள்
*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி**அவர்கள் 21.12.2020 அன்று தலைமைச் செயலகத்தில், மாற்றுத்திறனாளிகளின் நலனிற்காக சிறப்பாக பணியாற்றிய 35 விருதாளர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்தார்கள்* 31

நாகப்பட்டினம் மாவட்டத்தைப் பிரித்து மயிலாடுதுறையை தலைமையிடமாகக் கொண்டு புதியதாக மயிலாடுதுறை மாவட்டம் தோற்றுவிப்பு
*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 28.12.2020 அன்று தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக்காட்சி மூலம் தொடங்கி வைத்தார்கள்* 42

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்
21.12.2020 அன்று தலைமைச் செயலகத்தில்,
தமிழர் திருநாளாம், தைப் பொங்கல் திருநாளையொட்டி,
அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களின் குடும்பங்கள்
பயன்பெறும் வகையில், தலா ரூ.2,500 ரொக்கத்துடன்,
சிறப்பு பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் விலையில்லா வேட்டி,
சேலை வழங்கும் திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள்.

தைப் பொங்கல் திருநாளையொட்டி அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு, ரூ.2,500 ரொக்கத்துடன், சிறப்பு பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 21.12.2020 அன்று தலைமைச் செயலகத்தில், ரூ.2,500 ரொக்கத்துடன், பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை துவக்கி வைக்கும் அடையாளமாக 9 குடும்பங்களுக்கு வழங்கி, துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 21.12.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் திருநாளையொட்டி அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களின் குடும்பங்கள் பயன்பெறும் வகையில், தலா 2,500 ரூபாய் ரொக்கத்துடன், ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, 20 கிராம் முந்திரி, 20 கிராம் உலர்ந்த திராட்சை, 5 கிராம் ஏலக்காய் மற்றும் ஒரு முழு நீளக் கரும்பு ஆகியவை அடங்கிய சிறப்பு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டம் மற்றும் 1 கோடியே 80 இலட்சம் விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டம் ஆகிய திட்டங்களை துவக்கி வைக்கும் அடையாளமாக 9 குடும்பங்களுக்கு சிறப்பு பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் விலையில்லா வேட்டி மற்றும் சேலை வழங்கி, துவக்கி வைத்தார்கள்.

“தமிழர்களின் திருநாளாம் தைப் பொங்கலை சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசு பொங்கல் பரிசு அறிவித்து வழங்கி வருகிறது. இந்த ஆண்டை பொறுத்தவரை, கொரோனா வைரஸ் தொற்று பரவல் ஏற்பட்டு பலருக்கு வேலைவாய்ப்பு இல்லாத சூழ்நிலை, டெல்டா பகுதிகளிலே புயலினால் கடுமையான மழை, அங்கே தொழிலாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு முழுவதும் கொரோனாவால் வேலை இழந்திருக்கின்ற சூழ்நிலை, புயலால், கன மழையால் தொழிலாளர்கள்

வேலை இழந்திருக்கின்ற சூழ்நிலை ஆகிய இரண்டும் இந்த ஆண்டை பாதித்திருக்கிறது. இதையெல்லாம் அரசு கருத்தில் கொண்டு, தைப் பொங்கலை தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை தமிழர்களும் சிறப்பாக கொண்டாட வேண்டும் என்பதற்காக தமிழகத்தில் உள்ள 2 கோடியே 6 இலட்சம் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் ரூபாய் 2,500/– வழங்கப்படும். 2021ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் தேதியிலிருந்து இந்த திட்டம் அமல்படுத்தப்படும். அத்துடன், ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு துண்டு கரும்புக்கு பதிலாக ஒரு முழு கரும்பு, 20 கிராம் உலர் திராட்சை, 20 கிராம் முந்திரி, 5 கிராம் ஏலக்காய், ஒரு நல்ல துணிப்பை ஆகியவை கொடுக்கப்படும்'' என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 19.12.2020 அன்று சேலம் மாவட்டம், எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், இருப்பாளியில் நடைபெற்ற அரசு விழாவில் அறிவித்தார்கள்.

அதன்படி, தைப் பொங்கல் திருநாளை தமிழக மக்கள் சிறப்பாக கொண்டாடும் வகையில், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களின் குடும்பங்கள் பயன்பெறும் வகையில், குடும்பம் ஒன்றிற்கு 2,500 ரூபாய் ரொக்கத்துடன், ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, 20 கிராம் முந்திரி, 20 கிராம் உலர்ந்த திராட்சை, 5 கிராம் ஏலக்காய் மற்றும் ஒரு முழு நீளக் கரும்பு அடங்கிய சிறப்பு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டத்தை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 9 அரிசி குடும்ப அட்டைதாரர்களின் குடும்பங்களுக்கு வழங்கி, துவக்கி வைத்தார்கள். இத்திட்டத்திற்காக தமிழ்நாடு அரசு 5,604.84 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

கைத்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு வழங்குவதற்காகவும், அதன்மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும், 1983ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களால் இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது. இதன்படி, ஒவ்வொரு ஆண்டும் தமிழர் திருநாளான பொங்கல் திருநாளையொட்டி விலையில்லா வேட்டிகள் மற்றும் சேலைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் ஏழை, எளிய மக்கள் பயன்பெறுவதோடு மட்டுமல்லாமல், கைத்தறி, விசைத்தறி தொழில்களில் ஈடுபட்டுள்ளோருக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. அந்த வகையில், 2021ஆம் ஆண்டு 484 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் 1 கோடியே 80 இலட்சம் வேட்டிகள் மற்றும் சேலைகள் வழங்கிடும் திட்டத்தை துவக்கி வைக்கும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 9 குடும்பங்களுக்கு விலையில்லா வேட்டிகள் மற்றும் சேலைகள் வழங்கி திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.

தைப்பூசத் திருநாளை பொது விடுமுறை நாளாக அறிவிப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்
அறிக்கை – 05.01.2021

தமிழ்க் கடவுளாகிய முருகப்பெருமானைச் சிறப்பித்து தமிழ்நாட்டில் கொண்டாடப்படும் திருவிழாக்களில் மிக முக்கியமானது தைப்பூசத் திருவிழா. இவ்விழா தமிழ்நாட்டில் மட்டுமின்றி, கேரள மாநிலத்திலும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, மொரீஷியஸ் மற்றும் இந்தோனேஷியா போன்ற நாடுகளிலும் தைப்பூசத் திருவிழா வெகு விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

பல்வேறு மாவட்டங்களுக்கு நான் சுற்றுப்பயணம் சென்றபோது, இலங்கை மற்றும் மொரீஷியஸ் நாடுகளில் தைப்பூசத் திருவிழாவிற்கு பொது விடுமுறை அளிப்பது போன்று தமிழ்நாட்டிலும் தைப்பூசத் திருவிழாவிற்கு பொது விடுமுறை அளிக்க வேண்டும் என பொதுமக்கள் என்னிடம் கோரிக்கை விடுத்தனர். இக்கோரிக்கையை பரிசீலித்து, வரும் ஜனவரி 28ஆம் நாள் அன்று கொண்டாடப்படும் தைப்பூசத் திருவிழாவை, பொது விடுமுறை நாளாக அறிவிக்கவும், இனிவரும் ஆண்டுகளிலும் தைப்பூசத் திருவிழா நாளை, பொது விடுமுறை பட்டியலில் சேர்க்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

தமிழ்நாடு முழுவதும் ஏழை, எளிய மக்கள் அதிகம் வசிக்கும் இடங்களைக் கண்டறிந்து, அந்தப் பகுதியிலேயே சிகிச்சை பெற, 2,000 "முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 14.12.2020 அன்று, பெருநகர சென்னை மாநகராட்சியின், இராயபுரம் மண்டலம், சேக் மேஸ்திரி தெரு, தண்டையார்பேட்டை மண்டலம், வியாசர்பாடி, எம்.பி.எம். தெரு மற்றும் தேனாம்பேட்டை மண்டலம், மயிலாப்பூர், கச்சேரி சாலை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள "முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்கை" துவக்கி வைத்து ஆற்றிய உரை.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

மாண்புமிகு அம்மாவும், அம்மாவைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசும் கடைக்கோடி மக்களுக்கும் தரமான சுகாதார சேவைகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தியும், பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தியும் வருகின்றது. மாண்புமிகு அம்மாவின் அரசால், மாண்புமிகு அம்மா இருக்கும்போதும், அம்மாவின் மறைவிற்குப் பிறகும், தமிழகம் முழுவதும் கிராமப்புறங்களில் இருக்கின்ற ஏழை, எளிய மக்களுக்கு உரிய சிகிச்சை கிடைக்க வேண்டுமென்பதற்காக 254 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. 30 படுக்கைகள், ஸ்கேன் போன்ற வசதிகளுடன் 166 ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிலை உயர்த்தப்பட்டுள்ளன. இதனால் அந்தப் பகுதிகளில் இருக்கின்ற மக்கள் அங்கேயே சிகிச்சை பெறக்கூடிய ஒரு சூழ்நிலையை அம்மாவின் அரசு உருவாக்கித் தந்திருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், பொதுமக்களிடத்திலிருந்து வந்த கோரிக்கைகளின் அடிப்படையில் 52 அரசு வட்டம்சாரா மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள், தாலுகா அரசு மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. ரூ.219 கோடி மதிப்பீட்டில் 16.17 இலட்சம் குழந்தைகளுக்கு அம்மா குழந்தைகள் நலப் பெட்டகங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அம்மா ஆரோக்கியத் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூ.4,000 வழங்கும் திட்டம், 104 மருத்துவ சேவை மையம் மூலம் 9.69 இலட்சம் நபர்களுக்கு மருத்துவ ஆலோசனைகள் மற்றும் 108 அவசரகால ஆம்புலன்ஸ் திட்டத்தில் 902 புதிய வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. 11.26 இலட்சம் கர்ப்பிணித் தாய்மார்கள் உட்பட 46.8 இலட்சம் நபர்கள், புதிய ஆம்புலன்ஸ் வழங்கப்பட்டதன் மூலமாக பயனடைந்திருக்கின்றனர். மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருச்சி அரசு மருத்துவக் கல்லூரிகளில் தலா ரூ.150 கோடி மதிப்பீட்டில் விபத்து சிகிச்சை மையங்களுடன் கூடிய உயர் சிறப்பு மருத்துவமனைகள்

உருவாக்கப்பட்டிருக்கின்றன. நடமாடும் மருத்துவமனைத் திட்டத்தில் 7.62 இலட்சம் முகாம்கள் நடைபெற்று, அதில் ரூ.6.30 கோடி பொதுமக்கள் கலந்துகொண்டு பயன்பெற்றிருக்கின்றார்கள். அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம் மற்றும் அம்மா மகளிர் முழு உடல் பரிசோதனைத் திட்டத்தில் 67,077 நபர்களுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு, புற்றுநோய்க்கு உயரிய சிகிச்சை அளிக்கக்கூடிய வகையில் ரூ.190 கோடி மதிப்பீட்டில் 10 அரசு மருத்துவமனைகளில் Linear Accelerator என்ற உயர் தொழில்நுட்பக் கருவி நிறுவி இருக்கின்றது. தனியார் மருத்துவமனைகளில் இருக்கும் வசதிகளைவிட கூடுதலாக வசதிகளை அரசு மருத்துவமனைகளில் நாங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். சென்னை, அடையார் புற்றுநோய் மையத்தை ரூ.120 கோடி மதிப்பீட்டில் மாநில அளவில் புற்றுநோய்க்கு சிறப்பான சிகிச்சை அளிக்கும் ஒப்புயர்வு மையமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஏழை, எளியோருக்கு சிறந்த சிகிச்சை செய்யக்கூடிய சூழ்நிலையை அம்மாவின் அரசு உருவாக்கித் தந்திருக்கின்றது. ரூ.59 கோடி மதிப்பீட்டில் நான்கு புற்றுநோய் சிகிச்சை மண்டலங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ரூ.300 கோடி மதிப்பீட்டில் அரசு மருத்துவமனைகளுக்கு 56 சி.டி. ஸ்கேன்கள், 22 எம்.ஆர்.ஐ. ஸ்கேன்கள், 18 கேத்லேப் மற்றும் 530 டயாலிசிஸ் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆகவே, **மருத்துவமனைகள் இருந்தால் மட்டும் போதாது, அந்த மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவதற்கான உயர்தர கருவிகளையும், அம்மாவின் அரசு வழங்கி, ஏழை, எளிய மக்களுக்கு தனியார் மருத்துவமனையில் கொடுக்கின்ற சிகிச்சையைவிட உயர்தர சிகிச்சையை நம் மருத்துவர்கள் வழங்கி வருகின்றனர்.** மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் 9,726 மருத்துவர்கள், 15,659 செவிலியர்கள் உட்பட 31,868 நபர்கள் நியமனம் செய்யப்பட்டு, மக்களுக்குத் தேவையான சிகிச்சை செய்வதற்காக மாண்புமிகு அம்மாவின் அரசு மருத்துவர்கள், மருத்துவ செவிலியர்கள், மருத்துவ பிற பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். ரூ.96.31 கோடி மதிப்பீட்டில் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக் கல்லூரியில் உலகத்தரத்தில் சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் மையம் அமைக்கப்படுகின்றது. ரூ.307 கோடி மதிப்பீட்டில் 15 மாவட்ட மற்றும் துணை மாவட்ட மருத்துவமனைகள், கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தாய்சேய் ஒப்புயர்வு மையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ரூ.130.50 கோடி மதிப்பீட்டில் 11 சீமாங்க் மையங்கள் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ரூ.3,995 கோடி மதிப்பீட்டில் 11 மாவட்டங்களில் 11 அரசு மருத்துவக் கல்லூரிகள் புதியதாக உருவாக்கி, வரலாற்றுச் சாதனையைப் படைத்த அரசு அம்மாவின் அரசு. அதன் மூலமாக 1,650 மாணாக்கர்கள் புதிதாக மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்து படிக்கக்கூடிய சூழ்நிலையை அம்மாவின் அரசு உருவாக்கித் தந்திருக்கின்றது.

2011ஆம் ஆண்டில் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்கின்ற வரை, 1,945 மருத்துவ இடங்கள்தான் இருந்தன. மாண்புமிகு அம்மா அவர்கள் 2016 வரை தமிழகத்தின் முதலமைச்சராக

"ரூ.3,995 கோடி மதிப்பீட்டில் 11 மாவட்டங்களில், 11 அரசு மருத்துவக் கல்லூரிகள் புதிதாக உருவாக்கி, வரலாற்றுச் சாதனையைப் படைத்த அரசு அம்மாவின் அரசு. அதன் மூலமாக, 1,650 மாணாக்கர்கள் புதிதாக மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்து படிக்கக்கூடிய சூழ்நிலையை அம்மாவின் அரசு உருவாக்கித் தந்திருக்கின்றது."

இருந்த காலகட்டத்தில், 3,060 இடங்களாக உயர்த்தினார்கள். மாண்புமிகு அம்மாவின் அரசு 11 புதிய மருத்துவக் கல்லூரிகளுடன் கூடிய மருத்துவமனைகளை உருவாக்கியதன் மூலமாக 1,650 புதிய இடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, இப்போது 5,300 நபர்கள் மருத்துவப் படிப்பில் சேர்ந்து படிக்கக்கூடிய சூழ்நிலையை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கின்றோம்.

அரசு பள்ளியில் படித்த ஏழை எளிய மாணவர்கள் மருத்துவப் படிப்பு படிப்பதற்கு உள்ஒதுக்கீடாக 7.5 சதவிகிதம் ஒதுக்கீடு வழங்கிய அரசு அம்மாவின் அரசு. ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்த மாணவ, மாணவியரும், மருத்துவப் படிப்பு படிப்பது என்பது ஒரு எட்டாக்கனியாக இருந்த நிலைமாறி, அந்த ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்த மாணவ, மாணவியரும் மருத்துவப் படிப்பு படிக்கின்ற சூழ்நிலையை எங்களுடைய அரசு உருவாக்கித் தந்திருக்கின்றது. நடப்பாண்டில் அரசுப் பள்ளிகளில் பயின்று நீட் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணாக்கர்களுக்கு 313 MBBS இடங்கள் கிடைத்துள்ளது. அரசுப் பள்ளியிலே படிக்கின்ற 41 சதவிகிதம் மாணவ, மாணவியர்களில், கடந்த ஆண்டு 6 நபர்களுக்குத்தான் மருத்துவப் படிப்பிற்கான இடம் கிடைத்த, அந்த நிலை மாறி, அம்மாவின் அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, 313 நபர்களுக்கு மருத்துவம் படிப்பதற்கு இடம் கிடைத்ததென்று சொன்னால், இது ஒரு வரலாற்றுச் சாதனை என்பதை நினைவுகூர கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமல்ல, இவர்களுக்கு மருத்துவக் கல்விக் கட்டணம் செலுத்த முடியாத நிலை உள்ளதால் அவர்களுக்கு உதவி செய்கின்ற வகையில் ரூ.16 கோடி சுழல் நிதி ஏற்படுத்தி அந்தக் கட்டணத்தையும் அம்மாவின் அரசு செலுத்துகின்றது.

முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் சிகிச்சை பெற ரூபாய் 2 இலட்சமாக இருந்ததை 5 இலட்சமாக உயர்த்திய அரசும் அம்மாவின் அரசுதான். உடல் உறுப்பு தானத்தில் தமிழகம் தேசிய அளவில் 6ஆவது முறையாக முதலிடம் பெற்று, தேசிய விருதைப் பெற்றதும் அம்மாவின் அரசுதான்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் கொரோனா தடுப்பு குறித்து காணொலிக் காட்சி மூலம், இந்தியா முழுவதும் உள்ள முதலமைச்சர்களுடனான கூட்டத்தைக் கூட்டி, ஒவ்வொரு மாநிலத்திலும், கொரோனா வைரஸ் நோயை கட்டுப்படுத்த எந்த அளவிற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றீர்கள், எந்த அளவுக்கு தொற்று குறைந்திருக்கின்றது போன்ற செய்தியை கேட்டறிந்தார்கள். அப்போது **மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், இன்றைக்கு RT-PCR Test அதிகமாக எடுக்கின்ற ஒரே மாநிலம் தமிழ்நாடு என்று குறிப்பிட்டார். அதனால் தமிழகத்தில் கொரோனா வைரஸ் பரவல்**

“ரூ.59 கோடி மதிப்பீட்டில் நான்கு புற்றுநோய் சிகிச்சை மண்டலங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ரூ.300 கோடி மதிப்பீட்டில் அரசு மருத்துவமனைகளுக்கு 56 சி.டி. ஸ்கேன்கள், 22 எம்.ஆர்.ஐ. ஸ்கேன்கள், 18 கேத்லேப் மற்றும் 530 டயாலிசிஸ் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.”

குறைந்து கொண்டிருக்கிறது, அதற்காக தமிழ்நாடு அரசை பாராட்டுகின்றேன் என்று பாராட்டுச் சான்றிதழும் கொடுத்தார். அதுமட்டுமல்ல, அவர்கள் காணொலிக் காட்சி மூலம் பேசுகின்றபோது, தமிழ்நாட்டைப் பின்பற்றி மற்ற மாநிலங்கள் செயல்பட வேண்டுமென்ற செய்தியையும் குறிப்பிட்டார்கள். அந்த அளவுக்கு மாண்புமிகு அம்மாவின் அரசு கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு கடுமையான நடவடிக்கைகளை எடுத்தது, அந்த முயற்சி நல்ல பலனைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. தற்போது படிப்படியாக கொரோனா பரவல் குறைந்து மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுடைய பாராட்டை நாம் பெற்றிருக்கின்றோம். அதற்காக பாடுபட்ட நம் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு, அவர்களுக்கு உறுதுணையாக நின்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த துறை அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தற்போது ஒரு புதிய முயற்சியாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லாத, ஏழை, எளிய மக்கள் அதிகம் வசிக்கும் இடங்களைக் கண்டறிந்து, சாதாரண காய்ச்சல் போன்ற நோய்களுக்கு உடனடியாக அந்தப் பகுதியிலேயே சிகிச்சை பெறக்கூடிய அளவிற்கு **தமிழ்நாடு முழுவதும், ஒரு மருத்துவர், ஒரு செவிலியர் மற்றும் ஒரு உதவியாளருடன் 2,000 “முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்குகள்” இன்றைக்கு துவங்கப்பட்டிருக்கின்றது** என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அம்மா மினி கிளினிக்குகள் மூலமாக ஏழை, எளிய மக்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அங்கேயே அவர்கள் தங்கள் உடலில் ஏற்படுகின்ற நோய்களுக்கு சிகிச்சை பெறக்கூடிய சூழ்நிலையை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கின்றோம். இது வரலாற்றுச் சாதனையாகும்.

பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா வழியில் செயல்படுகின்ற அரசு என்பதை நாங்கள் இந்த நேரத்தில் நிரூபித்துக்காட்டிக் கொண்டிருக்கின்றோம்.

“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” என்று சொல்வார்கள். எவ்வளவுதான் செல்வம் இருந்தாலும், நோய் வந்துவிட்டால் செல்வத்தை அனுபவிக்க முடியாது. அப்படிப்பட்ட நோயற்ற வாழ்வை தமிழக மக்களுக்கு உருவாக்கித் தரவேண்டும், அதுவும் குறிப்பாக **ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்த மக்களுக்கு நோய் ஏற்படுகின்றபோது தனியார் மருத்துவமனைக்குச் சென்றால், 100 அல்லது 200 ரூபாய் செலவு செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அந்த சுமைகூட இருக்கக்கூடாது என்பதற்காகத் தான் அம்மாவின் அரசு, குறிப்பாக ஏழை, எளிய மக்கள் வசிக்கின்ற பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அந்தப் பகுதியிலேயே அம்மா மினி கிளினிக்குகளை உருவாக்கி, அப்பகுதி மக்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சையை எங்களுடைய அரசு தொடர்ந்து வழங்கும் என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.**

அண்மையில் நிவர் புயல், புரெவி புயல் என்று இரண்டு புயல் வந்தது. இரண்டிலுமே மக்கள் பாதிக்கப்பட்டார்கள். அப்படி பாதிக்கப்பட்டபோது, சென்னை மாநகர மக்களுக்கு 06.12.2020 முதல் 13.12.2020 வரை மூன்று வேளையும் 860 இடங்களில் விலையில்லா உணவை வழங்கியது எங்கள் அரசு. இதுவரை 1 கோடியே 35 இலட்சம் நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது. பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், இதயதெய்வம்

“முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் சிகிச்சை பெற ரூ.2 இலட்சமாக இருந்ததை ரூ.5 இலட்சமாக உயர்த்திய அரசும் அம்மாவின் அரசுதான். உடல் உறுப்பு தானத்தில் தமிழகம், தேசிய அளவில் 6வது முறையாக முதலிடம் பெற்று, தேசிய விருதைப் பெற்றதும் அம்மாவின் அரசுதான்.”

புரட்சித்தலைவி அம்மா ஆகிய இருபெரும் தலைவர்களும், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்று பேரறிஞர் அண்ணா அவர்களும் சொன்னதைப் போல, அந்த தலைவர்களின் வழியில் நடைபெறுகின்ற ஒரே அரசு அம்மாவின் அரசு என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்த அற்புதமானத் திட்டத்தை மிக வேகமாக, துரிதமாக நல்ல முறையில் செயல்படுவதற்கு உறுதுணையாக விளங்கிய மரியாதைக்குரிய மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்களுக்கும், அவருக்குத் துணைநின்ற சுகாதாரத் துறை செயலாளர், அந்தத் துறையைச் சேர்ந்த அலுவலர்களுக்கும், வருகை புரிந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற, எனக்கு முன்னாலே சிறப்பாக உரை நிகழ்த்தி நல்லபல செய்திகளை நாட்டு மக்களுக்கு வழங்கிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் இந்த நிகழ்ச்சியில் பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் திரு.ஜெயக்குமார் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் திரு.வேலுமணி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் டாக்டர் சரோஜா அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.விஜயபாஸ்கர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய திரு.பொன்னையன் அவர்களுக்கும், மரியாதைக்குரிய திருமதி வளர்மதி அவர்களுக்கும், நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கும் மற்றும் இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கும் மருத்துவத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும், பல்வேறு துறையைச் சேர்ந்த அலுவலர்களுக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும், பெரியோர்களுக்கும், தாய்மார்களுக்கும், மருத்துவர்களுக்கும், செவிலியர்களுக்கும், பத்திரிக்கை மற்றும் ஊடக நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் அறிக்கை – 21.12.2020

விவசாயிகளின் பெருந்தலைவர் திரு. சி. நாராயணசாமி நாயுடு அவர்கள் தனது பேச்சு, செயல் மற்றும் தலைமைப் பண்புகளால் தமிழ்நாடு விவசாயிகளை ஒருங்கிணைத்து விவசாயிகளின் ஒப்பற்ற தலைவராகத் திகழ்ந்தார்.

1973ஆம் ஆண்டில் தமிழக விவசாயிகள் சங்கத்தைத் தொடங்கி அதன் தலைவராகப் பொறுப்பேற்று, தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டு, விவசாய மாநாடுகளை நடத்தி விவசாயிகளின் உரிமைகளுக்காக பாடுபட்டார்.

தன் வாழ்நாள் முழுவதும் விவசாயிகளுக்காகப் பாடுபட்ட அன்னார் அவர்கள், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் நடந்த விவசாயிகள் பொதுக்கூட்டத்தில் பேசிவிட்டு ஓய்வெடுத்தபோதுதான் தன் இன்னுயிரை நீத்தார்.

அத்தகைய பெருமகனாரின் நினைவு நாளான 21.12.2020 அன்று அவரைப் போற்றுவதில், நாம் எல்லாம் பெருமை அடைகிறோம்.

திரு.சி.நாராயணசாமி நாயுடு அவர்கள் நமது விவசாயிகளுக்கு, ஆற்றிய சிறந்த சேவையை போற்றிப் பாராட்டும் வகையில், குடியரசு தின விழாவில், திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தைக் கடைப்பிடித்து, அதிக நெல் மகசூல் பெற்றமைக்காக வழங்கப்படும் விருது, இந்த ஆண்டு முதல் 'திரு. சி. நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தித் திறனுக்கான விருது' என்ற பெயரில் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவள்ளூர் மாவட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஏழை, எளிய மக்களுக்கு நோயற்ற வாழ்வை உருவாக்கித் தர வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்கை உருவாக்கித் தந்துள்ளார்கள்

முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்

இந்திய அளவில் வேறு எந்தவொரு மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு நோய்த் தொற்று பாதிப்பிலிருந்து தற்காத்துக்கொள்ள, மாநில அளவில் 2,000 எண்ணிக்கையில் அம்மா மினி கிளினிக்குகளும், அதில் மாவட்டத்திற்கு 53 எண்ணிக்கையில் அம்மா மினி கிளினிக் என்ற சிறப்பான திட்டத்தை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்களுக்கு, திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த பொதுமக்கள் தங்களது மனமார்ந்த நன்றியை தெரிவிக்கின்றனர்.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழை, எளிய மக்கள் தரமான சுகாதார சேவைகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தினார்கள். கிராமப்புறங்களில் இருக்கின்ற ஏழை, எளிய மக்கள் உரிய சிகிச்சை கிடைக்க வேண்டும் என்பதற்காக புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டு, படுக்கைகள், ஸ்கேன் போன்ற வசதிகள் நிலை உயர்த்தப்பட்டன. மேலும், அரசு வட்டம் சாரா மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசு மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்பட்டது. அம்மா குழந்தைகள் நலப் பெட்டகம், அம்மா ஆரோக்கியத் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம், மருத்துவ சேவை மையம், 108 அவசரகால ஆம்புலன்ஸ், விபத்து சிகிச்சை மையங்களுடன் உயர் சிறப்பு மருத்துவமனைகள், நடமாடும் மருத்துவமனை, அம்மா முழு உடல் பரிசோதனை திட்டம், அம்மா மகளிர் முழு உடல் பரிசோதனை திட்டம் போன்ற திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2020ஆம் ஆண்டில் 11 அரசு மருத்துவக் கல்லூரிகள் புதியதாக உருவாக்கப்பட்டு சுமார் 1,650 மருத்துவர்கள்

புதியதாக மருத்துவ கல்லூரியில் சேர்ந்து படிக்க, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அரசு மருத்துவக் கல்லூரிகள் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி துவக்கி வைத்ததைத் தொடர்ந்து, பணிகள் நடைபெற்று வருகிறது.

அரசுப் பள்ளியில் படித்த ஏழை, எளிய மாணவர்கள் மருத்துவப் படிப்பு படிக்க உள் ஒதுக்கீடாக 7.5 சதவிகிதம் ஒதுக்கீடு வழங்கி, ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்த மாணவ, மாணவியரும் மருத்துவம் படிக்கும் சூழ்நிலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கியுள்ளார்கள். **முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டு திட்டம் 5 இலட்சமாக உயர்வு, உடல் உறுப்பு தானத்தில் தேசிய அளவில் முதலிடம்,** கொரோனா தடுப்பு குறித்த காணொலிக் காட்சி மூலம், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் RT-PCR Test அதிகமாக எடுக்கின்ற ஒரே மாநிலம் தமிழ்நாடு என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு புகழாரம். கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் தமிழ்நாட்டினை பின்பற்றி பிற மாநிலங்கள் செயல்பட வேண்டும் என்பது போன்ற சிறப்பான பாராட்டுக்களையும், செயல்பாடுகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்பாக செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தொடர்ந்து கடந்த 14.12.2020 அன்று தமிழ்நாடு முழுவதும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர் மற்றும் ஒரு உதவியாளருடன் கூடிய 2,000 முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்குகள் தலைமைச் செயலகத்தில் துவக்கி வைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, திருவள்ளூர் மாவட்டத்தில் ஏழை, எளிய மக்கள் அதிகம் வசிக்கின்ற பகுதிகளை தேர்ந்தெடுத்து, அங்கேயே அவர்கள் தங்கள் உடலில் ஏற்படுகின்ற நோய்களுக்கு சிகிச்சை பெறக் கூடிய சூழ்நிலையை உருவாக்கும் வகையில், 53 எண்ணிக்கையில் முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்குகள் துவக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் 21.12.2020, 26.12.2020 மற்றும் 30.12.2020 ஆகிய நாட்களில் மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் முதற்கட்டமாக முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்குகளை திறந்து வைத்து, பார்வையிட்டு, கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார்கள்.

முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்கில் ஒரு **மருத்துவர், ஒரு செவிலியர் மற்றும் ஒரு உதவியாளருடன் செயல்படும். சளி, காய்ச்சல், இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் உள்ளிட்ட நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு நோயாளிகளுக்கு தேவையான மருந்துகள் உடனடியாக வழங்கப்படும். இந்த அம்மா மினி கிளினிக்குகள் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில், காலை 8 மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் 8 மணி வரையிலும், ஊரகப்பகுதிகளில் காலை 8 மணி முதல் 12 மணிவரையிலும், மாலை 4 மணி முதல் 7 மணி வரையிலும் செயல்படும். இந்த அம்மா மினி கிளினிக் வாரத்தில் 6 நாட்களும் செயல்படும். சனிக்கிழமை அன்று விடுமுறை நாளாகும்.**

அம்மா மினி கிளினிக்கில், சளி, இருமல் மற்றும் காய்ச்சல், தலைவலி, இரத்த அழுத்தம், சர்க்கரை பரிசோதனை, ஹீமோக்குளோபின், சிறுநீர் பரிசோதனை உட்பட பல்வேறு அடிப்படை சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும். மேலும், உடலில் ஆக்சிஜன் அளவை கணக்கிடுவதற்காக ஆக்ஸிமீட்டர் கருவி, உடல் வெப்பநிலையை கண்டறியும் தெர்மாமீட்டர் உட்பட அடிப்படை மருத்துவ உபகரணங்கள் வைக்கப்பட்டுள்ளது. நோயாளிகளுக்கு உயர் சிகிச்சை தேவைப்படும்போது 108 ஆம்புலன்ஸ் மூலம் அருகில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு பரிந்துரை செய்யப்படுவார்கள்.

மாவட்டத்தில் 53 அம்மா மினி கிளினிக்குகளில் முதற்கட்டமாக திருவள்ளூர் மற்றும் பூவிருந்தவல்லி சுகாதார மாவட்டங்களில் 18 எண்ணிக்கையில் முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்குகள் துவங்கப்பட அனுமதிக்கப்பட்டு தற்பொழுது 17 எண்ணிக்கையில் திறந்து வைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் மூலம் பயனடைந்த திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஊராட்சி ஒன்றியம், திம்மபூபாலபுரம் ஊராட்சி, ஒட்டேரி கிராமத்தைச் சேர்ந்த திருமதி நதியா க/பெ. கோபால், வயது 25 கூறுகையில், “நான் மாதாந்திர பரிசோதனைக்காக சுமார் 15 கி.மீ. தூரம் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று வந்தேன். ஆனால், தற்பொழுது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எங்கள் கிராமத்திற்கு அருகிலேயே அம்மா மினி கிளினிக் திறக்க உத்தரவிட்டுள்ளார்கள். இது என்னைப் போன்று கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் வயதானவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக உள்ளது. வீட்டில் யாரும் துணை இல்லாத பட்சத்தில் சுயமாக என்னால் யாருடைய துணையுமின்றி தனியாக மாத பரிசோதனைக்கு சென்று வர முடிகிறது.

நதியா

அம்மா மினி கிளினிக்கில் உள்ள மருத்துவர், செவிலியர்கள் பரிசோதனை செய்து கொள்வதற்கு உதவியாக உள்ளனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் சார்பாகவும், என் குடும்பத்தினர் சார்பாகவும், என் கிராம மக்கள் சார்பாகவும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.''

முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் மூலம் பயன்பெற்ற பூண்டி ஊராட்சி ஒன்றியம், திம்மபூபாலபுரம் ஊராட்சியைச் சேர்ந்த திருமதி சம்பூரணம், க/பெ. சென்னராமன், வயது 55 அவர்கள் கூறுகையில், ''நான் திம்மபூபாலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனது கணவர் விவசாய பணிகளை கவனித்து வருகிறார். எனக்கு இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரைக்கான அறிகுறிகள் இருந்த நிலையில், அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது அரசு மருத்துவமனைக்கு சென்று

சம்பூரணம்

மருந்து மாத்திரைகளை வாங்கி வந்தேன். அவ்வாறு செல்லும்போது நீண்ட தூரம் போய் மருந்து, மாத்திரைகள் வாங்கி வருவதால் உடல் சோர்வு, அலைச்சல் ஆகியவை ஏற்படும் நிலை இருந்தது. ஆனால், தற்பொழுது எங்கள் கிராமம் அருகிலேயே அம்மா மினி கிளினிக் துவங்கப்பட்டுள்ளதால் வயதான அனைவரும் எளிதில் மருத்துவர்களை அணுகி சிகிச்சை பெற்றுக்கொள்ள மிகுந்த பயனுள்ளதாக உள்ளது. முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்கினை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னை போன்ற முதியோர்கள், வயதானவர்கள் உள்ளிட்டோர் மனதார நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.''

அம்மா மினி கிளினிக் வாயிலாக பயனடைந்த திருமதி நாகம்மா, க/பெ. புருஷோத்தம்ம ரெட்டி, வயது – 69 கூறுகையில், ''நான் திம்மபூபாலபுரம் ஊராட்சியில் வசித்து வருகிறேன். மகன்களுக்கு திருமணம் முடிந்து விட்டது. எனது கணவர் இறந்து ஒரு வருடம் ஆகி விட்டது. எனக்கு அரசு வழங்கும் முதியோர் ஓய்வூதியம் வாயிலாக உதவித்தொகை பெற்று வருகிறேன். நீரிழிவு நோய்க்கு

நாகம்மா

அரசு மருத்துவமனைக்குச் சென்று மாத்திரைகள் பெற்று வந்தேன். வெகு தூரம் செல்ல வேண்டி இருந்தது. தற்பொழுது, எங்களது கிராமத்திலேயே அம்மா மினி கிளினிக் துவங்கப்பட்டுள்ளதால், என்னை போன்றவர்கள் மருத்துவ சிகிச்சை பெற தொலைதூரம் பயணம் தவிர்க்கப்பட்டுள்ளது. ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் எங்களது கிராமத்திற்கு அம்மா மினி கிளினிக் வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு எங்கள் ஊர் மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.''

க.அ.முகமது ரசூல்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருவள்ளூர் மாவட்டம்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் 625 ஊரக குடியிருப்புகளுக்கு ரூ.479 கோடி மதிப்பீட்டில் நெய்வேலி சுரங்க நீரினை ஆதாரமாகக் கொண்டு, கூட்டுக் குடிநீர் திட்டம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்
21.12.2020 அன்று தலைமைச் செயலகத்தில்,
காணொலிக் காட்சி மூலம் கூட்டுக் குடிநீர்
திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 21.12.2020 அன்று தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் கடலூர் மாவட்டம், திட்டக்குடி, பெண்ணாடம், மங்கலம்பேட்டை, வடலூர், குறிஞ்சிப்பாடி மற்றும் கங்கைகொண்டான் பேரூராட்சிகள் மற்றும் மங்களூர், நல்லூர் மற்றும் விருத்தாச்சலம் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 625 ஊரக குடியிருப்புகளுக்கு நெய்வேலி சுரங்க நீரினை ஆதாரமாகக் கொண்டு 479 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். மேலும், 89 கோடியே 21 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 9 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கும் அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 16.08.2017 அன்று கடலூரில் நடைபெற்ற புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில், கடலூர் மாவட்டத்தில் உள்ள நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் வழியோர குடியிருப்புகளுக்கென நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட கடல்நீரை நன்னீராக்கும் கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் கடலூர் மாவட்டம், திட்டக்குடி, பெண்ணாடம், மங்கலம்பேட்டை, வடலூர், குறிஞ்சிப்பாடி மற்றும் கங்கைகொண்டான் பேரூராட்சிகள் மற்றும் மங்களூர், நல்லூர் மற்றும் விருத்தாச்சலம் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 625 ஊரக குடியிருப்புகளுக்கு நெய்வேலி சுரங்க நீரினை ஆதாரமாகக் கொண்டு 479 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். இத்திட்டத்தின் மூலம் அப்பகுதிகளைச் சேர்ந்த சுமார் 5.58 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட குடிநீரைக் கொண்டு 20 கோடியே 34 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திண்டுக்கல் மாவட்டத்தில் குஜிலியம்பாறை ஒன்றியத்தைச் சார்ந்த 53 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம்;

நகராட்சி நிருவாகத் துறை சார்பில் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் நகராட்சிக்கு அம்ரூத் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 59 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் வழங்கும் திட்டம்;

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டு நிதியிலிருந்து திருப்பூர் மாவட்டம், தாராபுரம் நகராட்சியில் 2 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், காங்கேயம் நகராட்சியில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், தென்காசி மாவட்டம், செங்கோட்டை நகராட்சியில் 2 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள்;

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், சென்னை, தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையில் 69 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தரை மற்றும் முதல் தளத்துடன் கூடிய சிறப்புத் தங்குமிடம்; சென்னை, திருவல்லிக்கேணி, மீர்சாகிப்பேட்டையில் உள்ள நகர்ப்புற சமூக சுகாதார மையத்திற்கு 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள முதல்தளம்;

என மொத்தம் 89 கோடியே 21 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் தேனி மாவட்டம், தென்கரை பேரூராட்சியில் 9 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

7.5 சதவிகிதம் உள் ஒதுக்கீட்டில் மருத்துவம் பயில சேர்க்கை ஆணைகளை பெற்ற, சென்னை மாநகராட்சி பள்ளி மாணாக்கர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் மருத்துவக் கனவை நனவாக்கும் வகையில், மாண்புமிகு அம்மாவின் அரசு நீட் தேர்வில் தேர்ச்சி பெற்ற அரசுப் பள்ளி மாணாக்கர்கள் மருத்துவம் பயில 7.5 சதவிகிதம் உள் ஒதுக்கீடு வழங்கி ஆணையிட்டது. அதன் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னைப் பள்ளிகளில் பயின்று நீட் தேர்வில் தேர்ச்சி பெற்று, அரசுப் பள்ளி மாணாக்கர்களுக்கான சிறப்பு மருத்துவ கலந்தாய்வில் கலந்து கொண்டு மருத்துவக் கல்லூரியில் சேர்க்கை ஆணைகளை பெற்ற 11 மாணவ, மாணவியர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சந்தித்து, தங்களது மருத்துவ கனவை நனவாக்கியமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டார்கள். அப்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அம்மாணாக்கர்களுக்கு மருத்துவருக்கான கோட்டுகள் மற்றும் ஸ்டெதஸ்கோப்புகளை வழங்கி, வாழ்த்தினார்கள்.

ரூ.116.27 கோடி மதிப்பீட்டில் சென்னை பெரும்பாக்கத்தில் உலக அளவிலான கட்டுமான தொழில்நுட்பங்களுடன் 1,152 குடியிருப்புகள்

உலக அளவிலான தொழில்நுட்பங்களுடன் கூடிய வீட்டு வசதி கட்டுமான திட்டத்திற்கு 01.01.2021 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்கள் காணொலிக் காட்சி மூலம் அடிக்கல் நாட்டிய விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய உரையின் தமிழாக்கம்

உலக அளவிலான கட்டுமான தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அனைவருக்குமான வீடு திட்டத்தை செயல்படுத்தும் 6 மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாட்டை தேர்வு செய்துள்ளதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிக நகர்ப்புறங்களைக் கொண்ட மாநிலம் தமிழ்நாடு, இங்குள்ள மொத்த மக்களில் 48.45 சதவிகிதம் பேர் நகர்ப்புறங்களில் வசிக்கின்றனர். அதில், 14.63 இலட்சம் குடும்பத்தினர் நகர்ப்புறங்களில் உள்ள குடிசைப் பகுதியில் வாழ்கின்றனர்.

இவர்கள் எதிர்கொள்ளும் இன்னல்களைக் களையும் நோக்கத்தில், மறைந்த முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாடு 2023 தொலைநோக்குத் திட்டத்தை தொடங்கி வைத்தார். இதன்படி 2023ஆம் ஆண்டுக்குள் தமிழக நகரங்கள், குடிசைகள் அற்ற நகரங்களாக மாற வழிவகை ஏற்படும்.

பிரதம மந்திரி வீட்டுவசதி திட்டத்தின்படி (PMAY-Gramin), ஒரு வீட்டுக்கு ரூ.1.20 இலட்சம் செலவிடப்படுகிறது. இதில் ரூ.72 ஆயிரத்தை மத்திய அரசும், ரூ.48 ஆயிரத்தை மாநில அரசும் வழங்குகின்றது. இதில் கான்கிரீட் கூரை போடுவதற்காக கூடுதலாக ரூ.50 ஆயிரத்தை மானியமாக மாநில அரசு வழங்குகிறது.

மேலும் கூடுதலாக ஒவ்வொரு பயனாளிகளுக்கும் கழிவறை கட்டுவதற்காக NREGA-திட்டத்தின் கீழ், ரூ.23,000 வழங்கப்படுகிறது.

சமீபத்தில், இந்தத் திட்டம் குறித்து நான் ஆய்வுகள் மேற்கொண்டேன். ஏழைகளிலும், ஏழையாக இருப்போர், விலைவாசி உயர்வினாலும், கொரோனாவினால் ஏற்பட்ட வாழ்வாதார இழப்பினாலும் அந்த தொகையில் வீடு கட்ட முடியாது என்பதை அறிந்தேன்.

எனவே, ஒவ்வொரு வீட்டு கட்டுமானத்துக்கும் கூடுதலாக ரூ.70 ஆயிரம் தொகையை அனுமதித்து உத்தரவிட்டேன். அதன்படி ஒரு வீட்டுக்கான செலவு ரூ.1.70 இலட்சத்தில் இருந்து ரூ.2.40 இலட்சமாக உயர்ந்துள்ளது. அதன்படி, தமிழக அரசுக்கு 2.5 இலட்சம் வீடுகளைக் கட்டுவதற்கு ரூ.1,805 கோடி செலவாகிறது.

பிரதமர் வீட்டுவதி (நகர்ப்புறம்) திட்டத்தின் கீழ், ரூ.27 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் 1,62,720 அடுக்குமாடி குடியிருப்புகள், 3,42,769 தனி வீடுகள் கட்டுவதற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

உலக அளவிலான வீட்டுவசதி கட்டுமான தொழில்நுட்ப திட்டத்தின் கீழ், சென்னை பெரும்பாக்கம் பகுதியில் 413 சதுரஅடி பரப்பளவில் ரூ.116.27 கோடி மதிப்பீட்டில் 1,152 குடியிருப்புகளைக் கட்ட மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

மேலும், இதில் ரேஷன் கடை, 2 அங்கன்வாடி மையங்கள், ஒரு நூலகம், ஒரு பால் பூத், 6 கடைகள் போன்ற சமூக வசதிகளும் இந்த திட்டத்தில் அடங்கியுள்ளன. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், துணை மின்நிலையம் ஆகிய வசதிகளும் செய்து தரப்படும்.

இந்தத் திட்டம் 15 மாதங்களுக்குள் நிறைவு பெறும். பேரிடர் பாதுகாப்பு வசதிகளுடன் இக்குடியிருப்புகள் கட்டப்படும். சென்னையில் நீர்நிலைகளின் ஓரங்களிலும், ஆட்சேபனைக்குரிய இடங்களிலும் வசிக்கும் நகர்ப்புற ஏழைக் குடும்பத்தினருக்கு இங்கு வீடுகள் ஒதுக்கப்படும்.

இது போன்ற மத்திய அரசின் திட்டங்கள், முயற்சிகளில் தமிழ்நாடு அரசு இணைவது மகிழ்ச்சியானது.

நன்றி! வணக்கம்!

படமும் \ செய்தியும்

குழந்தை பராமரிப்பு இல்லங்களில் தங்கி பயின்ற 7 இளைஞர்களுக்கு, 6 மாத காலம் கடல்சார் பயிற்சியில் சேர்வதற்கான சேர்க்கை ஆணைகளை வழங்கினார்கள்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 21.12.2020 அன்று, தலைமைச் செயலகத்தில், சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கும் அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் குழந்தைப் பராமரிப்பு இல்லங்களில் தங்கி பயின்ற 7 இளைஞர்களுக்கு Maritime Foundation Charitable Trust மற்றும் Hindustan Institute of Maritime Training ஆகிய பயிற்சி நிறுவனங்களில் 6 மாத காலம் கடல்சார் பயிற்சியில் (General Purpose Ratings Residential Course) சேர்வதற்கான சேர்க்கை ஆணைகளையும், அவர்கள் பயிற்சி முடித்த பிறகு தனியார் கப்பல் நிறுவனங்களில் பணியில் சேருவதற்கான பணி உறுதி ஆணைகளையும் வழங்கினார்கள்.

சரித்திர நாயகர் எம்.ஜி.ஆர்

மக்கள் திலகம்
புரட்சி நடிகர்!!
பொன்மனச் செம்மல்
பரங்கிமலைப் பாரி
நினைத்ததை முடிப்பவர்
ஆயிரத்தில் ஒருவர்
புரட்சித் தலைவர் !!!
முடிசூடா சக்கரவர்த்தி

– என்றெல்லாம் புகழப்படும் எம்.ஜி.ஆர். என்ற மூன்றெழுத்துக்குச் சொந்தக்காரரான எம்.ஜி.இராமச்சந்திரனின் பெயருக்கு விரிவு – மருதூர் கோபாலன் இராமச்சந்திரன் என்பதாகும்.

அவரது தந்தையார் கோபால மேனன், தாயார் பெயர் சத்யபாமா.

சத்யபாமா – கோபால மேனன் தம்பதிக்கு 1917ஆம் வருஷம் ஜனவரி மாதம் 17ஆம் தேதியன்று இலங்கையில் உள்ள கண்டி நகரில் ஐந்தாவது கடைக்குட்டிப் பிள்ளையாகப் பிறந்தவர்தான் முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரன்.

பிறப்பால், முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர்., இலங்கையைச் சேர்ந்தவர் என்றாலும், மலையாளி எனக் கருதப்பட்டாலும், பூர்விகத்தில் தமிழரே!

எம்.ஜி.ஆர். அவர்கள்

அண்ணாவின் இதயக்கனியாக
அன்பின் அடையாளமாக
அன்னமிட்ட அண்ணனாக
இலக்கிய மேதையாக
உள்ளத்துள் வாழும் ஒளியாக
உதாரண புருஷராக
உழைத்தவர்களை மறக்காத உத்தமராக
ஏழைகளின் பசி போக்கும் அட்சய பாத்திரமாக
கஷ்டங்களை போக்கிய கடவுளாக
கலைஞர்களுக்கு வழிகாட்டியாக
மக்களின் உரிமையைப் பாதுகாப்பவராக
காவிய நாயகராக
காமராஜரை போல கரைபடாத மேதையாக
காலத்தைக் கணிப்பதில் வல்லவராக
நட்புக்கு இலக்கணமாக
நல்ல விமர்சகராக
சத்துணவு தந்த சரித்திர நாயகராக
வரலாற்று நாயகராக
வள்ளலுக்கெல்லாம் வள்ளலாக
வாழ்க்கைப் பாதையின் ஒளிவிளக்காக
மக்களின் மனதில் நிற்பவர் எம்.ஜி.ஆர்.
மக்கள் இயக்கம் கண்ட மாபெரும் தலைவராக
குணமென்னும் குன்றேறி நிற்பவராக
தர்மத்தாயின் தலைப்பிள்ளையாக
தர்மதேவனாக

“இருந்தாலும், மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்,
இவர்போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்”

என்ற கவிஞர் வாலியின் பாடல் வரிகளுக்கேற்ப வாழ்ந்தவர் மட்டும் அல்ல, இப்படி எழுதும்படி வாழ்ந்தவர், வாழ்ந்தபோதும் சரி, மறைந்த பின்னும் சரி, மக்களின் மனதில் நீங்காத இடம் பெற்றவராக வாழ்ந்து கொண்டிருப்பவர் “பாரத ரத்னா,” புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

நன்றி : **‘பாரத ரத்னா’ புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா மலர் மற்றும் திரைக் கலைஞர்களின் வரிசை புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். எனும் நூலிலிருந்து...**

18 புதிய தொழில் திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் அடிக்கல் நாட்டு விழா என மொத்தம் 24 திட்டங்களுக்கு ரூ.24,458 கோடி முதலீட்டில், 54,218 நபர்களுக்கு வேலைவாய்ப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் தலைமையில் 14.12.2020 அன்று, ஹோட்டல் லீலா பேலஸில் தொழில்துறை சார்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது மற்றும் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையில் 14.12.2020 அன்று, ஹோட்டல் லீலா பேலஸில் தொழில் துறை சார்பில், 19,995 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 26,509 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கும் வகையில், 18 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இந்த முதலீடுகள், மின்சார வாகனங்கள், சூரிய மற்றும் காற்றாலை சக்தி, மருந்துப் பொருட்கள், நகர எரிவாயு, இணையவழிக் கல்வி, ஜவுளி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 4.456 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 27,324 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கும் 5 நிறுவனங்களின் தொழிற் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி வைத்தார்கள். மேலும், 47 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 385 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கும் ஒரு நிறுவனத்தின் திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள்.

புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திட்ட திட்டங்களின் விவரங்கள்

1) மின்சார வாகனத் துறையிலும் நுகர்வோருக்கேற்ப மின் வாகனங்கள் உற்பத்தியிலும் பெருமளவில் காலடித்தடம் பதித்திருக்கும் Ola Electric Mobility நிறுவனம், சமீபத்தில் ஆம்ஸ்டர்டாம் நகரைச் சேர்ந்த Etergo BV என்ற நிறுவனத்தினைக் கையகப்படுத்தியுள்ளது. இந்நிறுவனம் கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில், 2,354 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 2,182 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கக் கூடிய மின்சார இரு சக்கர வாகனங்கள் உற்பத்தி திட்டத்தினை செயல்படுத்தப்பட உள்ளது.

2) Torrent Gas Chennai Pvt நிறுவனம், சென்னை மற்றும் திருவள்ளூரில் மாவட்டங்களில், நகர எரிவாயு விநியோக வலையமைப்பினை நிறுவ திட்டமிட்டுள்ளது. இந்த திட்டத்தில் செய்யப்பட உள்ள முதலீடு 5,000 கோடி ரூபாய் மற்றும் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

3) அமெரிக்காவில் உள்ள, Tempe – Arizona வைத் தலைமையகமாகக் கொண்ட First Solar நிறுவனம், advanced thin film photovoltaic தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்தி, Thin Film Photovoltaic

Solar Modules தயாரிக்கும் உலகின் மிகப்பெரிய உற்பத்தியாளர் ஆகும். இந்நிறுவனம் 4,185 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 1,076 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் என்ற வகையில் Solar Modules உற்பத்தியினை மேற்கொள்ள உள்ளது.

4) Society for Smart Electric Mobility நிறுவனம் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தாத்தனூரில், திறன் மேம்பாடு, ஆராய்ச்சி மையங்கள் மற்றும் எதிர்கால மின்சார வாகனங்கள் இயக்கம் போன்ற வசதிகளுடன், மின்சார வாகனங்களுக்கான தொழிற் பூங்காவை அமைக்க உள்ளது. இத்திட்டத்தின் மூலம் 2,500 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படும்.

5) Voltas நிறுவனம், அறை குளிர் சாதனப் பெட்டிகள் மற்றும் வணிக குளிர் பதன தயாரிப்புகளில் தலைமை வகிக்கும் நிறுவனங்களில் ஒன்றாகும். காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள வேடலில், 1,001 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 2,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் என்ற வகையில் குளிர் சாதனப் பெட்டிகள் மற்றும் வணிக குளிர் பதன தயாரிப்புகளுக்கான திட்டத்தினை நிறுவ உள்ளது.

6) Mylan Laboratories நிறுவனம், அமெரிக்காவைச் சேர்ந்த சிறப்பு மருந்து உற்பத்தியாளர் ஆகும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள குருபரப்பள்ளியில், 350 கோடி ரூபாய் முதலீட்டில் 250 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கும் வகையில், உயிர் காக்கும் மருந்து உற்பத்தி திட்டத்தினை நிறுவ உள்ளது.

7) சுவிட்சர்லாந்து நாட்டினைச் சேர்ந்த Gurit India Pvt Ltd நிறுவனம், காற்றாலை எரிசக்தித் துறையில் நீண்ட காலமாக காலூன்றி வருகின்றது. காஞ்சிபுரத்தில் உள்ள ஒரகடத்தில், 320 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 300 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் என்ற வகையில் காற்றாலை தகடுகள் மற்றும் உதிரிபாகங்கள் உற்பத்தி திட்டத்தினை நிறுவ உள்ளது.

8) லாட்வியா நிறுவனத்தினைச் சேர்ந்த YaClass நிறுவனம், உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு சர்வதேச இணைய அடிப்படையிலான கல்வி தளத்தினை வழங்கிடும் ஒரு முன்னணி நிறுவனமாகும். சென்னையில் 300 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கும் வகையில் ஒரு Edutech திட்டத்தினை நிறுவ உள்ளது.

9) KPR Sugar & Apparels Ltd நிறுவனம், நூல் துணிகள், ஆடைகள் மற்றும் வெள்ளை கிரிஸ்டல்

சர்க்கரை போன்ற பல துறைகளில் முதலீடு செய்துள்ள ஒரு ஒருங்கிணைந்த நிறுவனமாகும். திருப்பூரில் உள்ள பெருமணல்லூரில் 250 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கும் வகையில் ஒரு ஜவுளி ஆலை உற்பத்தி திட்டத்தினை நிறுவ உள்ளது.

10) Magnus Infrastructure நிறுவனம், திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் 200 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 150 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கும் வகையில் ஒரு தொழிற் பூங்காவை, சிறப்பு பொருளாதார மண்டலமாக அமைக்க உள்ளது.

11) அமெரிக்காவைச் சேர்ந்த Stanadyne நிறுவனம், இயந்திரங்களை அடிப்படையாகக் கொண்ட எரிபொருள் மற்றும் காற்று மேலாண்மை அமைப்பு போன்ற உலகளாவிய வாகன தொழில்நுட்பத்தில் ஒரு முன்னணி நிறுவனம் ஆகும். இந்நிறுவனம் 180 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 1,500 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் என்ற வகையில் Fuel Injection Pump உற்பத்தியினை மேற்கொள்ள உள்ளது.

12) Mahindra CIE நிறுவனம் உலைக்கள மோட்டார் வாகன உதிரி பாகங்களை (Forged automotive components) தயாரிக்கும் முன்னணி உற்பத்தியாளர்களில் ஒன்றாகும். இந்நிறுவனம் கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில், 100 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் என்ற வகையில் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் உற்பத்தித் திட்டத்தினை மேற்கொள்ள உள்ளது.

13) Anjan Drugs நிறுவனம், திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டானில் 60 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கும் வகையில் ஒரு Bulk Drugs / APIs உற்பத்தி திட்டத்தினை மேற்கொள்ள உள்ளது.

14) Maiva Pharma நிறுவனம், உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகளுக்காக Sterile liquid injections தயாரித்திடும் ஒரு நிறுவனமாகும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஒசூரில் 50 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 220 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், இரண்டு அதிவேக குப்பியை நிரப்பும் உற்பத்தி வசதி ஏற்படுத்தி, தனது ஆலையை விரிவாக்கம் செய்ய உள்ளது.

15) ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த Eickhoff Wind Asia Pvt Ltd நிறுவனம், உலக அளவில் கடுமையான நிலைகளைத் தாங்கிடும் வகையில் வடிவமைக்கப்பட்ட இயந்திரங்கள் மற்றும் பற்சக்கர தொழில் நுட்பத்தினை உற்பத்தி செய்திடும் நிறுவனமாகும். இந்நிறுவனம் 410 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 525 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் காற்றாலைகளுக்கான கியர் பெட்டிகள் உற்பத்தி திட்டத்தினை மேற்கொள்ள உள்ளது.

16) Denmark நாட்டினைச் சேர்ந்த Cubic Modular Systems நிறுவனம், எலக்ட்ரோ மெக்கானிக்

துறையில் உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் ஒன்றாகும், மேலும், சுரங்கங்கள், விமான நிலையங்கள், கப்பல்கள், தரவு மையங்கள், மருத்துவமனைகள், மின் உற்பத்தி நிலையங்கள், காற்றாலை ஆலைகள் போன்ற துறைகளிலும் பரவலான தயாரிப்புகள் மேற்கொள்ளும் நிறுவனமாகும். இந்நிறுவனம், 120 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 106 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் Sheet Metal Boxes உற்பத்தி திட்டத்தை செயல்படுத்த உள்ளது.

அடிக்கல் மற்றும் தொடங்கப்பட்ட திட்டங்களின் விவரங்கள்

1) முதலாவதாக, செங்கல்பட்டு மாவட்டம், சிறுசேரியில், 2,300 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் Adani Data Centre நிறுவனத்தின் தகவல் தரவு மையம் அமைத்திடும் திட்டம். இத்திட்டம், 23.07.2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் முன்னிலையில், மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு திட்டமாகும்.

17) இத்தாலி நாட்டினைச் சேர்ந்த Sabaf நிறுவனம், வீட்டு சமையல் சாதனங்களுக்கான குழாய்கள், தெர்மோஸ்டாட்டுகள் மற்றும் எரிவாயு சாதனங்களுக்கான பர்னர்கள் போன்றவைகளை உற்பத்தி செய்வதற்காக 5 உற்பத்தி தளங்களைக் கொண்டுள்ளது. 75 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 200 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், வீட்டு உபயோகப் பொருட்கள் உற்பத்தித் திட்டத்தை நிறுவ உள்ளது.

டிட்கோ நிறுவனத்தின் புரிந்துணர்வு திட்டம்

18) சேலம் மாவட்டத்தில், 2,500 கோடி ரூபாய் முதலீட்டில், 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Crown Group வான்வெளி மற்றும் பாதுகாப்புத் துறையில் ஒரு உற்பத்தி திட்டத்தினை நிறுவ உள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு பாதுகாப்பு தொழிற்தடத்தில் (TN Defence Industrial Corridor) சேலம் மற்றும் இதர முனையங்களில் செயல்படுத்தப்படும்.

2) நாகப்பட்டினம் மாவட்டம், திருமருகல் கிராமத்தில், 600 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், பிரான்சு நாட்டினைச் சேர்ந்த Torrent Gas நிறுவனத்தின் நகர எரிவாயு விநியோக வலையமைப்பு திட்டம். இத்திட்டம் உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019இல் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகும்.

3) திருவள்ளூர் மாவட்டம், தேர்வாய்கண்டிகையில், 536 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 320 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த Baettr India Pvt Ltd நிறுவனத்தின் வார்ப்பு உற்பத்தித் திட்டம். இத்திட்டம், 27.05.2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் முன்னிலையில், மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்த திட்டமாகும்.

4) சென்னையில் உள்ள பெரம்பூரில் 590 கோடி ரூபாய் முதலீட்டில் செயல்படுத்தப்படும் வகையில், SPR குழுமத்தின் IT Park Zone and Market Plaza

திட்டம். இத்திட்டம் உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019இல் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகும்.

5) காஞ்சிபுரம் மாவட்டம், வல்லம் வடகாலில் 430 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 1000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு என்ற வகையில், Indospace Vallam II Pvt Ltd நிறுவனத்தின் தொழிற் பூங்கா திட்டம்.

6) சென்னை போரூரில் உள்ள Commerzone IT Parkல் 47 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 385 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், NPCI Development Centre நிறுவனத்தின் IT / Back Office திட்டம். இந்த மையம், டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்கான பேக் எண்ட் நெட்வொர்க்கை நிருவகிக்கும்.

ஆக, மேற்கூறப்பட்ட திட்டங்களின் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், அடிக்கல் நாட்டு விழா மற்றும் திறப்பு விழா மேற்கொள்ளப்பட்ட 24 திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட மொத்த முதலீடு 24,458 கோடி ரூபாய் ஆகும். இத்திட்டங்களில் உறுதி செய்யப்பட்ட வேலைவாய்ப்புகள் 54,218 ஆகும்.

சிப்காட் நிறுவனத்தின் புரிந்துணர்வு திட்டம்

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரில், சிப்காட் வல்லம் வடகால் தொழிற்பூங்காவில், ஃபாக்ஸ்கான் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்காக, பணிபுரியும் இடங்களுக்கு அருகிலேயே, அனைத்து வசதிகளுடன் தங்குமிட குடியிருப்புகள் அமைத்திட சிப்காட் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இந்த திட்டத்திற்காக, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் ஃபாக்ஸ்கான் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தியாவிலேயே முதன்முறையாக சிப்காட் தொழிற் பூங்காக்களின் நிலங்களை இணைய வழியில் முப்பரிமாண முறையில் பார்வையிடும் வசதி

சிப்காட் நிறுவனத்தின் GIS இணையதளம் துவக்கி வைப்பு

சிப்காட் நிறுவனம், மிக நவீன ட்ரோன் தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்தி, தனது தொழில் துறை வளாகங்களில் உள்ள நிலங்கள், மனை அடுக்குகளின் பரப்பளவு, ஒதுக்கப்பட்ட / காலியாக உள்ள இடங்கள், கட்டமைப்பு வசதிகள் போன்ற விவரங்கள் அனைத்தையும் விவரணை செய்து ஒரு புதிய GIS இணைய தளத்தினை உருவாக்கியுள்ளது. **இதன் மூலம், சிப்காட் தொழிற்பூங்காக்களில் உள்ள நிலங்களை, இருக்கும் இடத்திலிருந்தே இணைய வழியில், முப்பரிமான அமைப்பில் பார்வையிடும் சிறப்பான வசதி, இந்தியாவிலேயே முதல்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.**

இந்த நிகழ்ச்சியின் மூலமாக மொத்தம் 24 திட்டங்களால் ரூ.24,458 கோடி முதலீடு, 54,218 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும்.

நடப்பாண்டில் ரூ.40,719 கோடி முதலீட்டில் சுமார் 74,000 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 55 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன

மாண்புமிகு அம்மா அரசின் சிறப்பான செயல்பாடுகளால், துறைகள்தோறும் இந்தியாவின் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது.

நவீன உலகிற்கான புதிய சிந்தனைகள், சீரிய செயல்திறன், தொடர் செயல்பாடுகள், நிலைத்தன்மை ஆகிய நான்கும் அரசின் செயல்பாடுகளின் அடித்தளமாக விளங்குகின்றன.

“உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல்: மற்றுஅது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து”

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இணங்க, தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து கொண்டு செல்லவும், மேலும் பல உயரங்களைத் தொடவும், முழு முனைப்போடு மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்பட்டு வருகிறது.

நாளை வருவதை இன்றே கணித்து, அதற்கேற்ற முறையான திட்டமிடலுடன் செயல்பட்டு, வளமான வருங்காலத்தை உருவாக்கிடும் மக்களின் அரசாக எனது தலைமையிலான தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது.

- கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில், முழுமையாக களத்தில் இறங்கி, மக்களுடன் இணைந்து, பல்வேறு தொடர் நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு தொடர்ந்து மேற்கொண்டது.

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K.பழனிசாமி** அவர்கள்
தலைமையில், 14.12.2020 அன்று தொழில்
துறை சார்பில் ஹோட்டல் லீலா பேலஸில்
நடைபெற்ற “தொழில் வளர் தமிழ்நாடு”
வளர்ச்சி மற்றும் முதலீடு சிறப்பு அமர்வில்,
தொடக்க விழா நிகழ்ச்சியில்
ஆற்றிய உரை

மக்கள் நலன் மற்றும் பொருளாதார வளர்ச்சி என இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்து, மிகுந்த கவனத்துடன் படிப்படியான தளர்வுகளுடன் பொதுமுடக்கம் அமல்படுத்தப்பட்டது. அரசின் இத்தகைய செயல்பாடுகளால், தற்போது நோய்ப் பரவல் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், பொருளாதார மறுசீரமைப்பிலும் சிறப்பான முன்னேற்றத்தை தமிழ்நாடு பெற்றுள்ளது. அதனால்தான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் "கொரோனா தடுப்பு ஆர்டி.பி.சி.ஆர் பரிசோதனை மற்றும் நிவாரண நடவடிக்கைகளில் நாட்டிற்கே முன் உதாரணமாக தமிழ்நாடு விளங்குகின்றது" என்று பாராட்டிப் பேசினார்.

கொரோனா பாதித்த அனைவருக்கும் தரமான சிறந்த மருத்துவம், பெரும் மழை, புயல்கள் என தொடர் பேரிடர்களை சிறப்பாகக் கையாண்டு மக்களின் நலனைக் காத்து வரும் நிருவாகத் திறன், கொரோனா தொற்றுக் காலத்தில்கூட இந்தியாவிலேயே அதிக அளவில் புதிய முதலீடுகள், GST வரி வசூலில் ஏற்பட்டுள்ள தொடர்ந்து இரட்டை இலக்க வளர்ச்சி என தமிழ்நாடு அரசு செய்து வரும் சாதனைகள் இன்றைக்கு இந்தியாவே உற்று நோக்கிப் பார்க்க வைத்ததோடு மட்டுமல்லாமல், பாராட்டும்படியான வளர்ச்சிக்கான முன்மாதிரியாக தமிழ்நாடு (Tamil Nadu Model of Growth) திகழ்கின்றது.

- **முன்னணி மதிப்பீடுகளில் ஒன்றான CARE மதிப்பீட்டின்படி, 2020–2021 நிதியாண்டின் முதல் அரையாண்டில், இந்தியாவிலேயே அதிக முதலீடுகளை ஈர்த்த முதன்மை மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.**
- **இந்திய அரசு வெளியிட்ட "நல் ஆளுமைக் குறியீட்டில்", இந்தியாவின் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.**
- **"இந்தியா டுடே" பத்திரிக்கையினால், ஒட்டு மொத்த செயல்பாடுகளில் சிறந்த மாநிலமாகத் தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.**

மக்கள் நலனையும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியையுமே முதன்மை நோக்கங்களாகக் கொண்டு செயல்பட்டு வரும் எனது அரசின் பணிகளுக்குக் கட்டியம் கூறுவதுபோல் இந்த மதிப்பீடுகள் அமைந்துள்ளன.

மின்னாளுமை கொள்கை, தமிழ்நாடு வானூர்தி மற்றும் பாதுகாப்புக் கொள்கை, தமிழ்நாடு சூரிய சக்திக் கொள்கை, தமிழ்நாடு மின்சார வாகன கொள்கை, தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் கொள்கை, தமிழ்நாடு உணவு பதப்படுத்தும் கொள்கை உள்ளிட்ட பல்வேறு கொள்கைகளை தமிழ்நாடு அரசு வெளியிட்டு முதலீட்டாளர்களுக்கு தெளிவான உறுதிகளை வழங்கி முதலீட்டுக்கு வழிவகுக்கும் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.

உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2015இன் போது, 2,42,160 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 4,70,065 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. இவற்றில், ஐந்தே ஆண்டுகளில் 72 சதவிகித திட்டங்கள் செயல்பாட்டுக்கு வந்ததன் மூலம், 73,711 கோடி ரூபாய் முதலீடுகளும், 1,86,838 நபர்களுக்கு வேலைவாய்ப்பும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கிறபோது புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு, ஒரு சாதனையை அம்மா அவர்கள் தமிழகத்தில் ஏற்படுத்தினார்கள்.

உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019ன் போது 3 இலட்சத்து 501 கோடி ரூபாய் முதலீட்டில் 10.50 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. இவற்றில், 24,492 கோடி ரூபாய் முதலீட்டில், 1,10,844 நபர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதியளித்துள்ள 81 திட்டங்கள், அதாவது 27 சதவிகிதத் திட்டங்கள், ஒரே ஆண்டில், தமது வணிக உற்பத்தியை துவங்கி சாதனை படைத்துள்ளன. ஹுண்டாய் விரிவாக்கம், ஃபாக்ஸ்கான், சால்காம்ப், டாடா கன்சல்டன்சி சர்வீசஸ், மேண்டோ, ஹானன், டி.பி.ஐ காம்போசிட்ஸ் உள்ளிட்ட நிறுவனங்கள் இதில் குறிப்பிடத்தக்கவை. மேலும், 2.20 இலட்சம் கோடி ரூபாய் முதலீட்டில், 5.33 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பை உறுதியளித்துள்ள 191 திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன.

உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019 வெற்றியை தொடர்ந்து, கடந்த 22 மாதங்களில் மட்டும், 60,905 கோடி ரூபாய் முதலீட்டில் மற்றும் 1,60,349 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையில், 120 புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. இவற்றில், முதலீடுகளை ஈர்க்க அரசு முறைப் பயணமாக இங்கிலாந்து, அமெரிக்கா, துபாய் ஆகிய நாடுகளுக்குச்

சென்றபோது 8,835 கோடி ரூபாய் முதலீட்டில் 35,520 நபர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கும் வகையில், 41 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. இவற்றில் 10 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயல்பாட்டுக்கு வந்துள்ளன. 5 திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன.

நடப்பாண்டில் மட்டும், 40,719 கோடி ரூபாய் முதலீட்டில் சுமார் 74,000 புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் 55 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தமிழ்நாடு அரசால் கையெழுத்திடப்பட்டுள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தத் திட்டங்கள் தவிர்த்து, **டி.எல்.எஃப் நிறுவனத்தின் 5,000 கோடி ரூபாய் முதலீட்டிலான தகவல் தொழில்நுட்பப் பூங்கா திட்டம், 1,500 கோடி ரூபாய் முதலீட்டில் அசன்டாஸ் ரேடியல் ஐ.டி.பார்க் திட்டம், 250 கோடி ரூபாய் முதலீட்டில் பட்டாபிராம் டைடல் பார்க் திட்டம், 250 கோடி ரூபாய் முதலீட்டில் ஸ்ரீபெரும்புதூர் வானூர்தி பூங்காவில் நவீன AEROHUB திட்டம் என பல திட்டங்களுக்கு இக்காலகட்டத்தில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.**

எனது தலைமையிலான உயர்நிலைக் குழு, ஒவ்வொரு முதலீட்டுத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்தும் தொடர்ந்து ஆய்வு செய்து, தேவையான வழிகாட்டுதல்களை வழங்கி வருகிறது. இதுமட்டுமின்றி, 39,941 கோடி ரூபாய் முதலீட்டிலான 62 பெரும் தொழில் திட்டங்களை, நானே நேரடியாக ஆய்வு செய்ததன் பயனாக, உடனுக்குடன் அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசின் சிறப்பான நிருவாகத் திறனுக்கு மற்றொரு சான்றாக இன்றைய நிகழ்வு அமைந்துள்ளது. கொரோனா காரணமாக சர்வதேச போக்குவரத்து முடங்கியுள்ள சூழலில், தொழில் முதலீடுகள் தடையின்றி நடைபெற அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. உலகெங்கும் உள்ள முதலீட்டாளர்கள், சிப்காட் தொழிற் பூங்காக்களில் உள்ள நிலங்களை, இருக்கும் இடத்திலிருந்தே இணைய வழியில், முப்பரிமாண அமைப்பில் பார்வையிடும் சிறப்பான வசதி, இந்தியாவிலேயே முதல்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம், நிலத்தின் தன்மை, சாலை உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் என அனைத்தையும் விரிவாக ஆய்வு செய்து, நிலத்திற்கான விண்ணப்பத்தையும் இணைய வழியிலேயே அனுப்பிட இயலும்.

மேலும் ஒரு சிறப்பு நிகழ்வாக, FOXCONN நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான “உலகத்தர குடியிருப்பு” வசதியை குறைந்த விலையில் உருவாக்கும் வகையில் SIPCOT நிறுவனத்திற்கும் FOXCONN நிறுவனத்திற்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. மேலை நாடுகளில் உள்ளதைப்போல ஏழை, எளிய தொழிலாளர்களுக்கு, பணிபுரியும் இடங்களுக்கு அருகிலேயே அனைத்து வசதிகளுடன் கூடிய நவீன தங்குமிடங்கள் வழங்கப்படுவதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரமும், சேமிப்பும் உயரும். “அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி” என்ற எனது அரசின் முதன்மையான நோக்கத்திற்கு இதுபோன்ற திட்டங்களே சான்றாக அமைகின்றன.

இன்று, வளர்ந்து வரும் துறைகளான மின்சார வாகன உற்பத்தி, சூரிய மின் உற்பத்தி தளவாடங்கள் தயாரித்தல், மின்னணு பொருட்கள் உற்பத்தி, மருந்து உற்பத்தி, வானூர்தி பாகங்கள் உற்பத்தி என பல துறைகளைச் சார்ந்த 24 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. மேலும், 5 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டும், ஒரு திட்டம் துவங்கப்பட்டும் உள்ளது. இத்திட்டங்களின் மூலம் 24,458 கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, 54,218 புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் விரும்பி வரும் மாநிலமாக, நவீன உலகிற்கான உற்பத்தி மையமாக தமிழ்நாடு வளர்ந்து வருவதை இன்றைய நிகழ்வில் கண்கூடாக நாம் காணமுடிகிறது. வாகன உற்பத்தி, துணி நூல் மற்றும் ஆயத்த ஆடை உற்பத்தி, பொறியியல் இயந்திரங்கள் உற்பத்தி, காற்றாலை உபகரணங்கள் உற்பத்தி ஆகியவற்றில் உலக அளவில் பெயர்பெற்ற தமிழ்நாடு, தற்போது வளர்ந்துவரும் துறைகளான சூரிய மின்சக்தி தளவாடங்கள் மற்றும் மின்சார வாகன உற்பத்தி ஆகியவற்றுக்கான புதிய மையமாக உருவாகி வருவது மகிழ்ச்சியளிக்கிறது. அமெரிக்க நாட்டின் First Solar நிறுவனம் மேற்கொள்ளும் 4,185 கோடி ரூபாய் முதலீடு, ஒசூரில் மின் இருசக்கர வாகனம் உற்பத்தியில் Ola Electric நிறுவனம் மேற்கொள்ளும் 2,354 கோடி ரூபாய் முதலீடு, Crown குழுமத்தின் வானூர்தி பாகங்கள் உற்பத்தியில் மேற்கொள்ளும் 2,500 கோடி ரூபாய் முதலீடு ஆகியன இதையே உணர்த்துகின்றன. இது தவிர, Mylon Pharma

உள்ளிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், மருந்து உற்பத்தித் துறையிலும் தமிழ்நாட்டின் சிறப்பான செயல்பாடுகளை பறைசாற்றுவதாக அமைந்துள்ளன.

தமிழ்நாடு அரசின் சிறப்பான நடவடிக்கைகளால் "புதிய தொழில் துவங்க உகந்த மாநிலம் தமிழ்நாடு" என்ற அசைக்க முடியாத நம்பிக்கை தொழில் துறையினரிடம் தொடர்ந்து இருந்து வருவதற்கு மற்றுமொரு சான்றாக இன்றைய சிறப்புமிக்க நிகழ்வு அமைந்துள்ளது.

தங்கள் முதலீட்டுக்கான சரியான தேர்வாகத் தமிழ்நாட்டை தேர்ந்தெடுத்த அனைத்து தொழில் முனைவோருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை ஈர்க்க தொடர்ந்து நல் ஆதரவை வழங்கிவரும் வெளிநாட்டுத் தூதர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கும், முதலீட்டாளர்களுக்கும், தொழில்துறையினருக்கும், தொழில் அமைப்புகளுக்கும், பத்திரிகை மற்றும் ஊடக துறையினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசு ஒவ்வொரு தொழில் முதலீட்டாளர்களுக்கும் முழுமையான வழிகாட்டுதல்களையும் ஆதரவையும் அளித்து, உங்கள் அனைவரின் வெற்றிக்கு உறுதுணையாக என்றென்றும் இருக்குமென உறுதி கூறி, உங்கள் அனைவரையும் வாழ்த்தி விடைபெறுகிறேன்.

படமும்/ செய்தியும்

சுற்றுலாத் துறை சார்பில் ரூ.1.18 கோடியில் கட்டடங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள், 21.12.2020 அன்று தலைமைச் செயலகத்தில், சுற்றுலாத் துறை சார்பில் தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், குச்சனூர் பேரூராட்சி, அருள்மிகு சுயம்பு சனீஸ்வர பகவான் திருக்கோயிலில் கட்டப்பட்டுள்ள தங்கும் விடுதிக் கட்டடம் மற்றும் அருள்மிகு சுயம்பு சனீஸ்வர பகவான் திருக்கோயில் பகுதியில் சுரபி நதிக்கரையின் படித்துறை வாய்க்காலில் கட்டப்பட்டுள்ள தளம் மற்றும் சிமெண்ட் பேவர்பிளாக் கல் கட்டுமானம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள். உடன் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **ஓ. பன்னீர்செல்வம்** அவர்கள், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. வெல்லமண்டி என். நடராஜன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.விக்ரம் கபூர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில்

தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 10 பகல்நேர பராமரிப்பு மையம்

பார்வையற்ற மற்றும் கேட்கும் திறனற்றவர்கள், பிறருடன் எளிதில் தொடர்பு கொள்ள தக்க செயலிகளுடன் கூடிய 10,000 திறன்பேசிகள் வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 21.12.2020 அன்று தலைமைச் செயலகத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சேலம், திருவண்ணாமலை, திண்டுக்கல், விருதுநகர், தஞ்சாவூர், தூத்துக்குடி, விழுப்புரம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள 10 பகல் நேர பராமரிப்பு மையங்களை திறந்து வைத்தார்கள். மேலும், பார்வையற்ற மற்றும் கேட்கும்திறனற்ற மாற்றுத்திறனாளிகள் பிறருடன் எளிதில் தொடர்பு கொள்ளும் வகையில் 10 கோடி ரூபாய் செலவில் தக்க செயலிகளுடன் கூடிய 10,000 திறன்பேசிகளை (Smart phones with Apps) பார்வையற்ற மற்றும் கேட்கும்திறனற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தார்கள்.

> மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 21.12.2020 அன்று தலைமைச் செயலகத்தில், பராமரிப்பு மையங்களை திறந்து வைத்து பார்வையற்ற மற்றும் பேசும் திறனற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு தக்க செயலிகளுடன் கூடிய திறன்பேசிகள் வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 11.07.2019 அன்று சட்டப்பேரவை விதி எண் 110இன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், தமிழ்நாட்டில், தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பகல்நேர பராமரிப்பு மையங்கள் 4 மாவட்டங்களில் அரசின் நிதியுதவியுடன் செயல்பட்டு வருகின்றன. தற்போது, கூடுதலாக 10 மாவட்டங்களில், தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உபகரணங்களுடன் கூடிய

பகல் நேர பராமரிப்பு மையங்கள் தொடங்கப்படும் என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களது அன்றாட செயல்பாடுகளுக்கு உதவிடும் வகையில், சேலம், திருவண்ணாமலை மாவட்டம் – வந்தவாசி வட்டம், சென்னாவரம், திண்டுக்கல், விருதுநகர், தஞ்சாவூர், தூத்துக்குடி, விழுப்புரம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மொத்தம் 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள உபகரணங்களுடன் கூடிய 10 பகல் நேர பராமரிப்பு மையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். இம்மையங்களை பராமரிக்க அரசின் பங்களிப்பாக ஆண்டுதோறும் 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

2020–2021ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட அறிக்கையில், பார்வைத் திறனற்றோர் மற்றும் கேட்கும் திறனற்றோர், பிறரை எளிதில் தொடர்பு கொள்வதற்கு, தக்க செயலிகளுடன் கூடிய 10,000 திறன்பேசிகள், பார்வைத் திறனற்றோர் மற்றும் கேட்கும் திறனற்றோருக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, பார்வையற்ற மற்றும் கேட்கும் திறனற்ற மாற்றுத்திறனாளிகள் பிறருடன் எளிதில் தொடர்பு கொள்ளவும், நவீன தகவல் தொழில்நுட்பங்களை எளிதில் பயன்படுத்திட ஏதுவாகவும், 10 கோடி ரூபாய் செலவில் தக்க செயலிகளுடன் கூடிய 10,000 திறன்பேசிகளை (Smart phones with Apps) பார்வையற்ற மற்றும் கேட்கும் திறனற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கும் திட்டத்தை துவக்கி வைக்கும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 7 பார்வை மற்றும் கேட்கும் திறனற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு திறன்பேசிகளை வழங்கி துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஆண்டுதோறும் சுதந்திர தின விழாவில், மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக பணிபுரிந்த சிறந்த தொண்டு நிறுவனம், சிறந்த மருத்துவர், மாற்றுத்திறனாளிகளுக்கு மிக அதிக அளவில் வேலைவாய்ப்பு அளித்த தனியார் நிறுவனம், மாற்றுத்திறனாளிகளுக்கு அதிக அளவில் கடனுதவி வழங்கிய சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக சேவைபுரிந்த சிறந்த சமூகப் பணியாளர் ஆகியோருக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் மாநில விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது.

மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக அரும்பணியாற்றிய சிறந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு விருது

மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக அரும்பணியாற்றிய சிறந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் விருது வழங்கப்படுகிறது. அந்த வகையில், 2018ஆம் ஆண்டிற்கான சிறந்த மாவட்ட ஆட்சித்தலைவர் விருதினை அப்போதைய ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் எஸ். பிரபாகர், இ.ஆ.ப., அவர்களுக்கும், 2019ஆம் ஆண்டிற்கான சிறந்த மாவட்ட ஆட்சித்தலைவர் விருதினை அப்போதைய சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஜெ.ஜெயகாந்தன், இ.ஆ.ப., அவர்களுக்கும், 2020ஆம் ஆண்டிற்கான சிறந்த மாவட்ட ஆட்சித் தலைவர் விருதினை அப்போதைய தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி கௌரவித்தார்கள்.

மாற்றுத்திறனாளிகளின் நலனிற்காக சிறந்த சேவை புரிந்தவர்களுக்கு விருதுகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 21.12.2020 அன்று தலைமைச் செயலகத்தில், சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் மாற்றுத்திறனாளிகளின் நலனிற்காக சிறந்த சேவை புரிந்தவர்களுக்கு 2019 மற்றும் 2020ஆம் ஆண்டிற்கான விருதுகள் வழங்கும் விதமாக, சிறந்த நிறுவனத்திற்கான விருதுகள், சிறந்த சமூகப் பணியாளருக்கான விருதுகள், சிறந்த ஆசிரியருக்கான விருதுகள், சிறந்த பணியாளர் / சுய தொழில் புரிபவருக்கான விருதுகள், மாற்றுத்திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய நிறுவனத்திற்கான விருதுகள், ஆரம்பநிலை பயிற்சி மையத்தில் பணிபுரியும் சிறந்த ஆசிரியருக்கான விருதுகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய ஓட்டுநர் மற்றும் நடத்துனருக்கான விருதுகள் என 35 விருதாளர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்தார்கள்.

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்
21.12.2020 அன்று தலைமைச் செயலகத்தில்,
மாற்றுத்திறனாளிகளின் நலனிற்காக சிறப்பாக
பணியாற்றிய 35 விருதாளர்களுக்கு
விருதுகளை வழங்கி கௌரவித்தார்கள்.

ஆண்டுதோறும் டிசம்பர் திங்கள் 3ஆம் நாள் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினமாக கொண்டாடப்படுவதை முன்னிட்டு, சிறந்த மாற்றுத்திறனாளிகளுக்கும் மற்றும் அவர்களின் நலனுக்காக பாடுபட்டவர்களுக்கும் தமிழ்நாடு அரசால் விருதுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், 2019ஆம் ஆண்டு சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின விருதுகள் வழங்கும் வகையில், சிறந்த நிறுவனத்திற்கான விருதுகள், சென்னை – ஹோப் பொது நல அறக்கட்டளை, சென்னை – மித்ரா மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு மையம் மற்றும் சென்னை – ஆட்ரியா கன்வர்ஜென்ஸ் டெக்னாலஜிஸ் லிமிடெட் ஆகிய நிறுவனங்களுக்கும், சிறந்த சமூகப் பணியாளருக்கான விருதுகள் சகோதரி மரிய பிரிதீகா, திரு.ல.மணிகண்டன் மற்றும் அரிமா டாக்டர் லவ் ஒ.ஏ.கே.நாகராஜன் ஆகியோருக்கும், சிறந்த ஆசிரியருக்கான விருதுகள் திருமதி ஐ.ரீட்டா எலிசபெத் கிறிஸ்டீனா, திரு.இரா.நாகநாதன் மற்றும் திருமதி ரோ.மரிய ஜெஸி ஆகியோருக்கும், சிறந்த பணியாளர் / சுய தொழில் புரிபவருக்கான விருதுகள் திரு.நா.பிரபு, டாக்டர் மா.கார்த்திகேயன், திரு.வே.இராதாகிருஷ்ணன், திருமதி சுதா சீனிவாசன், செல்வி சிரவந்தி சுதாகர் மற்றும் திரு.ச.ஜெகதீஸ் ஆகியோருக்கும், மாற்றுத்திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய நிறுவனத்திற்கான விருது இராணிப்பேட்டை – பாரத மின் மிகு நிறுவனத்திற்கும், ஆரம்ப நிலை பயிற்சி மையத்தில் பணிபுரியும் சிறந்த ஆசிரியருக்கான விருதுகள் திருமதி க.கற்பகம் மற்றும் திருமதி வே.டிலைக்றா ஜெஸி ஆகியோருக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய ஓட்டுநர் மற்றும் நடத்துனருக்கான விருதுகள் திரு.டி.சந்திரமோகன் மற்றும் திரு.ஜி.மூர்த்தி ஆகியோருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விருதுகளை வழங்கி கௌரவித்தார்கள்.

மேலும், 2020ஆம் ஆண்டு சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின விருதுகள் வழங்கும் வகையில், சிறந்த நிறுவனத்திற்கான விருதுகள் திருச்சிராப்பள்ளி பல்நோக்கு சமூகப் பணி மையத்திற்கும், சிறந்த சமூகப் பணியாளருக்கான விருது மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அன்னை இல்லத்தின் திருமதி ப.ஸ்ரீதேவி அவர்களுக்கும், சிறந்த ஆசிரியருக்கான விருதுகள் திரு.ஜெ.மஞ்சுநாதன், திரு.ச.ராஜா மற்றும் முனைவர் கி.தனலெட்சுமி ஆகியோருக்கும், சிறந்த பணியாளர் / சுய தொழில் புரிபவருக்கான விருதுகள் திரு.ச.இராஜசேகர், திரு.எம்.டென்னிஸ், திரு.ஜி.சுரேதா, திரு.டே.கென்னடி மற்றும் திரு.து.மதன் ஆகியோருக்கும், மாற்றுத்திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய நிறுவனத்திற்கான விருது வேலூர் – ஓர்த் அறக்கட்டளைக்கும், ஆரம்ப நிலை பயிற்சி மையத்தில் பணிபுரியும் சிறந்த ஆசிரியருக்கான விருதுகள் செல்வி சா.ஜெயமாலா மற்றும் திருமதி ரா.ராமஜெயம் ஆகியோருக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய ஓட்டுநர் மற்றும் நடத்துனருக்கான விருதுகள் திரு.ஆர்.மணவாளன் மற்றும் திரு.எஸ்.முருகன் ஆகியோருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விருதுகளை வழங்கி கௌரவித்தார்கள்.

இவ்விருதுகளை பெறும் விருதாளர்களுக்கு தலா 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கமும் மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகிறது.

தோற்றம் : 15.01.1892

குழந்தை இலக்கியம் படைத்தவர். தமிழ் மொழி வளரவில்லை என்றெண்ணி துக்க வாரம் அனுசரித்த தமிழ்த்தொண்டர். இலவசப் பள்ளிக்கூடம் கட்டி தமிழ் வளர்த்த பெருமான். திருக்குறளுக்கு உரை எழுதியவர். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்ட தமிழ்மகனார். தமிழ்நெறிக் காவலர் என அனைவராலும் அழைக்கப்பட்டவர்.

மறைவு : 06.07.1968

பெரம்பலூர் நகராட்சிக்கு ரூ.300 கோடி மதிப்பீட்டில், கொள்ளிடம் ஆற்றினை நீர் ஆதாரமாகக் கொண்டு குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் விரைவில் துவங்கப்படும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் தலைமையில் 17.12.2020 அன்று, பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தொற்றுப் பரவல் தடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

பெரம்பலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவல் தடுப்புப் பணிகள் மற்றும் அரசால் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பங்குபெற்றுள்ள அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவலைத் தடுக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மருத்துவ நிபுணர்கள் வழங்கிய ஆலோசனைகளை மாவட்ட நிருவாகத்திடமும், சுகாதாரத் துறையிடமும் பின்பற்ற அறிவுறுத்தி, முழுமூச்சாக நடவடிக்கைகள் மேற்கொண்டதன் விளைவாக ஒருவர்கூட பாதிக்கப்படாத சூழ்நிலையை பெரம்பலூர் மாவட்டத்தில் காண முடிகிறது. எனவே, சிறப்பான தடுப்புப் பணிகளை மேற்கொண்ட மாவட்ட நிருவாகம், சுகாதாரத் துறை மற்றும் பல்வேறு துறைகளுக்கு என்னுடைய பாராட்டுகளை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். தேனி மாவட்டம் தவிர்த்து, தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களுக்கும் நானே

நேரடியாகச் சென்று இந்நோய்ப் பரவல் தடுப்புப் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினேன். சென்னை மாநகராட்சியிலும் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. அனைத்து மாவட்டங்களிலும் தொற்று ஏற்பட்டவர்களைக் காணமுடிந்தபோது, இறுதியாக பெரம்பலூர் மாவட்டத்தில் ஒருவருக்குக்கூட தொற்று ஏற்படாத நிலையுள்ளது பாராட்டுக்குரியது. இது நாம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு கிடைத்த பலன். எனவே, இதற்காக பாடுபட்ட அனைத்து அரசு அலுவலர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்டத்தில், இந்நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் 2,252 நபர்கள், குணமடைந்தவர்கள் 2,225 நபர்கள், இறந்தவர்கள் 21 நபர்கள். 16.12.2020 அன்று இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எவருமில்லை, இறப்பும் கிடையாது. தற்போது சிகிச்சை பெற்று வருபவர்கள் 6 நபர்கள். 16.12.2020 வரை 63,639 பரிசோதனைகள் நடைபெற்றுள்ளன. நேற்றையதினம் மட்டும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் 502 நபர்கள். இந்த மாவட்டத்தில் பரிசோதனை நிலையங்கள் இரண்டு உள்ளன. இந்நோய்த் தொற்றுப் பரவல் ஏற்பட்டவர்களை குணமடையச் செய்வதற்கு போதிய அளவு மருத்துவமனைகள், படுக்கை வசதிகள் அமைக்கப்பட்டு, போதிய மருத்துவ உபகரணங்கள் கையிருப்பில் உள்ளன. N–95 முகக்கவசம், மும்மடிக் முகக்கவசம், PPE Kits, தெர்மல் ஸ்கேனர், RT-PCR Kits, Zinc மற்றும் Multi-vitamin மாத்திரைகள் இம்மாவட்டத்தில் போதிய அளவு கையிருப்பில் உள்ளன. இந்நோய்ப் பரவலைத் தடுக்க, அரசால் நியமிக்கப்பட்ட மருத்துவ நிபுணர்கள் குழு வழங்கிய ஆலோசனைகளின்படி, அனைத்து பகுதிகளிலும் காய்ச்சல் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டன. இம்மாவட்டத்தில் நாளொன்றுக்கு 30 காய்ச்சல் முகாம்கள் என்ற அளவில், நேற்றையதினம் வரை 7,221 காய்ச்சல் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டு, அதில் 1,88,785 நபர்களுக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவலால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிய சுகாதாரத் துறை, உள்ளாட்சித் துறை மூலமாக நியமிக்கப்பட்ட அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று, வீட்டிலுள்ளவர்களுக்கு காய்ச்சல், சளி, தொண்டை வலி, இருமல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக அவர்களை பரிசோதனைக்கு உட்படுத்தி, சிகிச்சை அளித்து குணமடையச் செய்ததோடு மட்டுமல்லாமல், எந்தவொரு பகுதியிலும் தொற்று ஏற்பட்டால் அதை, மாவட்ட நிருவாகம் / சுகாதாரத் துறை கவனத்திற்குக் கொண்டு வந்தால், உடனடியாக அந்தப் பகுதிக்கு நடமாடும் மருத்துவக் குழுவை அனுப்பி, அந்தப் பகுதி மக்களுக்கு பரிசோதனை செய்து நோய் அறிகுறி உள்ளவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு **பெரம்பலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றே இல்லை என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது.** இம்மாவட்டத்தில் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகள் ஏதும் இல்லை. இந்நோய்த் தொற்றுப் பரவலைத் தடுக்க இம்மாவட்டத்தில் செலவழிக்கப்பட்ட தொகை ரூ.6.48 கோடியாகும். இவ்வாறு பல்வேறு வகைகளில் இந்நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்ட மாவட்ட நிருவாகத்திற்கு மீண்டும் ஒருமுறை என்னுடைய பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள ஏழை, எளிய மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க பொதுமக்கள் அரசை நாடிச் செல்வதைத் தவிர்த்து, அரசே மக்களை நாடிச் சென்று, மக்களுக்குத் தேவையான உதவிகளை மேற்கொள்ள, நான் ஏற்கெனவே சட்டமன்றத்தில் சட்டப்பேரவை விதி 110இன் கீழ், முதலமைச்சரின் சிறப்பு மக்கள் குறை தீர்க்கும் முகாம் நடத்தப்படுமென்று அறிவித்ததன் அடிப்படையில் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் முதலமைச்சரின் சிறப்பு மக்கள் குறை தீர்க்கும் முகாம்கள் நடத்தப்பட்டன. பெரம்பலூர் மாவட்டத்தில், 152 கிராமங்களில் நடைபெற்ற இந்த முகாம்களில் பெறப்பட்ட 9,844 மனுக்களில் 4,498 மனுக்கள் தகுதியானவை என்று கண்டறியப்பட்டுள்ளது. இதில் பட்டா மாற்றம் ஏற்பு 1,374 மனுக்கள், முதியோர் ஓய்வூதியத் தொகை திட்டத்தின் கீழ், ஏற்கப்பட்டவை 1,111 மனுக்கள். 2019–2020ஆம் நிதியாண்டில் 6,000 நபர்களுக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 100 விழுக்காடு இம்மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது. சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் அனைத்து ஓய்வூதிய திட்டங்களின் மூலம் 45,857 பயனாளிகளுக்கு ரூ.1,000 வீதம் மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

“பெரம்பலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றே இல்லை என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது.”

பொதுப்பணித் துறையில், நபார்டு திட்டத்தின் கீழ், வேப்பந்தட்டை வட்டம், தொண்டமாந்துறை கிராமத்தில் கல்லார் ஓடையின் குறுக்கே ரூ.33.07 கோடி மதிப்பீட்டில் விசுவகுடி நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டுள்ளது. நபார்டு திட்டத்தின் கீழ், குன்னம் வட்டம், கீழகுடிக்காடு கிராமம் வெள்ளாறின் குறுக்கே ரூ.8.11 கோடி மதிப்பீட்டில் அணைகட்டு கட்டும் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. நபார்டு திட்டத்தின் கீழ், வேப்பந்தட்டை வட்டம், வி.களத்தூர் கிராமம் கல்லாற்றின் குறுக்கே ரூ.8 கோடி மதிப்பீட்டில் அணை கட்டும் பணி நிறைவு பெற்றுள்ளது. ஆலத்தூர் வட்டம், கொட்டரை கிராமம் மருதையாற்றின் குறுக்கே ரூ.92.70 கோடி மதிப்பீட்டில் புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. வேப்பந்தட்டை வட்டம், வாலிகண்டாபுரம் கிராமத்தில் ரூ.79 இலட்சம் மதிப்பீட்டில் வாலிகண்டாபுரம் அணைக்கட்டு புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவின்போது, விசுவக்குடி அணைப் பகுதியில் சுற்றுலா மேம்பாட்டிற்கான அடிப்படை வசதிகள் ரூ.2 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுமென்று என்னால் அறிவிக்கப்பட்ட பணிகள் நிறைவு பெற்று இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குன்னம் வட்டம், வடக்கலூர் அக்ரஹாரம் கிராமத்தில் சின்னாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைக்கட்டினை ரூ.5.94 கோடி மதிப்பீட்டில் மறு கட்டுமானம் செய்யும் பணி மற்றும் வேப்பந்தட்டை வட்டம், வி.களத்தூர் கிராமத்தில் கல்லார் ஆற்றின் குறுக்கே ரூ.6.2 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணி 2020–2021ஆம் ஆண்டில் என்னால் அறிவிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு, பணி விரைவில் தொடங்கப்படவுள்ளது. வேப்பந்தட்டை வட்டம், பாண்டகபாடி கிராமம் கல்லாற்றின் குறுக்கே ரூ.6.70 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணி மற்றும் வேப்பந்தட்டை வட்டம், வெங்கலம் கிராமத்தில், கல்லாறு ஆற்றின் குறுக்கே ரூ.5.35 கோடி மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை அமைக்கும் பணி, குன்னம் வட்டம், எழுமூர் ஓடையின் குறுக்கே ரூ.8.56 கோடி மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ஆகியவை 2020–2021ஆம் ஆண்டில் என்னால் அறிவிக்கப்பட்டுள்ளது, பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது.

குடிமராமத்துத் திட்டத்தின் கீழ், பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த மூன்றாண்டுகளில் 38 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, ரூ.5.97 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெறுகின்றன. 2020–2021ஆம் ஆண்டில் குடிமராமத்து திட்டத்தில் 14 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, ரூ.3.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதில் 7 பணிகள் நிறைவடைந்துள்ளன, மீதமுள்ள 7 பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் பெரம்பலூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் கட்டும் பணி முடிக்கப்பட்டு 04.11.2020 அன்று திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது. நெடுஞ்சாலைத் துறையில், பெரம்பலூர் நகருக்கு மூன்றாம் கட்ட புறவழிச்சாலை, துறையூர்–பெரம்பலூர் சாலை செஞ்சேரி கிராமத்திலிருந்து, தேசிய நெடுஞ்சாலை எண்.45 சிறுவாச்சூர் கிராமத்தில் இணையும் வகையில் புறவழிச்சாலை அமைக்க என்னால் அறிவிக்கப்பட்டு, விரிவான திட்ட வரைவு அறிக்கை ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. பெரம்பலூர் மாவட்டம், திருவாளந்துறை கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய சாலை மற்றும் கடலூர் மாவட்டம், கீழக்கல்பூண்டி கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய சாலை ஆகியவற்றை இணைக்கும் வகையில் வெள்ளாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் ரூ.10.34 கோடி மதிப்பீட்டில் என்னால் அறிவிக்கப்பட்டு, பணிகள் விரைவில் துவங்கப்படும். ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் துறையூர்–பெரம்பலூர் மாநில நெடுஞ்சாலை எண். 142இல் பெரம்பலூர் மாவட்ட எல்லையில் 22.70 கி.மீ. நீளத்திற்கு ரூ.148.30 கோடி மதிப்பீட்டில் இருவழிச் சாலையை அகலப்படுத்தி மேம்பாடு செய்ய அறிவிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் நிலையில் உள்ளது. விரைவில் பணிகள் துவங்கப்படவுள்ளது.

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரை, பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தில், 2016–2017 முதல் 2019–2020 வரை, பெரம்பலூர் மாவட்டத்தில் இழப்பீட்டுத் தொகையாக ரூ.15.43 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சுமார் 47,176 விவசாயிகள் பயனடைந்திருக்கின்றனர். 2016–2017ஆம் ஆண்டில் பெரம்பலூர் மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.50.53 கோடி இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் 2018–2019ஆம் ஆண்டில் மக்காச்சோளப் பயிர் அமெரிக்க படைப்புழுவால் தாக்கப்பட்டு பெரும் நஷ்டத்திற்குள்ளான விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.32.18 கோடி வழங்கப்பட்டது.

ஊரக வளர்ச்சியை பொறுத்தவரை, பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தில், 2016–2017ஆம் ஆண்டு முதல் 2019–2020ஆம் ஆண்டு வரை 7,889 பணிகள்

ரூ.134.11 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு 4,044 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, விரைவில் முடிக்கப்படும். பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீடு கட்டும் திட்டத்தில் பெரம்பலூர் வட்டம், கவுல்பாளையம் கிராமம், துறைமங்கலம் திட்டப்பகுதியில் 504 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.41.02 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. சொந்த இடத்தில் வீடு கட்டும் திட்டத்தில் பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில்; 490 பயனாளிகளுக்கு ரூ.147 இலட்சம் மதிப்பீட்டில் வீடு கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 283 வீடுகள் முடிக்கப்பட்டு, 207 வீடுகள் பணி முன்னேற்றத்திலும் உள்ளன. பேரூராட்சி பகுதிகளில் 280 பயனாளிகளுக்கு ரூ.8.40 கோடி மதிப்பீட்டில் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 26 வீடுகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 254 வீடுகள் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது, பணிகள் விரைவாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ், 2020–2021ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 25 ஊராட்சிகளில் ரூ.22.89 கோடி மதிப்பீட்டில் குடிநீர் இணைப்புப் பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 73 கிராம குடியிருப்புகளுக்கு புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் ரூ.22.84 கோடி மதிப்பீட்டில் என்னால் அறிவிக்கப்பட்டது, பணி விரைவில் துவங்கப்படும். பெரம்பலூர் நகராட்சிக்கு தனியாக கொள்ளிடம் ஆற்றினை நீர் ஆதாரமாகக் கொண்டு குடிநீர் வழங்கும் திட்டம் ரூ.300 கோடி மதிப்பீட்டில் என்னால் அறிவிக்கப்பட்டு, ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விரைவில் பணிகள் துவங்கப்படும். 26.11.2020 அன்று தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மூலம் பெரம்பலூர் வட்டம், துறைமங்கலம் கிராமத்தில் 504 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்காக ரூ.41.02 கோடி மதிப்பீட்டில் என்னால் அறிவிக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் நிறைவுற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் 4,162 சுய உதவிக் குழுக்களில், 54,129 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். 2020–2021ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.196 கோடி வங்கி இணைப்புக் கடன் வழங்கப்படுள்ளது. அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தின் கீழ், இதுவரை 20,328 பயனாளிகளுக்கு அம்மா இருசக்கர வாகனத்திற்கான மானியம் வழங்கப்பட்டுள்ளது. 2019–2020ஆம் ஆண்டில் 810 நபர்களுக்கு வாகன ஒதுக்கீடு வழங்கப்பட்டு, அதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

தொழில் துறையைப் பொறுத்தவரை, மத்திய அரசின் சொத்து பிணையில்லா அவசரகால கூடுதல் கடன் திட்டத்தின் இம்மாவட்டத்தைப் பொறுத்தவரை, 2,069 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.38.99 கோடி கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 2019இல் இரண்டாவது உலக முதலீட்டாளர் மாநாட்டில் 98 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் ரூ.128.57 கோடி முதலீட்டில், 3,690 நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. இதுவரை பெரம்பலூர் மாவட்டத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு, 33 நிறுவனங்கள் ரூ.17.76 கோடி முதலீட்டில் துவங்கப்பட்டு, அதன்மூலம் 386 நபர்களுக்கு வேலை கிடைத்திருக்கின்றது. தற்போது இயங்கி வரும் எளம்பலூர் தொழிற்பேட்டைக்கு அருகில் புல எண் 27.23இல் உள்ள 7.60 ஏக்கர் பரப்பளவில் புதிய தொழிற்பேட்டை அமைக்க நிலம் கையகப்படுத்தப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் மாண்புமிகு அம்மாவின் அரசால் பல்வேறு பணிகள் அறிவிக்கப்பட்டு அந்தப் பணிகளெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இன்றையதினம் ரூ.19.25 கோடி மதிப்பிலான 4 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன. ரூ.24.41 கோடி மதிப்பீட்டிலான 8 கட்டடங்களுக்கு திறப்பு விழா செய்யப்பட்டுள்ளது. நலத்திட்டங்களைப் பொறுத்தவரை, 1,614 பயனாளிகளுக்கு ரூ.23.58 கோடி மதிப்பீட்டில் இன்றைக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இப்படி பல்வேறு பணிகள் இந்த மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்னும் பல பணிகள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

மாண்புமிகு அம்மாவின் அரசு கடும் முயற்சி எடுத்ததன் விளைவாக, பெரம்பலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதோடு மாண்புமிகு அம்மாவின் அரசால் அறிவித்த பெரும்பாலான திட்டங்கள் நிறைவு பெற்றிருக்கின்றன, பல திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்னும் சில திட்டங்கள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றது என்பதைத் தெரிவித்து, என் உரையை நிறைவு செய்கின்றேன்.

பெரம்பலூர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

படமும் / செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 17.12.2020 அன்று பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ரூ.24.41 கோடி மதிப்பீட்டிலான 8 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, ரூ.19.25 கோடி மதிப்பீட்டிலான 4 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 17.12.2020 அன்று பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன், சட்டமன்ற உறுப்பினர்கள், பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ப. ஸ்ரீ வெங்கட பிரியா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்டாசு மற்றும் தீப்பெட்டி தயாரிப்பு தொழிலாளர்களுக்கென தனியே, அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியம் அமைக்க ஆணை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 11.11.2020 அன்று விருதுநகரில் கீழ்க்கண்ட அறிவிப்பினை அறிவித்தார்கள்:–

“மாண்புமிகு அம்மாவின் அரசு அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு அளிப்பதில் நாட்டிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. தற்போது, உடலுழைப்பு தொழிலாளர்கள் நலவாரியத்தின் கீழ், பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலாளர்கள் தங்களது நலஉதவிகளை பெற்று வருகின்றனர். இதில், சுமார் 4 இலட்சம் பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் வகையில், அவர்களுக்கென தனியே ஒரு நலவாரியம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களும், விருதுநகர் மாவட்ட பட்டாசு மற்றும் தீப்பெட்டி தயாரிப்பு தொழில் அமைப்பை சேர்ந்தவர்களும் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் 4 இலட்சம் தொழிலாளர்களின் நலனை கருத்தில்கொண்டு, மாண்புமிகு அம்மாவின் அரசு பட்டாசு மற்றும் தீப்பெட்டி தயாரிப்பு தொழிலாளர்களுக்கென தனியே ஒரு அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியத்தை அமைக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.”

மேற்படி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலாளர்கள் நலவாரியம், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும், அரசு பிரதிநிதிகளாக செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தொழிலாளர் ஆணையர் மற்றும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் ஆகியோரும் அலுவல்சாரா உறுப்பினர்களாக, வேலையளிப்போர் பிரதிநிதிகளாக பட்டாசு தொழிற்சாலை சார்பான பிரதிநிதி, தீப்பெட்டி தொழிற்சாலை சார்பான பிரதிநிதி மற்றும் தொழிற் கூட்டமைப்பின் பிரதிநிதி ஆகியோரும், தொழிலாளர்கள் பிரதிநிதிகளாக பட்டாசு தொழிற்சாலை தொழிற்சங்கத்தின் பிரதிநிதி, தீப்பெட்டி தொழிற்சாலை தொழிற்சங்கத்தின் பிரதிநிதி மற்றும் பிற தொழிற்சங்க பிரதிநிதி ஆகியோர் அடங்கிய வாரியம் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மேற்கூறிய ஆணைக்கிணங்க அரசாணை எண்.214, தொ (ம) வே.வா துறை, நாள் 30.12.2020இல் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலவாரியத்தில் ஏற்கெனவே பதிவு செய்துள்ள 62,661 பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு இந்நலவாரியம் தொடங்கப்படும். இன்றைய தேதியில் 1,250 பட்டாசு தொழிற்சாலைகளும், 870 தீப்பெட்டி தொழிற்சாலைகளும் உரிமம் பெற்று இயங்கி வருகின்றன. இதில், ஏறத்தாழ 1,20,000 தொழிலாளர்கள் இத்தொழிற்சாலைகளில் பணிபுரிந்து வருவதாக தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார். இத்தொழிற்சாலைகளில் பணிபுரியும் அனைத்து அமைப்புசாரா தொழிலாளர்களும் அமைக்கப்படவிருக்கும் புதிய நலவாரியத்தில் உறுப்பினர்களாக சேர்ந்து பயன் பெறலாம். இந்நலவாரியத்தின் தலைமையிடம் சென்னையில் செயல்படும்.

ABSTRACT

Public Services –Amendment to Special Rules for Tamil Nadu Basic Service – Direct Recruitment – Enhancement, of age limit from 30 to 32 years to Backward Classes, Backward Class Muslims, Most Backward Classes and Denotified Communities – Orders - Issued.

PERSONNEL AND ADMINISTRATIVE REFORMS (F) DEPARTMENT

G.O.(Ms).No.113

Dated: 01.10.2020,
சார்வரி, புரட்டாசி 15,
திருவள்ளுவர் ஆண்டு 2051.

Read:

1. G.O. (Ms). No. 71, Backward Classes and Most Backward Classes Welfare Department, dated 20.10.1993.
2. G.O. (Ms). No. 16, Backward Classes and Most Backward Classes Welfare Department, dated 03.05.2002.

ORDER:

Orders were issued in the Government orders read above that the candidates belonging to Most Backward Classes, Denotified Communities and Backward Classes respectively, who do not possess a qualification higher than the Minimum General Educational Qualification (SSLC), the age limit for direct recruitment to the posts for which SSLC or below is prescribed as the minimum educational qualification at entry level, be enhanced from 30 (Thirty) to 32 (Thirty two) years. The Special Rules for Tamil Nadu Basic Service shall be amended suitably. Accordingly, the following Notification will be published in the Tamil Nadu Government Gazette:-

NOTIFICATION

In exercise of the powers conferred by the proviso to Article 309 of the Constitution of India, the Governor of Tamil Nadu hereby makes the following amendments to the Special Rules for Tamil Nadu Basic Service (Section 19 in Volume III of the Tamil Nadu Services Manual, 2016).

-2-

2 (i). The amendments (1) and (4) hereby made shall be deemed to have come into force on the 20th October 1993.

(ii) The amendment (2) hereby made shall be deemed to have come into force on the 3rd May 2002.

(iii) The amendment (3) hereby made shall be deemed to have come into force on the 15th September 2007.

AMENDMENTS

In the said Special Rules, in rule 5, in sub-rule (1), -

(1) after the first proviso, the following proviso shall be inserted, namely :-

"Provided further that the candidates belonging to Most Backward Classes and Denotified Communities, who do not possess a qualification higher than the Minimum General Educational Qualification, shall be eligible for appointment to the above classes, if he has not completed 32 years of age on the date of appointment :";

(2) in the second proviso as so inserted, for the expression "Most Backward Classes", the expression "Backward Classes, Most Backward Classes" shall be substituted;

(3) in the second proviso as so amended, for the expression "Backward Classes, Most Backward Classes", the expression "Backward Classes, Backward Class Muslims, Most Backward Classes" shall be substituted;

(4) in the third proviso, for the word "further", the word "also" shall be substituted.

(BY ORDER OF THE GOVERNOR)

S. SWARNA
SECRETARY TO GOVERNMEN

மரம் ஏற்றிச்செல்லப்படுகிறது.

முடிவுக்கு வந்துள்ளனர் தமிழக அரசின் வனத்துறையினர்.

சென்ற ஆண்டு, ஆய்வு முறையில் இந்தப் பணி நடைபெற்றது. ஏறக் குறைய 9 மரங்கள் பெயர்த்து நடப் பெற்றன. அவற்றில் 8 மரங்கள் உயிர் பெற்றுத் தழைத்தன. அதனால் இந்தப் பணியைத் தொடர்வதற்கு வனத்துறை முடிவெடுத்தது. அண்மையில் சில மரங்கள் நடப்பெற்றுள்ளன. மொத்தம் 100மரங்களை இந்த ஆண்டுக்குள் நடுவதற்குத் திட்டம் உள்ளது.

வேடந்தாங்கலுக்கு அருகில் உள்ள சிற்றூரில் இந்த நீர்க்கடப்பை மரங்கள் உண்டாக்கப்பெற்று, அவை அப்படியே பெயர்த்து எடுத்து வரப்பெற்று, நடப் பெறுகின்றன. இதில் கவனிக்கப்பட வேண்டிய செய்தி என்னவென்றால், இந்த மரங்கள் பெயர்த்துக் கொண்டு வரப்பட்ட 24 மணி நேரத்துக்குள் மீண்டும் நடப்பெற வேண்டும்.

எனவே நீர்க்கடப்பை மரங்கள் மிக அதிக அளவில் நடப்பெறுவதால் புத்தாண்டில் (1975) சரணாலயம் நோக்கிப் பறவைகள் படையெடுத்து வரும் என்று எதிர்பார்க்கப்பெறுகிறது.

—த. பி.

மரம் நடு விழா!

அண்மையில் செங்கை மாவட்டத்தில் மரம் நடுவிழா நடைபெற்றிருக்கிறது. செடியை நட்டுவிட்டு மரம் நடு விழா (வன மகோத்சவம்) என்று சொல்வார்களே அப்படி இல்லாமல் மெய்யாகவே ஓர் இடத்திலுள்ள மரத்தைப் பெயர்த்து எடுத்து வந்து மற்றோர் இடத்தில் நடுகின்ற விழா இது!

புதிர் போடுவது போலத் தோன்றுகிறதல்லவா? புதிரல்ல! நடைபெற்ற நிகழ்ச்சி-நடைபெறும் நிகழ்ச்சி -நாளையும் நடைபெறப் போகும் நிகழ்ச்சி.

வேடந்தாங்கலுக்குப் பறவைகள் சரண்புக வருகின்றன அல்லவா? அவை ஏரியின் உள்ளே காணப்பெறும் நீர்க் கடப்பை மரங்களைத்தான் நாடி வருகின்றன. அருகில் வேறு பல வகை மரங்கள் இருந்தாலும் நீர்க்கடப்பை மரங்களில் தான் பறவைகள் கூடு கட்டுகின்றன; குடியிருக்கின்றன. எனவே ஏரியினுள் நீர்க் கடப்பை மரங்களை அதிக அளவில் இடம்பெறச் செய்ய வேண்டும் என்ற



மரம் நடப்படுகிறது.

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தில், தமிழ்நாடு அரசால் மேற்கூரை அமைக்க வழங்கப்பட்ட தொகை ரூ.50,000லிருந்து உயர்த்தி ரூ.1,20,000ஆக வழங்க உத்தரவு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் அறிக்கை – 22.12.2020

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்) மத்திய அரசு பங்களிப்புடன் தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2016–2017 முதல் 2019–2020ஆம் ஆண்டுவரை இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 8 ஆயிரத்து 968 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 5 இலட்சத்து 27 ஆயிரத்து 552 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 4,01,848 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் (ஊரகம்) கீழ், ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ.1,20,000/– ஆகும். இதில் மத்திய அரசின் (60%) பங்குத் தொகை ரூ.72,000/– மற்றும் மாநில அரசின் (40%) பங்குத் தொகை ரூ.48,000/– ஆகும். இத்துடன் கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்காக தமிழ்நாடு அரசு, கூடுதல் நிதியாக ரூ.50,000/– ஒவ்வொரு வீட்டிற்கும் அளித்து வருகிறது. இத்தொகையுடன் ஒரு வீட்டிற்கான மொத்த அலகு தொகை ரூ.1,70,000 ஆகும். இந்த அலகுத் தொகையுடன் கூடுதலாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில் 90 மனித சக்தி நாட்களுக்கான ஊதியம் ரூ.23,040/– மற்றும் தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டும் பணிக்கு ரூ.12,000/– ஒருங்கிணைந்து வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து என்னால் ஆய்வு செய்யப்பட்டது. தற்போது கட்டுமானப் பொருள்களின் விலையேற்றம் காரணமாகவும், கொரோனா காலத்தில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாலும், மேற்கண்ட அலகுத் தொகையினைக் கொண்டு ஏழை, எளிய மக்கள் வீட்டினை கட்ட இயலாத நிலை உள்ளதாகவும், தகுதியான குடும்பங்கள் வீடுகளை தாங்களே கட்ட இயலாத நிலையில் உள்ளதாகவும் எனது ஆய்வில் தெரிய வந்தது. எனவே ஏழை, எளிய மக்களின் கனவான குடியிருப்பு வீடுகட்டுவதை உறுதிப்படுத்தும் வகையில், தமிழ்நாடு அரசால் ஏற்கெனவே மேற்கூரை அமைக்க கூடுதலாக வழங்கப்பட்டு வந்த ரூ.50,000/– ஐ உயர்த்தி ரூ.1,20,000/– வழங்க உத்தரவிட்டுள்ளேன். இதன் மூலம் ஒவ்வொரு வீட்டிற்கும் அலகு தொகை ரூ1,70,000/– லிருந்து ரூ.2,40,000/– ஆக உயர்த்தப்படுகிறது. இந்த தொகையுடன் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ரூ.23,040/– மற்றும் தனி நபர் இல்லக் கழிப்பறை கட்ட ரூ.12,000/– சேர்த்து மொத்தம் ஒரு வீட்டிற்கு ரூ.2,75,040/– வழங்கப்படும். இதற்காக தமிழ்நாடு அரசால் கூடுதலாக ரூ.1,805.48 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். இதனால் சுமார் 2,50,000 பயனாளிகள் பயன் பெறுவர்.

இந்த கூடுதல் நிதி உதவியால் கட்டி முடிக்காமல் உள்ள வீடுகள் கட்டி முடிக்கப்படுவதுடன், தாங்களே கட்ட வசதியில்லாத பயனாளிகளுக்கும் வீடுகள் ஒதுக்கப்பட்டு, தமிழ்நாடு ஊரக வீட்டுவசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் உதவியோடு கட்டி முடிக்க உத்தரவிட்டுள்ளேன். ஏழை, எளிய மக்களின் துயர் துடைக்கும் அரசாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது என்று பெருமிதத்துடன் இதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாகப்பட்டினம் மாவட்டத்தைப் பிரித்து மயிலாடுதுறையை தலைமையிடமாகக் கொண்டு புதியதாக மயிலாடுதுறை மாவட்டம் தோற்றுவிப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 28.12.2020 அன்று தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக்காட்சி மூலம் தொடங்கி வைத்தார்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 28.12.2020 அன்று தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், நாகப்பட்டினம் மாவட்டத்தை பிரித்து மயிலாடுதுறையை தலைமையிடமாகக் கொண்டு புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்டத்தை காணொலிக் காட்சி மூலமாகத் தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 24.03.2020 அன்று சட்டப்பேரவை விதி எண் 110இன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், நிருவாக வசதிக்காகவும், மக்களுக்கு அரசின் திட்டங்கள் விரைந்து சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்திலும், நாகப்பட்டினம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, தமிழ்நாட்டின் 38ஆவது மாவட்டமாக மயிலாடுதுறை மாவட்டம் உருவாக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, மாநிலத்தின் 38ஆவது மாவட்டமாக மயிலாடுதுறை மாவட்டத்தை உருவாக்கிட 07.04.2020 அன்று அரசாணை வெளியிடப்பட்டது. மேலும், மயிலாடுதுறை மாவட்ட உருவாக்கத்திற்கான சிறப்பு அலுவலர் நியமிக்கப்பட்டு, புதிய மாவட்டம் தோற்றுவிப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதனைத் தொடர்ந்து, மயிலாடுதுறை புதிய மாவட்டம் தோற்றுவிக்கப்பட்டதற்கான அரசாணை (நிலை) எண் 796, நாள் 28.12.2020 அன்று வெளியிடப்பட்டது.

நாகப்பட்டினம் மாவட்டத்தை பிரித்து மயிலாடுதுறையை தலைமையிடமாகக் கொண்டு புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகத் தொடங்கி வைத்தார்கள். இப்புதிய மாவட்டமானது, மயிலாடுதுறை மற்றும் சீர்காழி ஆகிய இரண்டு வருவாய் கோட்டங்கள், மயிலாடுதுறை, சீர்காழி, குத்தாலம் மற்றும் தரங்கம்பாடி ஆகிய நான்கு வருவாய் வட்டங்கள், 15 வருவாய் குறு வட்டங்கள் மற்றும் 287 வருவாய் கிராமங்களை உள்ளடக்கி தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்ட மக்கள், அரசுக்கு வைத்த கோரிக்கையினை ஏற்று, ரூ.347 கோடி மதிப்பீட்டில் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டும் பணி நடைபெற்று வருகிறது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் தலைமையில் 17.12.2020 அன்று அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தொற்றுப் பரவல் தடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

அரியலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவல் தடுப்புப் பணிகள் மற்றும் அரசால் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பங்குபெற்றுள்ள அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

அரியலூர் மாவட்டத்தில், ஆரம்பத்தில் சற்று அதிகமாக இருந்து, கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவல் அரசு அறிவித்த ஆலோசனைகளின்படி, மாவட்ட நிருவாகமும் சுகாதாரத் துறையும் சரியான முறையில் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக தற்போது படிப்படியாகக் குறைந்து, கட்டுப்பாட்டிற்குள் உள்ளது.

அரியலூர் மாவட்டத்திலிருந்து தொழில் ரீதியாகவும், தொழிலாளர்களாகவும் பலர் வெளியிடங்களுக்கு சென்று பணிபுரிந்து மீண்டும் அரியலூர் திரும்பியபோது பலருக்கு தொற்று கண்டுபிடிக்கப்பட்டது. அப்போதுதான், அரியலூர் மாவட்டத்தில் முதன்முதலாக தொற்று ஏற்படக்கூடிய சூழல் உருவாகியது. எனவே, வெளியூர் சென்று திரும்பியவர்களுக்கு, பரிசோதனைகள் மேற்கொண்டு தகுந்த சிகிச்சை அளித்ததால் இம்மாவட்டத்தில் நோய்த் தொற்றுப் பரவல் கட்டுப்படுத்தப்பட்டு, மேலும், பரவாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது.

அரியலூர் மாவட்டத்தில், இந்நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் 4,613 நபர்கள், குணமடைந்தவர்கள் 4,554 நபர்கள், இறந்தவர்கள் 48 நபர்கள்.

16.12.2020 அன்று மட்டும் இந்நோயால் பாதிக்கப்பட்டவர் 1 நபர், குணமடைந்தவர்கள் 10 நபர்கள். தற்போது சிகிச்சை பெற்று வருபவர்கள் 11 நபர்கள். 16.12.2020 வரை 95,066 பரிசோதனைகள் நடைபெற்றுள்ளன. நேற்றையதினம் மட்டும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் 444 நபர்கள். இந்த மாவட்டத்தில் பரிசோதனை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அரியலூர் மாவட்டத்தில் இந்நோய் தொற்றுப் பரவல் ஏற்பட்டவர்களை குணமடையச் செய்வதற்கு போதிய அளவு மருத்துவமனைகள் அமைக்கப்பட்டு, போதிய மருத்துவ உபகரணங்கள் கையிருப்பில் உள்ளன. N–95 முகக்கவசம், மும்மடி முகக்கவசம், PPE Kits, தெர்மல் ஸ்கேனர், RT-PCR Kits, Zinc மற்றும் Multi-vitamin மாத்திரைகள் இம்மாவட்டத்தில் போதிய அளவு கையிருப்பில் உள்ளன. இந்நோய்ப் பரவலைத் தடுக்க, அனைத்து பகுதிகளிலும் காய்ச்சல் பரிசோதனை முகாம்கள் நடத்த வேண்டுமென்று வழங்கப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில், இம்மாவட்டத்தில் தினந்தோறும் காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. நேற்றையதினம் 25 காய்ச்சல் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டன. இதுவரை மொத்தம் 510 காய்ச்சல் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டு, அதில் 2,81,099 நபர்களுக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு, மாண்புமிகு அம்மாவின் அரசு அறிவித்த வழிமுறைகளை அரியலூர் மாவட்ட நிருவாகமும், சுகாதாரத் துறையும் இணைந்து சரியான முறையில் பின்பற்றிய காரணத்தினால், இந்நோய்ப் பரவல் பெருமளவு குறைக்கப்பட்டு, கட்டுப்பாட்டிற்குள் உள்ளது.

முதலமைச்சரின் சிறப்புக் குறைதீர்க்கும் முகாம்

நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள ஏழை, எளிய மக்களின் பிரச்சினைகளை தீர்க்க பொதுமக்கள் அரசை நாடிச் செல்வதைத் தவிர்த்து, அரசே மக்களை நாடிச் சென்று, மக்களுக்குத் தேவையான உதவிகளை மேற்கொள்ள, நான் ஏற்கெனவே சட்டமன்றத்தில் சட்டப்பேரவை விதி 110இன் கீழ், முதலமைச்சரின் சிறப்புக் குறை தீர்க்கும் முகாம் நடத்தப்படுமென்று அறிவித்ததன் அடிப்படையில் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் முதலமைச்சரின் சிறப்புக் குறை தீர்க்கும் முகாம்கள் நடத்தப்பட்டன. இம்முகாமின் மூலம், அரியலூர் மாவட்டத்தில் பெறப்பட்ட 30,422 மனுக்களில் தகுதியான 20,053 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன. முதலமைச்சரின் சிறப்புக் குறை தீர்க்கும் திட்டத்தில் பெறப்பட்ட மனுக்களில், 15,630 மனுக்கள் ஓய்வூதியம் வேண்டியும், 7,838 மனுக்கள் வீட்டுமனைப் பட்டா மாறுதல் வேண்டியும் விண்ணப்பித்துள்ளனர். மாண்புமிகு அம்மாவின் அரசு அவற்றையெல்லாம் ஆய்வு செய்து மாவட்ட நிருவாகம் மூலம் தகுதியானவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2019–2020ஆம் நிதியாண்டில் 6,000 நபர்களுக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை இம்மாவட்டத்தில், 6,316 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளும் பணிகள்

பொதுப்பணித் துறையின் சார்பாக 2019–2020ஆம் ஆண்டில் 6 தடுப்பணைகள் கட்டும் பணிகள் மற்றும் 8 ஏரிகள் புனரமைக்கும் பணிகள் என மொத்தம் 14 பணிகள் ரூ.63.95 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு 13 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள, சுண்டக்குடி கிராமத்தில் தடுப்பணை கட்டும் ஒரு பணி முடியும் தருவாயில் உள்ளது. 2019–2020ஆம் ஆண்டில் தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டம் பகுதி 2இன் கீழ் அரியலூர் மற்றும் வட்டம் நந்தியாறு–கூழையாறு உப வடிநில பகுதியில் ரூ.15.72 கோடி மதிப்பீட்டில் 19 ஏரிகள் மற்றும் 55 கிலோமீட்டர் நீளமுள்ள வாய்க்கால்கள், வரத்து கால்வாய்கள் புனரமைக்கும் பணிகள் 40 விழுக்காடு நிறைவு பெற்றுள்ளது. எஞ்சிய பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2019–2020ஆம் ஆண்டில் அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியத்தை சார்ந்த பழமை வாய்ந்த கரைவெட்டி பறவைகள் சரணாலயம் மேம்படுத்தப்பட்டு, பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள ஏரி ரூ.5 கோடி மதிப்பீட்டில் தூர்வாரி புதுப்பிக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இதில் 25 விழுக்காடு பணிகள் நிறைவு பெற்றுள்ளன. எஞ்சிய பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரியலூர் வட்டம், தவுத்தாய்குளம் கிராமத்தில் மருதையாற்றின் குறுக்கே ரூ.3.75 கோடி மதிப்பீட்டில் ஒரு பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. அரியலூர் வட்டம், சம்பந்தன்குடி கிராமத்தில்

வைப்பம் குளத்திற்கு நீர் வழங்கும் பொருட்டு, அருங்கால் ஒடையின் குறுக்கே ரூ.2 கோடி மதிப்பீட்டில் ஒரு அணைக்கட்டு அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

மாவட்டத்தில் மேற்கொள்ளும் மருத்துவ வளர்ச்சிப் பணிகள்

அரியலூர் மாவட்ட தலைமை மருத்துவமனை வளாகத்தில் கூடுதலாக 200 படுக்கைகள் மற்றும் அறுவை சிகிச்சை அரங்கு ரூ.6.16 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு வந்துள்ளது. மீன்சுருட்டி, டி.பழூர் மற்றும் விக்கிரமங்கலம் ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகக் கட்டடங்கள் ரூ.1.04 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அரசு தலைமை கொறடா அவர்களும், மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களும், அரியலூர் மாவட்ட மக்களும் அரசுக்குத் தொடர்ந்து வைத்த கோரிக்கையினை ஏற்று, அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக் கட்டடங்கள் கட்டும் பணி ரூ.347 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

ஜெயங்கொண்டம் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் கட்டும் பணி ரூ.20.88 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. தேசிய சுகாதார திட்டத்தின் கீழ், ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் மகப்பேறு மற்றும் குழந்தை பராமரிப்பு பிரிவுக் கட்டடம் கட்டும் பணி ரூ.18 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

நெடுஞ்சாலைத் துறை

நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரை, அரியலூர் நகரத்தில் ரூ.31.23 கோடி மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அரியலூர் மாவட்டம் – கோட்டைக்காடு மற்றும் கடலூர் மாவட்டம் – பெண்ணாடம் ஆகிய பகுதிகளை இணைக்கும் வகையிலும், சில்லக்குடி மற்றும் கல்லகம் இரயில்வே நிலையங்களுக்கு இடையிலும் இரண்டு உயர்மட்ட பாலங்கள் கட்டும் பணிகள் ரூ.41.66 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. வைப்பூர் மற்றும் முத்துவாஞ்சேரி இடையே மருதையாற்றின் குறுக்கே ரூ.38.20 கோடி மதிப்பில் உயர்மட்ட பாலம் கட்ட கருத்துருக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது. கீழப்பழூர் – பூண்டி முதல் அயன்சுத்தமல்லி வரை உள்ள சாலையில் கி.மீ.2/6இல் உயர்மட்ட பாலம் கட்ட ரூ.4.23 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. அரியலூர் நகருக்கு மேற்குபுறமாக புறவழிச்சாலை அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கின்ற பணி நடைபெற்று வருகிறது. பாரத் மாலா பரியோஜனா திட்டத்தின் கீழ், தேசிய நெடுஞ்சாலை–227இல் 59 கி.மீ. நீளத்திற்கு ரூ.1,265 கோடி மதிப்பீட்டில் கல்லகம் கேட் முதல் மேலக்கருப்பூர் வரை நான்கு வழிச்சாலை மற்றும் மேலக்கருப்பூர் முதல் மீன்சுருட்டி வரை இரு வழிச் சாலையாக அகலப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

தேசிய நெடுஞ்சாலை வளர்ச்சித் திட்டத்தின் (NHDP) கீழ் NH 45Cஇல் 50 கி.மீ. நீளத்திற்கு ரூ.1,460 கோடி மதிப்பீட்டில் நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. அரியலூர் முதல் வி.கைகாட்டி வரையிலான 12.40 கி.மீ. நீளமுள்ள இருவழிச் சாலையை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்பாடு செய்திட ரூ.200 கோடி மதிப்பீட்டில் உலக வங்கி கூடுதல் நிதியுதவித் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II, திருச்சி கோட்டத்தின் வாயிலாக விரைவில் பணி துவங்கப்பட உள்ளது.

சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளாண்மைப் பணிகள்

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரை, நுண்ணீர் பாசனத் திட்டத்தில் 4 ஆண்டுகளில்

ரூ.70.14 கோடி மானியத்தில் நுண்ணீர் பாசனம் 50,820 ஏக்கர் நிறுவப்பட்டிருக்கிறது. 2020–2021இல் இந்தத் திட்டத்திற்காக ரூ.35.85 கோடி அரியலூர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் 1,18,531 விவசாயிகள் பதிவு செய்தவர்களில் 80,475 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.60.60 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2016–2017ஆம் ஆண்டு ஏற்பட்ட கடுமையான வறட்சியின்போது, விவசாயிகள் வைத்த கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அம்மாவின் அரசு, மாநில பேரிடர் நிவாரண நிதியாக 49,481 விவசாயிகளுக்கு ரூ.20.47 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2018 – 2019ஆம் ஆண்டில் மக்காச்சோளப் பயிரில் அமெரிக்கன் படைப்புழு தாக்குதலால் அரியலூர் மாவட்டத்தில் மட்டும் பாதிக்கப்பட்ட 16,640 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.8.54 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2019–2020ஆம் ஆண்டில் அமெரிக்கன் படைப்புழுவைக் கட்டுப்படுத்த அரசாங்கத்தால் பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்கப்பட்டது. அரியலூர் மாவட்டத்தில் மட்டும் 5,820 ஹெக்டேர் பரப்பிற்கு பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பதற்கு ரூ.2.3 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டது. நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கத்தில் 62 ஆயிரத்து 500 ஏக்கரில் ரூ.16.48 கோடி செலவில் பல்வேறு பணிகள் செயல்படுத்தப்பட்டு 37 ஆயிரத்து 980 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். இத்திட்டம் 2020–2021இல் 30,000 ஏக்கரில் ரூ.5.74 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

காய்கறிகள் மற்றும் பழங்கள் பதப்படுத்துவதில் மேம்பாடு அடைந்திடவும், விவசாயிகள், உணவு பதப்படுத்துவோர் மற்றும் ஏற்றுமதியாளர்கள் பயன்பெறும் வகையில் திருமானூர் வட்டத்தில், கீழபழூரில் உணவு பூங்கா அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஊரக வளர்ச்சிப் பணிகள்

ஊரக வளர்ச்சித் திட்டத்தில் 2019–2020ஆம் நிதியாண்டில் 98 சிறுபாசன ஏரிகள் ரூ.4.82 கோடி மதிப்பீட்டில் 693 குளங்கள் மற்றும் ஊரணிகள் ரூ.6.76 கோடி மதிப்பீட்டில் தூர்வாரி பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தில் 2016–2017 முதல் 2019–2020 ஆண்டுகளில் 11,931 வீடுகள் அரியலூர் மாவட்டத்தில் தொடங்கப்பட்டு இதுவரை 5,841 வீடுகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதியுள்ள வீடுகளை விரைவாக முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 2017–2018 முதல் 2019–2020 வரை உள்ளாட்சித் துறையில், 698 கி.மீ நீளத்திற்கு, 557 சாலை மேம்பாட்டுப் பணிகள் ரூ.183.54 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 269 சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் துரிதமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பாதுகாப்பான குடிநீர் வழங்கும் திட்டம்

கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு குடிநீர் இணைப்பை வழங்குவதற்காக, ஜல்ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ், 2020–2021 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 95 ஊராட்சிகளில் உள்ள 397 குக்கிராமங்களில் ரூ.45.47 கோடி மதிப்பீட்டில் 60,309 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்குவதற்கான பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. அரியலூர் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் ரூ.30.93 கோடி மதிப்பீட்டில் 28.05.2020 முதல் மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

ரூ.15.18 கோடி மதிப்பீட்டில் திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து அரியலூர் நகராட்சிக்கு வரும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பழைய பிரதான குழாயை மாற்றி புதிய குழாய் அமைத்திடும் பணிகள் நடைபெற்று வருகிறது. ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டத்தின் 2020–2021இன் கீழ், அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் ரூ.8.42 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைப்பதற்கு அரசாணை வழங்கப்பட்டு பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது.

மகளிர் முன்னேற்றம்

மகளிர் திட்டத்தைப் பொறுத்தவரை, அரியலூர் மாவட்டத்தில் இயங்கி வரும் 4,872 சுய உதவிக் குழுக்களில் 61,340 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்களுக்காக மாண்புமிகு அம்மாவின் அரசால் ரூ.324.12 கோடி வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. 2019–2020ஆம் ஆண்டு அரியலூர் மாவட்ட சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.215 கோடிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 1,638 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.50.25 கோடி வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையில் உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கப்படுமென்று தெரிவித்தார்கள். அதனடிப்படையில், அம்மாவின் அரசு கடந்த மூன்றாண்டுகளில் 2,434 மகளிருக்கு மானிய விலையில் இருசக்கர வாகனங்கள் கொடுக்கப்பட்டது. அதற்காக ரூ.5.98 கோடி மானியமாக வழங்கப்பட்டிருக்கின்றது. 2019–2020ஆம் ஆண்டில் 1,088 உழைக்கும் மகளிருக்கு வாகனம் வழங்குவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 258 நபர்களுக்கு வாகனம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக ரூ.64.50 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

தொழில் வளர்ச்சி

தொழில் துறையைப் பொறுத்தவரை, அரியலூர் மாவட்டத்தில, மத்திய அரசின் சொத்து பிணையில்லா அவசரகால கூடுதல் கடன் திட்டத்தில் 2,423 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.27.91 கோடி கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மல்லூர் கிராமத்தில் ஒரு தொழிற்பேட்டை சுமார் 25.34 ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப்பட்டது. முதற்கட்டமாக இத்தொழிற்பேட்டையில் சுமார் 5.51 ஏக்கர் பரப்பளவில் 26 தொழிற்மனைகள் மேம்படுத்தப்பட்டு, 2 தொழில் மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரியலூர், தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தினை விரிவாக்கம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையில் ரூ.850 கோடி மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்யப்பட்டு, இயங்கி வருகிறது.

விலையில்லா கறவை மாடுகள், வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் மக்களுக்கு கொடுத்துள்ளோம். ஊரகப் புறக்கடைக் கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ், மக்களுக்கு விலையில்லா கோழிகள் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் பிரதம மந்திரியின் வீட்டு வசதித் திட்டம் மற்றும் பங்களிப்புத் திறனுக்கேற்ற வீடு கட்டும் திட்டத்தின் கீழ், அரியலூர் வட்டம், எருத்துக்காரன்பட்டி ஊராட்சி, குரும்பன்சாவடி திட்டப் பகுதிகளில் 288 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் பணிகள் ரூ.23.43 கோடி மதிப்பீட்டில் நிறைவு பெற்றுள்ளன. அரியலூர் வட்டம், கீழப்பழுவூர் கிராமம், கீழப்பழுவூர் திட்டப்பகுதிகளில் 576 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பணிகள் ரூ.48.98 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. சொந்த இடத்தில் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் (BLC), அரியலூர், ஜெயங்கொண்டம், வரதராஜன்பேட்டை பகுதிகளில் 890 பயனாளிகளுக்கு ரூ.26.70 கோடி மதிப்பீட்டில் வீடு கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி பணிகளில் 518 பணிகள் நிறைவு பெற்று, எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

கல்வி வளர்ச்சி

பள்ளிக்கல்வித் துறையில், கடந்த மூன்று ஆண்டுகளில் 7 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 5 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. உயர் கல்வித் துறையில், ஜெயங்கொண்டத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு பல்வேறு திட்டங்கள் அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும், பல திட்டங்களை அம்மாவின் அரசு செயல்படுத்தவுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அரியலூர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 17.12.2020 அன்று அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ரூ.36.73 கோடி மதிப்பீட்டிலான 39 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, ரூ.26.52 கோடி மதிப்பீட்டிலான 14 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 17.12.2020 அன்று அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன், அரசு தலைமைக் கொறடா திரு. எஸ். ராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள், அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி த. ரத்னா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

வீரமங்கை இராணி வேலு நாச்சியார்

எத்தனையோ சாதனை மங்கைகளை தமிழ் வரலாறு பார்த்திருக்கின்றது. ஆனால், வீரமங்கை இராணி வேலு நாச்சியாரின் வீரம், மாபெரும் படைகளை எதிர்கொண்டு வீழ்த்திய வீரம்.

சிவகங்கைக்கு அருகிலுள்ள ‘‘சக்கந்தி’’ எனும் ஜமீனில் இராணி வேலு நாச்சியார் பிறந்தார். தந்தை செல்லமுத்து விஜயரகுநாத செல்லத்துரை சேதுபதி இராமநாதபுரம் மன்னர். தாய் சக்கந்தி ஜமீன் முத்தாத்தாள் நாச்சியார்.

வாள்வீச்சு, அம்பு விடுதல், ஈட்டி எறிதல், குதிரையேற்றம், யானையேற்றம் என்று எல்லா போர்க் கலைகளையும் கற்றவர். வீர விளையாட்டுக்கள் மட்டுமன்றி படிப்பிலும் இராணி வேலு நாச்சியார் சிறந்த தேர்ச்சி பெற்றவர். பத்து மொழிகளில் கை தேர்ந்தவர்.

சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை வேலு நாச்சியார் 1746ஆம் வருடம் மணமுடித்து, சிவகங்கையில் குடிபுகுந்தார். சீரும் சிறப்புமான சிவகங்கை சீமையை, சீர்குலைக்க வந்தது ஆற்காடு நவாப்பின் பெரும்படை.

முத்துவடுகநாதரின் மனைவியான இராணி வேலு நாச்சியார் வீரனுக்கு ஏற்ற வீராங்கனையாகத் திகழ்ந்தார். பிரதானி தாண்டவராயப்பிள்ளை மற்றும் வீரத்துக்கு பெயர் பெற்ற போர்ப்படைத் தளபதிகளான ‘‘சின்னமருது, பெரியமருது சகோதரர்கள்’’ ஆகியோர், இவர்களுக்கு உறுதுணையாக இருந்தார்கள்.

சிவகங்கையைத் தாக்க ஆங்கிலேயப் படைகள் நவாப்புக்கு உதவ முன்வந்தன. ஒருமுறை மன்னர் முத்துவடுகநாதர் காளையார் கோயிலில் வழிபாடு செய்து கொண்டிருந்தபோது, நவாப்பின் படைகள் காளையார் கோயிலைச் சுற்றி வளைத்து ஆங்கிலேயர் கொடுத்த போர்த் தளவாடங்களைக் கொண்டு கொடூரமாகத் தாக்கினர். முத்துவடுகநாதரும் அவரது படைகளும் வீரப்போர் புரிந்தனர். இருந்தும், அவர்களால் அந்தத் தாக்குதலைச் சமாளிக்க இயலவில்லை. 25.06.1772 அன்று முத்துவடுகநாதர் குண்டடிப்பட்டு பீரங்கிக் குண்டுகளால் தாக்கப்பட்டு வீர மரணம் அடைந்தார். காளையார் கோயில் கோட்டை நவாப் படைகளின் வசமாகியது இராணி வேலு நாச்சியாரும், இளவரசி வெள்ளச்சி நாச்சியாரும், விருப்பாச்சி விரைந்தனர். விருப்பாச்சி பாளையக்காரர் கோபாலநாயக்கர், அவர்களைக் காத்து ஹைதர் அலியிடம் காளையார் கோயில் போரில் அறிமுகப்படுத்தி வைத்தார்.

இராணி வேலு நாச்சியார் வீரத்தில் மட்டுமல்ல, விவேகத்திலும் சிறந்தவர். நவாப்பையும் ஆங்கிலேயர் படையினரையும் வீழ்த்த, மன்னர் ஹைதர் அலியின் உதவியை நாடுவது என்று தீர்மானித்தார். ஒரு வீரனை போல் வேடமணிந்து, ஹைதர் அலியைச் சந்தித்தார் இராணி வேலு நாச்சியார். அவர் உருது மொழியை சரளமாகப் பேச, ஹைதர் அலிக்கு மேலும் ஆச்சரியம். தன் வேதனைகளையும் இலட்சியத்தையும் ஹைதர் அலியிடம் விளக்கினார் இராணி வேலு நாச்சியார்.

அவரிடமிருந்த வீரத்தைக் கண்ட ஹைதர் அலி தன்னுடைய கோட்டையிலேயே தங்கிக்கொள்ள அனுமதி தந்தார்.

இராணி வேலு நாச்சியாரின் இலட்சியம் ஆங்கிலேயப் படையை அழிப்பது, நவாப்பை வீழ்த்துவது, சிவகங்கை சீமையில் தனது பரம்பரை சின்னமான அனுமன் கொடியை பறக்கவிடுவது. அதற்கான நாளும் வந்தது. ஹைதர்அலி தந்த நவீன ரக ஆயுதங்களுடன் நவாப் படைகளுடன் போர் செய்யக் கிளம்பினார். முதலில் காளையார் கோயிலைக் கைப்பற்றினார். சிவகங்கையிலும், திருப்பத்தூரிலும் நவாப்பின் படைகளும் ஆங்கிலப் படைகளும் பரவி நின்றன. அவற்றைத் தோற்கடித்தால்தான் சிவகங்கையை மீட்க முடியும். இராணி வேலு நாச்சியார் தனது படைகளை மூன்றாகப் பிரித்தார்.

சிவகங்கைப் பிரிவிற்கு இராணி வேலு நாச்சியார் தலைமையிலும், திருப்பத்தூர் பிரிவிற்கு நள்ளியம்பலம் என்பவர் தலைமையிலும், காளையார் கோயில் பிரிவிற்கு மருதுபாண்டியர்கள் தலைமையிலும் படைகள் தயாராகி போரிட்டன. முப்படைப்பிரிவு வெள்ளையர் படைகளை வீழ்த்தியது. விஜயதசமி அன்று சிவகங்கை அரண்மனைக்குள்ளே இருக்கும் இராஜராஜேஸ்வரி ஆலயத்திற்கு பெண்கள் சென்று வழிபடுவது வழக்கம்.

அப்போது வெளியே காவல் காத்துக்கொண்டிருந்த ஆங்கிலேயர் படைகளுடன் வேலு நாச்சியாரும் அவரோடு இருந்த பெண்கள் படையும் ஆயுதங்களை ஆடைக்குள் மறைத்துக்கொண்டு கூட்டத்தோடு கூட்டமாக கலந்து கோவிலுக்குள் சென்று திடீர் தாக்குதல் நடத்தினர். வெட்டுண்டு விழுந்தார்கள் ஆங்கிலேயர், சிலர் நாட்டைவிட்டு ஓடினார்கள்.

சிவகங்கை கோட்டை மீது பறந்த ஆங்கிலேயரின் கொடி இறக்கப்பட்டது. இராணி வேலு நாச்சியாரின் அனுமன் கொடி ஏற்றப்பட்டது. அவரது சபதம் நிறைவேறியது. இராணி வேலு நாச்சியார் சிவகங்கையின் அரசியானார். அவருடைய காலம், வீரத்தின் காலமாக இருந்தது. பெரும் போராட்டங்களை நடத்தி நாட்டை மீட்ட வேலு நாச்சியார் தனது 66ஆவது வயதில் 25 டிசம்பர் 1796 அன்று மறைந்தார். இராணி வேலு நாச்சியாரது வாழ்க்கை வரலாறு தமிழ் மண்ணின் வீரத்துக்கு சாட்சியாக இன்றும் இருக்கிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் இராணி வேலு நாச்சியார் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் சிவகங்கை மாவட்டம் சூரக்குளம் கிராமத்தில் வீரமங்கை இராணி வேலு நாச்சியார் நினைவு மண்டபம் 18.07.2014 அன்று திறந்து வைக்கப்பட்டது.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் ரூ.67.49 கோடி மதிப்பீட்டில் கட்டடங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்
21.12.2020 அன்று தலைமைச் செயலகத்தில், காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 21.12.2020 அன்று தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், குடவாசலில் ரூ.46 கோடி மதிப்பீட்டில், 25,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட ஒரு நவீன சேமிப்புக் கிடங்கினை காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 21 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சேமிப்புக் கிடங்குகள், தமிழ்நாடு மாநில நுகர்வோர் குறைதீர் ஆணைய அலுவலகத்தில் கூடுதல் தளங்கள், கூட்டுறவு வங்கி கிளை அலுவலகக் கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த 06.05.2013 அன்று சட்டப்பேரவை விதி எண் 110இன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், உணவு பாதுகாப்பின் அங்கங்களான சேமிப்பு, விற்பனை ஆகியவற்றில் முக்கிய பங்காற்றி வரும் சேமிப்புக் கிடங்குகளை அதிகரித்து உணவு தானியங்களை முறையாக சேமித்து வைக்கும் கிடங்குகளின் கொள்ளளவினை உயர்த்தும் வகையில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக புதிதாக 4,33,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 47 சேமிப்புக் கிடங்குகள் கட்டப்படும் என்று அறிவித்தார்கள்.

கடலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி புவனகிரி கிளைசொந்த கட்டடம் திட்ட மதிப்பீடு ரூ.67.00 இலட்சம்

அந்த அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், குடவாசலில் 46 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 25,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட ஒரு நவீன சேமிப்புக் கிடங்கினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 19.06.2017 அன்று சட்டப்பேரவை விதி 110இன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக 9 மாவட்டங்களில், 14 சொந்த இடங்களில் 30,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கூடுதல் கிடங்குகள் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்று அறிவித்தார்கள்.

அதன்படி, திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், பஞ்செட்டி கிராமத்தில் 1 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 750 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட ஒரு சேமிப்புக் கிடங்கு; வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், பாக்கம் கிராமத்தில் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தலா 750 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இரண்டு சேமிப்புக் கிடங்குகள் மற்றும் காட்பாடி வட்டம், குகையநல்லூர் கிராமத்தில் 4 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தலா 1,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இரண்டு சேமிப்புக் கிடங்குகள்; திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், குனிச்சி கிராமத்தில் 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தலா 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இரண்டு சேமிப்புக் கிடங்குகள்; கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், காடாம்புலியூர் கிராமத்தில் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 1,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட ஒரு சேமிப்புக் கிடங்கு;

மேலும், தென்காசி மாவட்டம், செங்கோட்டை வட்டம், கணக்கப்பிள்ளை வலசை கிராமத்தில் 4 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தலா 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 3 சேமிப்புக் கிடங்குகள்;

கூட்டுறவுத் துறை சார்பில் கடலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் புவனகிரி கிளைக்கு 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வங்கி கிளை அலுவலகக் கட்டடம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் ஒண்டிப்புதூர் புதிய கிளைக்கு 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வங்கி கிளை அலுவலகக் கட்டடம்;

சென்னை மாவட்டம், பூங்கா நகரில் அமைந்துள்ள தமிழ்நாடு மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம், சென்னை (வடக்கு) மற்றும் சென்னை (தெற்கு) ஆகிய அலுவலகங்கள் அனைத்தும் ஒரே கட்டடத்தில் செயல்படுவதால் இங்கு பணிபுரியும் பணியாளர்கள், வருகை தரும் பொதுமக்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கு ஏற்பட்டுள்ள இடப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு, 6,024.60 சதுர அடி பரப்பளவில், 1 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3ஆவது தளத்தின் பகுதிக் கட்டடம் மற்றும் 4ஆவது தளம் ஆகிய கூடுதல் கட்டடங்கள்;

என மொத்தம் 67 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

'நிவர்' மற்றும் 'புரெவி' புயலால் பாதிக்கப்பட்ட சுமார் 5 இலட்சம் விவசாய பெருமக்களுக்கு ரூ.600 கோடி இடுபொருள் நிவாரணமாக வழங்கப்படும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 02.01.2021

தென்மேற்கு வங்கக் கடலில் நிலை கொண்டிருந்த 'நிவர்' புயல் 25.11.2020 மற்றும் 26.11.2020இல் புதுச்சேரி அருகே கரையைக் கடந்தது. 'நிவர்' புயலின் காரணமாக ஏற்பட்ட சேதங்களை சீரமைக்கும் பணி போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், தமிழ்நாடு 'புரெவி' புயலின் தாக்கத்திற்கு உள்ளானது.

எனது தலைமையிலான மாண்புமிகு அம்மாவின் அரசு மேற்கொண்ட முன் எச்சரிக்கை நடவடிக்கைகளின் காரணமாக, 'நிவர்' மற்றும் 'புரெவி' புயல்களின் போது, மனித உயிரிழப்பு மற்றும் கால்நடை சேதம் பெருமளவில் தவிர்க்கப்பட்டுள்ளது. எனினும், 'நிவர்' மற்றும் 'புரெவி' புயல்கள் கரையைக் கடக்கும்போது வீசிய பலத்த காற்று மற்றும் கன மழையின் காரணமாக, மாநிலத்தின் பல பகுதிகளில் மின்சாரம், சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான பல உட்கட்டமைப்புகளுக்கு பெரும்சேதம் ஏற்பட்டது. இதுவன்றி, வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கும் பெருமளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. எனது அறிவுரையின் பேரில் மேற்கொள்ளப்பட்ட மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளின் காரணமாக புயல் பாதிப்பிற்குள்ளான மாவட்டங்களில் இயல்பு நிலை உடனடியாக திரும்பியது.

இப்புயலினால் ஏற்பட்ட பயிர் சேதத்தினை உடனடியாக கணக்கீடு செய்யுமாறு வருவாய்த் துறை, வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலைத் துறை அலுவலர்களுக்கு நான் உத்தரவிட்டிருந்தேன். 08.12.2020 மற்றும் 09.12.2020 ஆகிய நாட்களில் 'நிவர்' புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய குழு ஆய்வு செய்தது போல், 'புரெவி' புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய குழு 28.12.2020 முதல் 30.12.2020 வரை ஆய்வு செய்தது.

'நிவர்' புயலின் காரணமாக ஏற்பட்ட சேதங்களை தற்காலிகமாக சீரமைக்க ரூ.641.83 கோடியும், நிரந்தரமாக சீரமைக்க ரூ.3,108.55 கோடியும், ஆக மொத்தம் ரூ.3,750.38 கோடி தேவைப்படும் என மத்திய அரசுக்கு தெரிவிக்கப்பட்டு, மத்திய அரசின் நிதி உதவி கோரப்பட்டுள்ளது. மேலும், 'புரெவி' புயலின் காரணமாக ஏற்பட்ட சேதங்களை தற்காலிகமாக சீரமைக்க ரூ.485 கோடியும், நிரந்தரமாக சீரமைக்க ரூ.1,029 கோடியும், ஆக மொத்தம் ரூ.1,514 கோடி தேவைப்படும் என தெரிவித்து மத்திய அரசின் நிதி உதவி கோரப்பட்டுள்ளது.

தமிழக விவசாயிகளின் மீது எப்பொழுதும் மிகுந்த அக்கறை கொண்ட நான், 'நிவர்' மற்றும் 'புரெவி' புயல்களின் தாக்கத்தின் காரணமாக பாதிப்பிற்குள்ளான விவசாயிகளின் நலனை காக்கும் பொருட்டும், வேளாண் பெருமக்கள் அதிக உற்பத்தி செலவு செய்து, பேரிடரால் பெரும்பாதிப்பு அடைந்துள்ளதை கருத்தில் கொண்டும், தேசிய பேரிடர் நிவாரண நிதியின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி,

- மானாவாரி மற்றும் நீர்ப்பாசன வசதி பெற்ற நெற் பயிர்களுக்கும், நீர்ப்பாசன வசதி பெற்ற இதர பயிர்களுக்கும் ஹெக்டேர் ஒன்றுக்கு வழங்கப்படும் இடுபொருள் நிவாரணத் தொகையான ரூ.13,500 என்பதை, ரூ.20,000ஆக உயர்த்தியும்,
- மானாவாரி நெற்பயிர் தவிர, அனைத்து மானாவாரி பயிர்களுக்கும் இடுபொருள் நிவாரணத் தொகையான ஹெக்டேர் ஒன்றுக்கு வழங்கப்படும் ரூ.7,410 என்பதை, 10,000 ரூபாயாக உயர்த்தியும்,
- பல்லாண்டு கால பயிர்களுக்கு (perennial crops) இடுபொருள் நிவாரணத் தொகையாக ஹெக்டேர் ஒன்றுக்கு வழங்கப்படும் ரூ.18,000 என்பதை, ரூ.25,000 ஆக உயர்த்தியும் வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். உயர்த்தப்பட்ட இடுபொருள் நிவாரணத்திற்கான தொகையை, தமிழ்நாடு அரசு வழங்கும்.

மேலும், தேசிய பேரிடர் நிவாரண வழிகாட்டு நெறிமுறைகளின்படி, பாதிப்படைந்த விவசாயிகளுக்கு அதிகபட்சமாக 2 ஹெக்டேர் என்ற அளவில் மட்டுமே இடுபொருள் நிவாரணம் வழங்க வழிவகை உள்ளது. இந்த பேரிடரில், அனைத்து விவசாயிகளும் தங்களது வாழ்வாதாரத்தை இழந்துள்ள காரணத்தால் 2 எக்டேர் என்ற உச்சவரம்பை தளர்த்தி, பாதிக்கப்பட்ட பரப்பளவு முழுவதற்கும் உச்சவரம்பின்றி இடுபொருள் நிவாரணம் வழங்கவும் நான்ஆணையிட்டுள்ளேன்.

இதனைத் தொடர்ந்து 'நிவர்' மற்றும் புரெவி புயல்களின் காரணமாக, பாதிப்பிற்குள்ளான 3,10,589.63 ஹெக்டேர் பரப்பளவிலான வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு, சுமார் 5 இலட்சம் விவசாய பெருமக்களுக்கு ரூ.600 கோடி இடுபொருள் நிவாரணமாக வழங்கப்படும். இந்நிவாரணம் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் 07.01.2021 முதல் நேரடியாக வரவு வைக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறப்புப் பள்ளிகள் / இல்லங்களில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் உணவூட்டு மானியம் ரூ.650லிருந்து ரூ.900ஆக உயர்த்தி வழங்கப்படும்.

ABSTRACT

Welfare of Differently Abled Persons Department – Enhancement of feeding charges to inmates of Special Schools and Homes from Rs.650/- to Rs.900/- per month – Financial Sanction – Orders – Issued.

Welfare of Differently Abled Persons (DAP-1) Department

G.O. (Ms) No.38

Dated: 25.10.2018
விளம்பி – ஐப்பசி, 8
திருவள்ளுவர் ஆண்டு, 2049

Read:

From the Commissioner for Welfare of the Differently Abled Roc. No.4697/SS-2/2018, dated 24.06.2018.

ORDER:

The Hon'ble Chief Minister has made the following announcement under Rule 110 in the Floor of Tamil Nadu Legislative Assembly on 13.06.2018:-

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் கீழ் செயல்படும் 301 சிறப்புப் பள்ளிகள் / இல்லங்கள் மூலம் 11,948 மாற்றுத் திறனாளிகள் பயன்பெறுகின்றனர். அவர்களுக்கு தற்போது மாதமொன்றிற்கு வழங்கப்பட்டு வரும் உணவூட்டு மானியம் 650/- ரூபாயிலிருந்து 900/- ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 3 கோடி [illegible] இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்".

2. Based on the announcement, in the letter read above, the Commissioner for Welfare of the Differently Abled has sent the following details of inmates in 302 Special Schools and Homes and the additional amount required for the enhanced feeding charges under different heads of account:-

HOMES

Sl. No.	Name of the scheme	No. of Homes	No. of beneficiaries	Present feeding charges @ Rs.650/- per month for 12 months in Rs.	Proposed feeding charges @ Rs.900/-per month for 12 months in Rs.	Additional amount required for 6 months in Rs.
1.	Mental ill Homes	32	1600	12480000	17280000	2399800
2.	Adult Mentally Retarded Homes	38	1520	11856000	16416000	2279400
3.	Adult Mentally Retarded Homes	4*	160*	1248000	1728000	Amount available in Budget Estimate 2018-19
	Total	74 - 4 = 70	3280-160 = 3120	25584000	35424000	4679200

(*The required amount is available in Budget Estimate 2018-19 and therefore 4 Homes and beneficiaries have been excluded)

SPECIAL SCHOOLS

Sl. No.	Name of the scheme	No. of Special Schools	No. of beneficiaries	Present feeding charges @ Rs.650/- per month for 10 months in Rs.	Proposed feeding charges @ Rs.900/-per month for 10 months in Rs.	Additional amount required for 6 months in Rs.
1.	Government special school -VI	10	669	4348500	6021000	225000
	Government special school -HI	10**	550**	3575000	4950000	Amount available in Budget Estimate 2018-19
	Government special school -LD	1**	21**	136500	189000	Amount available in Budget Estimate 2018-19
	Government special school -ID	1	59	383500	531000	172000
2.	Special School for VI , Ortho &HI	55	3390	22035000	30510000	4120000
3.	Special School for Mentally Retarded.	150	3984	25896000	35856000	6132000
4.	IELC school for Intellectual disability , Krishnagiri	1	50	325000	450000	75000
	Total	228-11 = 217	8723 – 571 = 8152	56699500	78507000	10724000

(** The required amount is available in Budget Estimate 2018-19 and therefore 11 Special Schools and beneficiaries have been excluded)

Additional amount required for 3120 beneficiaries in 70 Homes	- Rs. 46,79,200/-
Additional amount required for 8152 beneficiaries in 217 Special Schools	- Rs.1,07,24,000/-
Total	- Rs.1,54,03,200/-

He has therefore requested to enhance the feeding charges to inmates of special schools and homes from Rs.650/- p.m. to Rs.900/- p.m. from the date of issue of this order and also to sanction an additional amount of Rs.1,54,03,200/- (Rupees one crore fifty four lakhs three thousand and two hundred only) under relevant head of account and also permission to incur this amount pending inclusion in the Revised Estimate 2018-2019.

3. The Government, after careful examination, accept the proposal of the Commissioner for Welfare of the Differently Abled to enhance the feeding charges from Rs.650/- per month to Rs.900/- per month to 11272 inmates in 287 special schools and homes with effect from October 2018. Government also sanctions an additional amount of Rs.1,54,03,200/- (Rupees one crore fifty four lakhs three thousand and two hundred only) over and above Budget Estimate 2018-2019 Provision.

4. The amount sanctioned in para-3 shall be debited under the following heads of accounts:-

Sl. No.	Head of Account	Amount required in Rs.
1.	2235 – Social Security and Welfare – 02 Social Welfare-101 Welfare of Differently Abled Persons – State's Expenditure – MO Assistance for Rehabilitation of Mentally Ill-09 – Grants-in-Aid – 03 Grants for Specific Schemes. [D.P. Code 2235-02-101-MO-0936]	23,99,800
2.	2235 – Social Security and Welfare – 02 Social Welfare-101 Welfare of Differently Abled Persons – State's Expenditure – MG Assistance to repute NGO's for Special Institutions for Mentally Retarded-09 Grants-in –Aid – 01 Grants for Current Expenditure [D.P. Code 2235-02-101-MG-0914]	84,11,400
3.	2235 – Social Security and Welfare – 02 Social Welfare-101 Welfare of Differently Abled Persons – State's Expenditure – AA School for the Blind-67 Feeding/Dietary Charges-09 Others [D.P. Code 2235-02-101-AA-6798]	2,25,000
4.	2235 – Social Security and Welfare – 02 Social Welfare-102 Child Welfare – State's Expenditure – AZ Starting of Institute for Mentally Retarded-67 Feeding/Dietary Charges-09 Others. [D.P. Code 2235-02-102-AZ-6796]	1,72,000
5.	2235 – Social Security and Welfare – 02 Social Welfare-101 – Welfare of Differently Abled Persons – State's Expenditure – CE Assistance to Government recognized schools for the Differently Abled-67 Feeding/Dietary Charges-09 Others. [D.P. Code 2235-02-101-CE-6798]	41,20,000
6.	2235 – Social Security and Welfare – 02 Social Welfare-101 – Welfare of Differently Abled Persons – State's Expenditure – CF Assistance to Non-Government Organisations for Schools for Mentally Retarded Children-09 – Grants-in-Aid-01 Grants for Current Expenditure. [D.P. Code 2235-02-101-CF-0916]	75,000
	Total	**1,54,03,200**

5. Necessary additional funds of Rs.1,54,03,200/- will be provided in Revised Estimate / Final Modified Appropriation 2018-19. Pending provision of such funds, the Commissioner for Welfare of the Differently Abled is authorized to incur the expenditure sanctioned in para 3 above. The Commissioner for Welfare of the Differently Abled is requested to include this item of expenditure while sending the proposal for Revised Estimate / Final Modified Appropriation 2018-19 to Government in Finance(SW) Department without fail. However, this expenditure shall be brought to the notice of Legislature by specific inclusion in the Supplementary Estimates 2018-19. The Commissioner for Welfare of the Differently Abled shall also send necessary draft explanatory notes to Government in Finance (SW/BG-I) Department for inclusion of this expenditure in the Supplementary Estimates 2018-2019 at the appropriate time without fail.

6. This order issues with concurrence of Finance Department vide its U.O. No.51709/Fin.(SW)/2018, dated 24.10.2018 and ASL No.1689, (one thousand six hundred and eighty nine)

(By Order of the Governor)

C. Vijayaraj Kumar
Secretary to Government

பொதுமக்களுக்கு தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009 பிரிவு 5(1)இல் மேற்கொண்ட சட்டதிருத்தம் குறித்து தெரிவித்தல்

தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009 பிரிவு 5(1) இன் படி தமிழ்நாடு மாநிலத்தில், திருமணம் நடைபெறும் இடத்தின் எல்லைக்குட்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் மட்டுமே திருமணம் பதிவு செய்ய இயலும் என்ற நிலை இருந்தது. இதனை எளிமைப்படுத்தும் நோக்குடன் 2020–2021ஆம் ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிவுத்துறை மானிய கோரிக்கையில், மணமகன் மற்றும் மணமகள் இருப்பிடம் அமைந்துள்ள சார்பதிவாளர் அலுவலகங்களிலும் திருமணத்தை பதிவு செய்யும் புதிய வசதியை ஏற்படுத்தும் விதமாக தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009இல் திருத்தம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது.

மேற்படி அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009 பிரிவு 5(1)இல் கீழ்கண்ட சட்ட திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. சட்ட திருத்தம் பின்வருமாறு:–

தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009இன் படி அனைத்து தரப்பினருக்கான திருமணங்களும் கட்டாய பதிவு செய்யப்பட வேண்டும் என்பதனை அனைவரும் பின்பற்றும் விதமாக திருமணம் நடைபெற்ற இடத்திலுள்ள சார்பதிவகம் மற்றும் மணமக்கள் இருவரின் நிரந்தர வசிப்பிடம் அமைந்துள்ள சார்பதிவகம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் திருமணப்பதிவினை மேற்கொள்ளலாம்.

எனவே, மேற்குறிப்பிட்ட வசதியை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

செம்மொழிச் சிற்பிகள்

தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்

தோற்றம் : 08.01.1901

இவரைப் போல இன்னொரு மகன் எனக்குக் கிடைப்பானா எனத் தமிழே ஏங்குமளவிற்கு ஆழ்ந்த அறிவும் புலமையும் பெற்றுத் தன் பணிகளால் தமிழுக்குப் பெருமையும் புகழையும் ஈட்டித்தந்தவர். பன்மொழிப் புலவர், பல்கலைவித்தகர், சங்க இலக்கிய வரலாற்றைத் தமிழிலும், ஆங்கிலத்திலுமாகப் படைத்தவர். தன் முப்பத்தி ஆறாம் வயதிலேயே பன்மொழிப் புலவர் எனும் பட்டம் ஈன்ற பெருமகனார்.

தென்பட்டினம் பொன்னுசாமி மீனாட்சி சுந்தரனார்

சென்னையை அடுத்த தென்பட்டினம் எனும் கடற்கரை கிராமத்தில் பிறந்தவர். தந்தையார் பொன்னுசாமி கிராமணியார். இவரே ஒரு பழுத்த அறிஞர் அட்டாவதானம் சுப்புராய செட்டியாரின் மாணவர். இதனாலேயே தனது குருவின் குருவான மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் அவர்கள் மீது இவருக்கு மாறாத காதல் கிளைத்தது. இதனாலேயே தனக்குப் பிறந்த ஆண் மகவுக்கு மீனாட்சிசுந்தரம் என்றே பெயரிட்டார். இதன் காரணமாகவோ என்னவோ சிறுவன் மீனாட்சிசுந்தரத்துக்கும் தமிழின் மீது தணியாத காதல். உடன் அவரது தமிழறிவை வளர்க்க வடிவேலு செட்டியார், கோவிந்தராச முதலியார் மற்றும் திருமணம் செல்வ கேசவராய முதலியார் போன்ற தமிழறிஞர்கள் பாதை போட்டுத் தந்தனர்.

வரலாறு, அரசியல், சட்டம் முதலிய துறைகளில் பட்டம் பெற்றவர். தமது இடையறாத முயற்சியால் தமிழ் இலக்கியம், இலக்கணம், மொழியியல், சமயம், தத்துவம், ஒப்பிலக்கியம், காந்தியியல் முதலிய பல்வேறு துறைகளில் கற்றுத்தேர்ந்து அனைவரும் வியக்கும் வகையில் இணையற்ற அறிஞர் ஆனார். எதைக் கற்றாலும் அதில் முடி முதல் ஆழம் வரை கற்று அதில் புலமையும், வியத்தகு ஆற்றலும் அடையப்பெற்ற மீனாட்சியாரின் அறிவும் புலமையும் வேறொருவர் எளிதில் நெருங்க இயலாதது. அதன் காரணமாகவே, பல்வேறு துறைகளின் தலைமைப் பதவிகள் அவரைத் தேடிவந்து அரியணையிட்டு அமர சொல்லி கெஞ்சிக்கொண்டது. துறைதோறும் தலைவர் ஆவது என்பது எத்தனை சிரமமிக்கது என்பது ஏதேனும் ஒருதுறையில் தலைவர் ஆகுபவரால் மட்டுமே உணர முடியும். அவர் எண்ணற்ற மொழிகளைக் கற்றிருந்தாலும் ஈராயிரம் ஆண்டு தமிழ் மொழியிலும் இலக்கியங்களிலும் அவர் பெற்ற புலமைக்கு ஈடில்லை.

1920இல் பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ. 1922இல் பி.எல்., பட்டம், 1923இல் எம்.ஏ. பட்டம் பின் வரலாறு, பொருளியல், அரசியல் ஆகிய துறைகளில் தொடர்ச்சியான முதுகலைப்பட்டம் எனத் தன் கல்விப் பயணத்தின்போதே அதனை சாதனைப் பயணமாக மேற்கொண்டவர். 1924இல் சென்னை நகராண்மைக் கழக உறுப்பினராகப் பணியாற்றினார். 1925இல் அலுமினியத் தொழிலாளர் சங்கத் தலைவராய் இருந்து தொண்டு புரிந்தார். தமிழ் இலக்கிய இலக்கண ஆர்வத்தால் 1934க்குள் பி.ஓ.எல்., எம்.ஓ.எல். பட்டங்களும் பெற்றார். 1941இல் நாட்டு உரிமைக்காக மறியல் செய்து சிறை சென்றார். இவரது தமிழ்ப் புலமையால் மையல்கொண்ட அண்ணாமலை அரசர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு இவரைப் பேராசிரியராகப் பணிசெய்ய அழைப்பு விடுத்தார். 1958இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல், இலக்கியத் துறைகளின் தலைமைப் பேராசிரியராகப் பொறுப்பேற்றார், மட்டுமல்லாமல் சிகாகோ பல்கலைக்கழகத்தில், 1961இல் தமிழ்ப் பேராசிரியராகப் பொறுப்பேற்றுத் தமிழுக்குச் சிறப்புச் சேர்த்தார்.

அமெரிக்கா, ஜப்பான், இரஷ்யா போன்ற வெளிநாடுகளுக்குச் சென்று தமிழின் புகழ் பரப்பிய பெருமகனார் தெ.பொ.மீ. யுனெஸ்கோவின் 'கூரியர்' என்னும் இதழ்க்குழுவின் தலைவராக விளங்கியவர். ஒரு நடமாடும் பல்கைலக்கழகம் எனில் மிகையில்லை. மொழியியல் என்ற புதிய துறையின் புதுமையைத் தமிழுக்குக் கொண்டு வந்து அதை வளர வைத்த முதல் முன்னோடி பல்கலைச் செல்வர் தெ.பொ.மீ.தான்.

தமிழிலக்கியம் குறித்து இவர் எழுதிய பல ஆய்வு நூல்கள் இன்றும் என்றும் தமிழுக்கு அழியாச் சொத்து ஆகும். உலகக் காப்பியங்களோடும், உலக நாடகங்களோடும் சிலப்பதிகாரத்தை ஒப்பிட்டுப் பார்த்து அதை 'நாடகக் காப்பியம்' என்றும் 'குடிமக்கள் காப்பியம்' என்றும் ஒருவரியில் கூறியவர். சிலப்பதிகாரத்துக்கு இவரைப் போன்று வேறு யாரும் திறனாய்வு எழுதியதில்லை.

மறைவு : 27.08.1980

கரூர் மாவட்டத்தில் காவேரி உபவடிநிலத்தின் கீழ், கட்டளை மேட்டு வாய்க்கால் விரிவுபடுத்தி, புதுப்பிக்கும் பணி ரூ.335.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்
தலைமையில், 16.12.2020 அன்று கரூர் மாவட்ட
ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற
வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா
நோய்த் தொற்றுப் பரவல் தடுப்புப் பணிகள்
குறித்த ஆய்வுக் கூட்டத்தில்
ஆற்றிய உரை.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

கரூர் மாவட்ட கொரோனா வைரஸ் பரவல் தடுப்புப் பணிகள் மற்றும் அரசால் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பங்குபெற்றுள்ள அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு மேற்கொண்ட கடுமையான தொடர் நடவடிக்கைகளின் விளைவாக, தமிழகத்தில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவல் படிப்படியாகக் குறையத் தொடங்கியுள்ளது. மேலும், இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழகத்தில் இறப்பு சதவிகிதம் மற்றும் தொற்று ஏற்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

கரூர் மாவட்டத்தில் இந்நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் 4,999 நபர்கள், குணமடைந்தவர்கள்

கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், மாவட்ட விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கலந்தாய்வுக் கூட்டம்

4,863 நபர்கள், இறந்தவர்கள் 48 நபர்கள். 15.12.2020 அன்று மட்டும் இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் 5 நபர்கள், குணமடைந்தவர்கள் 20 நபர்கள். தற்போது சிகிச்சை பெற்று வருபவர்கள் 88 நபர்கள். 15.12.2020 வரை 1,10,401 பரிசோதனைகள் நடைபெற்றுள்ளன. நேற்றையதினம் கரூர் மாவட்டத்தில் 1,269 RT-PCR பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்தில் பரிசோதனை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்நோய்த் தொற்று பரவல் ஏற்பட்டவர்களை குணமடையச் செய்வதற்கு போதிய அளவு மருத்துவமனைகள் அமைக்கப்பட்டு, தேவையான படுக்கை வசதிகள், ஆக்ஸிஜன் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதோடு, தனியார் மருத்துவமனைகளிலும் சிகிச்சை அளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில் தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகள் மொத்தம் 14 இடங்களில் 626 படுக்கைகள் கோவிட்–19க்காக ஒதுக்கப்பட்டுள்ளன. N-95 முகக்கவசம், மும்மடி முகக்கவசம், PPE Kits, தெர்மல் ஸ்கேனர், RT-PCR Kits, Zinc மற்றும் Multi-Vitamin மாத்திரைகள் இம்மாவட்டத்தில் போதிய அளவு கையிருப்பில் உள்ளன. இம்மாவட்டத்தில் நாளொன்றுக்கு 39 காய்ச்சல் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை மொத்தம் 10,647 காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டு, 8,88,347 நபர்களுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மாவின் அரசு அறிவித்த வழிமுறைகளை கரூர் மாவட்ட நிருவாகமும், சுகாதாரத் துறையும் இணைந்து சரியான முறையில் பின்பற்றிய காரணத்தினால், இந்நோய்ப் பரவல் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது. நேற்றைய தினம், ஐந்து நபர்களுக்கு மட்டும் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளதுடன், உயிரிழப்பு ஏதும் இல்லை. இந்நடவடிக்கைகளால் இம்மாவட்டத்தில் நல்ல பலன் கிடைத்துள்ளது.

சிறப்புக் குறை தீர்க்கும் முகாம் மூலம் தீர்வு

நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள மக்கள் அரசை நாடிச் செல்வதைத் தவிர்த்து, அரசே மக்களை நாடிச் சென்று, மக்களுக்குத் தேவையான உதவிகளை மேற்கொள்ள, நான் ஏற்கெனவே சட்டமன்றத்தில் சட்டப்பேரவை விதி 110இன் கீழ், முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் முகாம் நடத்தப்படுமென்று அறிவித்ததன் அடிப்படையில் மாவட்டத்தில் சிறப்புக் குறை தீர்க்கும் முகாம் நடத்தப்பட்டன. கரூர் மாவட்டத்தில் 2019–2020 வரை 5,000 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 4,196 இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. முதியோர் உதவித்தொகை வேண்டி பெறப்பட்ட 9,868 மனுக்களில் 8,421 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. முதியோர் உதவித்தொகை பெற பல ஆண்டுகளுக்கு முன்பு வரையறுக்கப்பட்டுள்ள சொத்து மதிப்பினை உயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து வந்த கோரிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்ததை ஏற்று, சொத்து மதிப்பு உயர்த்தப்பட்டு, உயர்த்தப்பட்ட சொத்து மதிப்பிற்குள் உள்ளவர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்க உத்தரவு வழங்கி, அந்தத் தளர்வுகள் மூலம், 6,676 நபர்களுக்கு முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரை புதியதாக மொத்தம் 15,097 நபர்களுக்கு முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம், இந்த மாவட்டத்தில்தான் குறுகிய

காலத்தில், அதிகமானவர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கியுள்ளார்கள். கரூர் மாவட்டத்தில், முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் முகாமில் பெறப்பட்ட 35,327 மனுக்களில் 23,939 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

குடிமராமத்துத் திட்டம்

குடிமராமத்துத் திட்டத்தைப் பொறுத்தவரை, மாண்புமிகு அம்மாவின் அரசு 2016–2017ஆம் ஆண்டு முதல் 2020–2021ஆம் ஆண்டு வரை, கரூர் மாவட்டத்தில் ரூ.14.20 கோடி மதிப்பீட்டில் 94 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 90 பணிகள் நிறைவு பெற்று, 4 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. கால்வாய்களை தூர்வாருவதற்கு ரூ.1.76 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 20 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 45.90 கிலோ மீட்டர் நீளத்திற்கு தூர்வாரப்பட்டுள்ளது. 2020–2021ஆம் ஆண்டில் ரூ.1.38 கோடி நிதி ஒதுக்கீட்டில் 42.65 கிலோ மீட்டர் நீளத்திற்கு தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நபார்டு நிதி உதவியுடன் அமராவதி ஆற்றின் குறுக்கே மற்றும் நங்காஞ்சியாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் 4 பணிகள் ரூ.22 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன. நீர்வள, நிலவளத் திட்டத்தின் கீழ், அமராவதி உபவடிநிலத்தில் நீர்வள ஆதாரங்களை பாதுகாத்து பெருக்கும் நோக்கில் புதிய தடுப்பணை, கால்வாய்கள் மற்றும் அணைக்கட்டை புனரமைக்கும் 7 பணிகள் சுமார் ரூ.18 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கரூர் மாவட்டத்தில் காவேரி உபவடிநிலத்தின் கீழ், கட்டளை மேட்டு வாய்க்கால் விரிவுபடுத்தி, புதுப்பித்து நவீனமாக்கும் பணி ரூ.335.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இதில் கரூர் மாவட்ட பகுதியில் செல்லும் கட்டளை மேட்டு வாய்க்கால் ரூ.305.50 கோடி மதிப்பீட்டில் புதுப்பித்து நவீனமாக்கும் பணியில் 20.185 ஏக்கர் நிலங்களின் பாசன வசதி உறுதி செய்யப்படுகிறது. நொய்யல் ஆற்றில் 158.35 கிமீ வரை உள்ள குளங்கள், அணைக்கட்டுகள், வரத்துக் கால்வாய்கள் உள்ளிட்ட நீர் ஆதாரப் பணிகளை புனரமைப்பு செய்ய ரூ.230 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. கிருஷ்ணராயபுரம் வட்டம், மாயனூர் கிராமம், தென்கரை வாய்க்கால், கிருஷ்ணராயபுரம் வாய்க்கால், புதிய கட்டளை மேட்டு வாய்க்கால் மற்றும் வடகரை வாய்க்காலின் குறுக்கே இருவழிப்பாலம் கட்டும் பணியானது சுமார் ரூ.7 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. புகளூர் வட்டம், நஞ்சை புகளூர் கிராமத்தில் காவேரி ஆற்றின் குறுக்கே ரூ.406.50 கோடி மதிப்பீட்டில் கதவணை கட்ட மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. கீழ்பவானி திட்ட அமைப்பில் உள்ள கட்டுமானங்களை விரிவாக்குதல், புதுப்பித்தல் மற்றும் நவீனப்படுத்துதல் பணிகள் ரூ.933.10 கோடி மதிப்பீட்டில் ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் மேற்கொள்ளப்படவுள்ளது.

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், மாயனூர் கிராமம் அருகே கட்டளை கதவணை பகுதிகள் புனரமைக்கும் பணி ரூ.189 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த அரசின் பரிசீலனையில் உள்ளது. ஈரோடு மற்றும் கரூர் மாவட்டம், கொடுமுடி, புகளூர் மற்றும் மண்மங்கலம் வட்டங்களில் உள்ள புகளூர் வாய்க்கால் புனரமைக்கும் பணி ரூ.40 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த அரசின் பரிசீலனையில் உள்ளது. கரூர் நகரம் அருகில் கிருஷ்ணராயபுரம் வட்டத்திலுள்ள (பாலராஜபுரம்) வீராக்கியம் ஏரியை இயல்பு நிலைக்கு மீட்டெடுக்கும் பணி ரூ.15 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த அரசின் பரிசீலனையில் உள்ளது. அரவக்குறிச்சி வட்டம், கூடலூர் மேல்பாகம் ஊராட்சி பெரியதிருமங்கலம் பகுதியில் அமராவதி ஆற்றின் குறுக்கே ரூ.10.30 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணிக்கான மதிப்பீடு பரிசீலனையில் உள்ளது.

கரூர் மாவட்டத்தில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடங்கள் ரூ.269.59 கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு வந்துள்ளன. அவற்றை நானே நேரடியாக வந்து திறந்து வைத்தேன்.

கரூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் விசாரணை நீதிமன்றக் கட்டடம் கட்டும் பணி ரூ.3.34 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றது. புகழூர் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்பு கட்டும் பணி ரூ.3.05 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றது. நபார்டு நிதியுதவியுடன் ஆலத்தூர் மற்றும் ஜெகதாபி ஆகிய இடங்களில் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகம், மாணவ, மாணவியருக்கான கழிவறைகள் கட்டும் பணி சுமார் ரூ.3 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றது. மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பாதுகாப்புக் கட்டடம் கட்டும் பணி ரூ.2.22 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றது.

மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்தாய்வுக் கூட்டம்

நெடுஞ்சாலைத் துறையில், தேசிய நெடுஞ்சாலை எண்.7 சுக்காலியூர் மற்றும் தேசிய நெடுஞ்சாலை 67 தண்ணீர் பந்தல் சாலையை கரூரில் இணைக்கும் சாலை மேம்பாடு செய்தல் மற்றும் அமராவதி ஆற்றில் உயர்மட்ட பாலம் கட்டுதல் பணிக்கு ரூ.10 இலட்சம் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரித்திடவும், நிலம் எடுக்கும் பணிக்காக ரூ.23.45 கோடி ஒதுக்கீடும் செய்யப்பட்டு நிலத்திட்ட அட்டவணை தயாரிக்கப்பட்டு வருகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டம், உன்னியூருக்கும், கரூர் மாவட்டம், நெரூருக்கும் இடையே காவேரி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டும் பணிக்கு நிலம் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருச்சி, நாகப்பட்டினம், கூடலூர், மைசூர் சாலை கி.மீ. 218/6இல் கோவை சாலை, முனியப்பன் கோவில் அருகில் ரூ.30.52 கோடி மதிப்பீட்டில் மேம்பாலம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்த அழைப்பு முடிவு பெற்று, ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது.

கரூர் மாவட்டத்தில், ஏழை, எளிய மக்களுக்கு பசுமை வீடுகள் அதிகளவில் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தில் 2017 முதல் 2020 வரை 3,033 வீடுகள் ரூ.51.56 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 2,247 வீடுகள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றன, எஞ்சிய வீடுகள் கட்டும் பணிகள் முன்னேற்றத்தில் இருக்கின்றன.

கரூர் மாவட்டத்தில் ஜல் ஜீவன் திட்டத்தில், 2020–2021ஆம் ஆண்டில் 416 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 43,860 எண்ணிக்கையிலான குடிநீர் குழாய் இணைப்பு ரூ.55 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

கரூர் மாவட்டத்தில் இயங்கி வரும் 4,774 சுயநிதிக் குழுக்களில் 51,079 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். கடந்த மூன்றாண்டுகளில், ரூ.689.41 கோடி வங்கி இணைப்புக் கடனாக சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டு இருக்கின்றது. 2020–2021ஆம் ஆண்டு ரூ.423 கோடி இந்த சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை ரூ.49.62 கோடி 21,816 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தைப் பொறுத்தவரை, 2019–2020ஆம் ஆண்டில் 1,535 மகளிருக்கு வாகன ஒதுக்கீடு வழங்கப்பட்டு, அதில் 1,475 மகளிருக்கு ரூ.3.69 கோடி மானியம்

வழங்கப்பட்டிருக்கிறது. கரூர் மாவட்டத்தில், கடந்த மூன்றாண்டுகளில், 4,530 மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கப்பட்டிருக்கிறது, அதற்காக ரூ.11.28 கோடி மானியம் அம்மாவின் அரசால் வழங்கப்பட்டிருக்கிறது.

குடிநீர் திட்டத்தைப் பொறுத்தவரை கரூர் மாவட்டத்தில் குளித்தலை மற்றும் தோகைமலை ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 253 கிராம குடியிருப்புகளுக்கு ரூ.52.75 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர் திட்டத்தின் 99 சதவிகிதப் பணிகள் நிறைவு பெற்று, சோதனை ஓட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 274 கிராம குடியிருப்புகளுக்கு ரூ.81.41 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர் திட்டத்தின் 85 சதவிகிதப் பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன, எஞ்சிய பணிகளை விரைவில் முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கரூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஆத்தூர், பூலாம்பாளையம் மற்றும் இதர 5 ஊராட்சிகளின் கூட்டுக் குடிநீர் திட்டம் ரூ.9 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் 15 சதவீதப் பணிகள் முடிவடைந்துள்ளது, 2021ஆம் ஆண்டிற்குள் இந்தத் திட்டம் முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

நகரக் குடிநீர் திட்டங்களைப் பொறுத்தவரை, கரூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தில் ரூ.23.84 கோடி மதிப்பீட்டிலான இத்திட்டத்தின் 92 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இனாம்கரூர் நகராட்சியில் ரூ.18.57 கோடி மதிப்பீட்டில் 1,10,000 மக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் தற்போது 95 சதவிகித பணிகள் முடிக்கப்பட்டு, இத்திட்டமானது பகுதியாக முடிக்கப்பட்டு தற்போது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. இதர பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு, எஞ்சிய பணிகளும் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். கரூர் மாவட்டம், தாந்தோணி நகராட்சிக்கு குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ரூ.25.16 கோடி மதிப்பீட்டில் துவங்கப்பட்டு தற்போது பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

கரூர் மாவட்டத்தில் உள்ள க.பரமத்தி மற்றும் அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 50 ஊராட்சிகளில் உள்ள 756 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு ரூ.486.61 கோடியில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது திட்டம், கரூர் மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணராயபுரம் மற்றும் கடவூர் ஊராட்சி ஒன்றியங்களை சார்ந்த 46 ஊராட்சிகளில் உள்ள 529 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு தயாரிப்புக்கான ஆய்வுப் பணிகள் துவங்கி நடைபெற்று வருகிறது. இந்த இரண்டு திட்டங்களும் ஆய்வில் இருக்கின்றன, இத்திட்டங்களை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலம் கரூர் மாவட்டத்தில் பல்வேறு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. கரூர் வட்டம், சணப்பிரட்டியில் பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீடு கட்டும் திட்டம் மூலம் 192 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.16.08 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு, 192 பயனாளிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. கரூர் வட்டம், தோரணக்கல்பட்டியில் 640 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.55.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு முடிவு பெறும் தருவாயில் உள்ளது. கரூர் வட்டம், புலியூரில் 288 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.25.90 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. அரவக்குறிச்சி வட்டம், வேலம்பாடி கிராமத்தில் 32 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.2.93 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.

சொந்த இடத்தில் கான்கீரீட் வீடு கட்டும் திட்டத்தில், கரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 1 முதல் 48 வரையிலான பகுதிகளில் 1,826 பயனாளிகளுக்கு ரூ.54.78 கோடி மதிப்பீட்டில் வீடு கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 1 முதல் 25 வரையிலான பகுதிகளில் 164 பயனாளிகளுக்கு ரூ.4.92 கோடி மதிப்பீட்டில் வீடு கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. பேரூராட்சிகளை பொறுத்தவரை, அரவக்குறிச்சி, புலியூர், உப்பிடமங்கலம், பழையஜெயங்கொண்டசோழபுரம், கிருஷ்ணராயபுரம், மருதூர், நங்கவரம், புஞ்சைபுகளூர், புஞ்சைதோட்டக் குறிச்சி, காகிதபுரம் ஆகிய பேரூராட்சி பகுதிகளில் 599 பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ரூ.17.97 கோடி மதிப்பீட்டில் வீடு கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரை, பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், கடந்த நான்கு ஆண்டுகளில் 33,641 விவசாயிகள் பதிவு செய்யப்பட்டு, இதுவரை 25,628 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.42.94 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2016–2017ஆம்

ஆண்டில் ஏற்பட்ட கடும் வறட்சி காலங்களில் மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் 34,058 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.14 கோடியே 87 இலட்சம் வழங்கப்பட்டது. கடந்த மூன்றாண்டுகளில் கரூர் மாவட்டத்தில் 7 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. தொழில் துறையைப் பொறுத்தவரை, மத்திய அரசின் சொத்து பிணையில்லா அவசர கால கூடுதல் கடன் திட்டத்தின் கீழ் 4,115 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.218.22 கோடி கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

உலக முதலீட்டாளர் மாநாட்டில், Asian Fabricx நிறுவனம், ரூ.350 கோடி முதலீட்டில், 700 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், வீட்டு உபயோக ஆடைகள் உற்பத்திக்கான வணிக உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. கொசு வலை உற்பத்தி திட்டத்திற்காக, ரூ.352 கோடி முதலீட்டில், சுமார் 2,100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் தொழில் தொடங்கப்பட்டுள்ளது. உலக முதலீட்டாளர் மாநாட்டில், இம்மாவட்டத்திற்கு, 2019ஆம் ஆண்டில் 832 நபர்களுக்கு வேலை கிடைக்கும் விதமாக ரூ.2,100 கோடி மதிப்பீட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் சிட்கோ தொழிற்பேட்டைகள் பல இயங்கி வருகின்றன. இதனால் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது.

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி தாலுகா, புஞ்சைக்காளக்குறிச்சி கிராமத்தில் 2018–2019ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்துடன் இணைந்து உருவாக்கப்பட்டது. இங்கு 100 தொழில்மனைகள் உருவாக்கப்பட்டு, தேவைப்படும் ஜவுளி உற்பத்தி செய்யும் தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்த மாணவர்கள் உயர்கல்வி படிக்க வேண்டுமென்பதற்காக, மாண்புமிகு அமைச்சர் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று, தரகம்பட்டியில் 2020–2021ஆம் கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதியதாக துவங்கப்பட்டு அதில் 282 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர்.

இவ்வாறு பல்வேறு திட்டங்களை கரூர் மாவட்டத்தில் மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. மேலும், பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

கரூர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 16.12.2020 அன்று கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ரூ.118.53 கோடி மதிப்பீட்டிலான 28 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து ரூ.627 கோடி மதிப்பீட்டிலான 2,089 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 16.12.2020 அன்று கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர், சட்டமன்ற உறுப்பினர்கள், கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எஸ்.மலர்விழி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

ஆவின்

விவசாயிகளின் வாழ்வில் ஆவினின் நேரடி பங்கு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு, மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஆவின், வளர்ச்சி பாதையை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது.

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்'' (குறள் – 1033)

உழுதுண்டு வாழ்பவர்களே உயர்ந்த வாழ்வினர் ஏனென்றால், மற்றவர்கள் அவர்களைத் தொழுதுண்டு வாழ வேண்டியிருக்கிறது. என்பது வள்ளுவன் வகுத்த பைந்தமிழ் நீதி.

''கடவுள் எனும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி''

இரவு பகல் பாராமல் இரத்தத்தை வியர்வையாக சிந்தி உழைப்பவர்கள் விவசாயிகள். கிராமங்களில் மற்றும் நகரங்களில் வாழ்கின்ற எளிய மக்களின் வாழ்வு வளம் பெற்று, பொருளாதார ரீதியான வளர்ச்சி அடைய வேண்டுமென்றால் விவசாயிகள் பங்கு அளவிடற்கரியது.

கால்நடை வளர்ப்பு விவசாயிகளின் வாழ்க்கையில் இணைந்துவிட்ட ஒரு அத்தியாவசிய தொழில் ஆகும். மேலும், குடும்பத்தின் ஒரு அங்கமாக கால்நடைகள் வளர்க்கப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக நமக்கு தேவையான பால் கிடைக்கின்றது. பாலிலிருந்து தயிர், மோர், வெண்ணெய், நெய் போன்ற உபபொருட்களும் கிடைக்கின்றன. விளைநிலங்களை வளமாக்க உழுவதுமட்டுமன்றி கால்நடைகளின் சாணங்கள் இயற்கை உரங்களாக பயன்படுத்தப்படுகிறது. பால் உபபொருட்கள் ஏற்றுமதியில் தமிழ்நாடு பெரும் பங்கு வகிக்கிறது.

தமிழகத்தில் கூட்டுறவு அமைப்பின் கீழ், மொத்த பால் உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை சுமார் 20 இலட்சம் ஆகும். கூட்டுறவு அமைப்பின் கீழ், உற்பத்தி செய்யப்படும் பால், சுமார் 9,325 பால் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இந்திய பொருளாதாரமானது, அத்தியாவசியப் பொருட்களின் தேவைகள் மற்றும் பண பரிவர்த்தனை அடிப்படையில்

நிர்ணயிக்கப்படுகிறது. அதன் வரிசைப் பட்டியலில் கோதுமை மற்றும் அரிசியை விட பால் தான் முதலிடம் வகிக்கிறது. இந்திய அளவில் பால் நுகர்வோர் வரிசையில் ஆவின் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. இது முதலிடம் நோக்கி முன்னேறும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

கொரோனா காலத்தில் விவசாயிகளின் பொருளாதார வீழ்ச்சியை தன் கரம் கொண்டு நிலை நிறுத்தியது ஆவின். அதன் வளர்ச்சியில் 2020–2021ஆம் ஆண்டில் வெற்றிப் பாதையை நோக்கி வீறு நடை போடுகின்றது.

தானியங்களின் உற்பத்தியைப் பொறுத்தவரை வருடத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு முறைதான் உற்பத்தி செய்யமுடியும். அதற்கு, நீர் மிகவும் அவசியம். ஆனால், பாலை ஒவ்வொரு நாளும் இரண்டு வேளை பெறலாம்.

கறவை பசுக்கள் வைத்துள்ள விவசாயிகள், வானம் பொய்த்து விட்ட நிலையிலும், கொரோனா காலத்திலும் விவசாயம் இன்றி பாதிக்கப்பட்ட போதிலும், பால் தொழில் ஒன்றே அவர்களுக்கு கை கொடுத்தது. அந்த பால் உற்பத்தியாளர்களை ஆவின் நிறுவனம் வாழவைத்துக் கொண்டிருக்கின்றது. சரிவிகித கால்நடை தீவனம் வழங்கப்பட்டால், பசுவானது பால் தரும். அது வெயில், மழை என்று எந்த சீதோசன நிலையும் பார்ப்பதில்லை.

உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை. (குறள் – 1036)

எல்லா பற்றையும் விட்டுவிட்டோம் என்று கூறும் துறவிகள் கூட உழவர்களின் கையை எதிர்பார்த்து தான் வாழ வேண்டும்.

அத்தகைய சிறப்பு மிக்க தொழில், பால் தொழில் ஆகும். பால் தொழில் விவசாயியின் வருமானத்தை உறுதி செய்யும் தொழிலாகும். பாலை கறந்து விற்றால் நமக்கு கைமேலே தினசரி வருமானம் உண்டு. பாலை கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கினால் வருமானம் கிடைக்கும் என்பதனை ஆவின் உறுதி செய்கிறது.

இந்தியா ஒரு விவசாய நாடு என்றால் அதில் முதலிடம் பால் வளத்திற்குதான் உண்டு. விவசாயிகள், கால்நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தியை அன்றாட வாழ்வாதாரத்திற்கு பயன்படும் தொழிலாக கருதுகிறார்கள்.

முன்பு கிராமங்களைச் சுற்றி மேய்ச்சல் நிலங்கள் இருந்தன. கால்நடைகள் சுயமாக புல் மேய்ந்து விவசாயிக்கு வருமானம் தரும் தொழிலாக இருந்தது. குறைவான விலையிலான வைக்கோலும் கால்நடைகளுக்கு தீவனமாக தரப்பட்டது. இன்று விளைநிலங்களும், மேய்ச்சல் நிலங்களும் குறைந்து வருகின்றது. எனினும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 2011ஆம் ஆண்டு கிராமப்புற விவசாயிகளின் பொருளாதாரம் முன்னேற, கறவை மாடுகள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

இது கிராம அளவில் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய திட்டமாகும். இந்த திட்டம் வெண்மை புரட்சிக்கு வித்திடும் உன்னதமான திட்டமாகும். தங்கள் வாழ்க்கையை தாங்களே நிலை நிறுத்தி கறவை மாடுகள் மூலம் பால் உற்பத்தியைப் பெருக்கி சுயமாக சொந்தக்காலில் நிற்க உறுதுணையாக இருக்கிறது.

“தன்னையே தருவதில் தாய்மைக்கு ஈடு
சம்சாரி வாழ்வுக்கு ஒரு பசுமாடு”

என்ற பாடல் வரிகள் உண்டு.

கறவை மாடுகள் மூலம் கிடைக்கும் பாலினால் சாதாரண சூழ்நிலையிலும், அசாதாரணமான சூழ்நிலையிலும் ஆவினால் அக்குடும்பத்தினருக்கும் ஊட்டச்சத்து கிடைப்பதோடு வருமானம் பெருகி அவர்களின் வாழ்வாதாரம் ஆவினால் உறுதி செய்யப்படுகிறது.

தமிழகத்தில் பால் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு அவர்கள் வழங்கும் பாலுக்கு, அரசு அறிவித்த நியாயமான விலையும், கால்நடைகளுக்கு தேவைப்படும் சரிவிகித கால்நடைத் தீவனமும், மத்திய அரசின் விவசாயிகள் காப்பீட்டுத் திட்டம் மற்றும் கால்நடை மருத்துவ உதவிகளை, அரசு ஆவினின் மூலம் விவசாயிகளுக்கு அளித்து சிறப்பாக செயல்படுகின்றது.

தமிழகத்தில் மேற்கூறிய செயல்பாடுகள் அனைத்தும் 9,325 கூட்டுறவு சங்கங்கள் மூலமும், 25 ஆவின் மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் மாநில கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் ஆகியவற்றால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தில் பால் உற்பத்தி 2 கோடியே 10 இலட்சம் லிட்டர் ஆகும். இவற்றில் ஆவின் கூட்டுறவு சங்கங்களினால் சுமார் 40 இலட்சம் லிட்டர் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. பால் தொழில் மூலம் ஆவினில் வருடத்திற்கு சுமார் ரூ.6,500 கோடி வரை பண பரிவர்த்தனை நடைபெறுகிறது.

இது நாளொன்றுக்கு சுமார் ரூ.17 கோடி ஆகும். இத்தொகையானது ஒவ்வொரு நாளும் தமிழக விவசாயிகளின் கையில் புழங்குகிறது. அதாவது விவசாயிகளின் வாழ்வாதாரத்தில் ஆவின் நேரடி பங்கு வகிக்கின்றது என்பது இதன் மூலம் நிரூபணம் ஆகிறது.

"அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும் " (குறள்–611)

நம்மால் முடியுமா என்று மனத்தளர்ச்சி அடையாமல் முடியும் என்ற நம்பிக்கையுடன் முயற்சி செய்தால் அதுவே பெரிய வலிமையாக அமையும் என்பதற்கேற்ப கிராமப்புற விவசாயிகளை ஊக்குவிக்கும் விதத்தில் ஆவின் செயல்பாடு திறம்பட அமைந்துள்ளது.

"ஆவின் பால் பருகுவீர்" விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றுவீர்.

ஜனவரி 23 : நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாள்

அடுத்த பிறவியில் தமிழனாக பிறக்க ஆசைப்படுகிறேன்!

1897ஆம் ஆண்டு ஜனவரி 23ஆம் தேதி ஒடிசாவிலுள்ள கட்டாக் நகரில் பிறந்தார் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ். நேதாஜியின் பெற்றோர் ஜானகிநாதர்–பிரபாவதி தம்பதியர் ஆவர். மாணவ பருவத்திலேயே இனவெறிக்கு எதிராகவும், நிறவெறிக்கு எதிராகவும் சக மாணவர்களை ஒன்று திரட்டி போராட்டம் நடத்தினார் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ். தன்னுடைய சுதந்திர போராட்டமுறை குறித்து விமர்சனம் எழுந்தபோது, புரட்சி வேறு, கலகம் வேறு என்று தெளிவுபடுத்தினார் நேதாஜி.

தன்னுடைய ஒன்பதாவது வயதில் அருகிலுள்ள கிராமத்தில் காலரா நோய் பரவியபோது நண்பர்களுடன் அங்கு சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிசெய்யும் அளவிற்கு சிறு வயதிலேயே மனிதாபிமானமும், சேவை மனப்பான்மையும் கொண்டவர். இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காக மகாத்மாகாந்தி அறவழியில் போராடிய காலத்தில், இந்திய தேசிய இராணுவம் என்னும் போராட்ட இயக்கத்தை ஆரம்பித்து ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக விடுதலை போராட்ட வீரர்களை ஒருங்கிணைத்தவர் நேதாஜி அவர்கள், புரட்சிகரமான சுதந்திர போராட்ட கொள்கைகளால் வங்கத்து சிங்கம் என்று எல்லோராலும் அழைக்கப்பட்டார். ஜெர்மனி நாட்டின் சர்வாதிகாரி ஹிட்லரையே தனது போராட்ட குணத்தினால் வியக்க வைத்து ஆங்கிலேயர்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கினார். இந்திய தேசிய இராணுவத்தில் மிகவும் அர்ப்பணிப்புடன் செயல்பட்ட தமிழர்களால் ஈர்க்கப்பட்டு அடுத்த பிறவியில் நான் ஒரு தமிழனாக பிறக்க ஆசைப்படுகிறேன் என்று கூறினார் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்.

– இமயத்தைத் தொட்ட இந்தியத் தலைவர்கள் எனும் நூலிலிருந்து...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் தலைமையில், 14.12.2020 அன்று, சென்னையில், தொழில் துறை சார்பில் நடைபெற்ற ''தொழில் வளர் தமிழ்நாடு'' வளர்ச்சி மற்றும் முதலீட்டு அமர்வில், சிப்காட் தொழிற்பூங்காக்களின் புவியியல் தகவலமைப்பிற்கான (GIS) புதிய இணையதளத்தினைத் துவக்கி வைத்தார்கள்.

தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023
& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 14.12.2020 அன்று,
பெருநகர சென்னை மாநகராட்சி இராயபுரம் மண்டலம், சேக் மேஸ்திரி தெருவில் நடைபெற்ற விழாவில்,
"முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்கை" துவக்கி வைத்து,
முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் இலச்சினையை (Logo) வெளியிட்டார்கள்.

Published by D. BASKARA PANDIAN, IAS, on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: D. BASKARA PANDIAN, IAS